பக்கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 1 திங்கட்கிழமை (15.03.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 109

# கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் தமிழீழக் கோட்பாட்டின் பிரதிபலிப்பே!

## தடுக்க அரசுக்கு 2/3 பெரும்பான்மை தேவை என்கிறார் வீரவன்ஸ



கொழும்பு, மார்ச் 15

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம், புலிகளின் உயிரிழந்த தலைவர் பிரபாகரனின் தமிழீழக் கோட்பாட்டை பிரதிபலிக்கின்றது. அதனை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான கோட்பாட்டை ஆதரிப்போரைக் கட்டுப்படுத்தும் வகையில் சட்டம் இயற்றப்பட வேண்டும். அதற்கு வசதியாக எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை மக்கள் வழங்க வேண்டும்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. சபையில் தமிழர் மனிதர் உரிமை மையத்தின் அறிக்கை

கொழும்பு, மார்ச் 15

ஜெனிவாவில் கடந்த முதலாம் திகதி முதல் நடைபெற்றுக் கொண்டிருக்கும், ஐ.நா. மனித உரிமைக் குழுவின் 13 ஆவது கூட்டத் தொடரில், தமிழர் மனிதர் உரிமைகள் மையத்தினரால் இலங்கையின் அண்மைக்கால மனித உரிமை மீறல்கள் குறித்த முக்கிய விடயங்கள் அடங்கிய அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர், ஐ.நா. செயலாளர் நாயகம், சர்வதேச மனித உரிமை இயக்கத்தலைவர் ஆகியோரின் அறிக்கைகளுடன் இலங்கையால் மேற்கொள்ளப்பட்ட போர் குற்றமும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதேவேளை,

(24ஆம் பக்கம் பார்க்க)

# சுயநிர்ணய உரிமை என்றதும் தென்னிலங்கை பயங்கரவாதம் எனக் கூச்சலிடுவது ஏன்?

## உரத்துக் கேட்கிறார் சம்பந்தன்



நாம் சுயநிர்ணய உரிமை என்றவுடன் தென்னிலங்கை மக்கள் மீண்டும் பயங்கரவாதம் எனக் கூச்சலிடுகின்றனர். அது தவறான கருத்தாகும். சுயநிர்ணய உரிமை ஒவ்வொரு இனத்திற்கும் உண்டு என்று ஐக்கிய நாடுகள் பிரகடனம் உறுதி செய்துள்ளது. மக்களுடைய மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும். இதனை ஐ.நா. சாசனம் பகிரங்கமாக அறிவித்திருக்கின்றது. ஓர் இனம் தாம் வாழுகின்ற பிரதேசத்தில் சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதை ஐ.நா.சாசனம் உறுதிப்படுத்துகின்றது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

கல்விச் சுடர்

உள்ளே

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கான கணக்கீடு மாதிரி வினாத்தாள்

நாளை

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கான அளவையியல் மாதிரி வினாத்தாள்

## 50 வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை அழைப்பதற்கு 'பவ்ரல்' அமைப்புத் திட்டம்

கொழும்பு, மார்ச் 15

நாடாளுமன்றத் தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் பணிக்கு சுமார் ஐம்பது வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை வரவழைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று 'பவ்ரல்' அமைப்புத் தெரிவித்துள்ளது.

இவ்வாறு அழைக்கப்படும் (24ஆம் பக்கம் பார்க்க)

# பொன்சேகாவின் விடுதலையை வற்புறுத்தி நாளையும் மறுதினமும் ஆர்ப்பாட்டங்கள்

## நாடு முழுவதும் நடத்த அழைப்பு

கொழும்பு, மார்ச் 15

ஜெனரல் சரத் பொன்சேகாவின் விடுதலையை வலியுறுத்தி நாளையும் நாளை மறுதினமும் இந்நாட்டு மக்கள் நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களை நடத்தவேண்டும் என்று அவரது தரப்பு சார்பில் ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நேற்றுக் கோரிக்கை விடுத்தார்.

பொன்சேகாவின் (24ஆம் பக்கம் பார்க்க)

## நிபுணர்குழு நியமிக்கும் திட்டத்தை பான் கீ - மூன் தாமதப்படுத்துவார் அல்லது மீள்பரிசீலனை செய்வார்?

### அணிசேரா நாடுகளின் அழுத்தம் காரணமாக

நியூயோர்க், மார்ச் 15

இலங்கையில் நடைபெற்ற போரின் போது மனித உரிமைகள் மீறப்பட்டதான குற்றச்சாட்டுகளுக்கு அரசு பொறுப்புக் கூறவேண்டும் என்ற விவகாரத்தில், தமக்கு ஆலோசனை வழங்குவற்கு நிபுணர்கள் குழு ஒன்றை நியமிப்பதனை ஐக்கிய நாடு

(24ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்கில் உள்ள தற்காலிக படை முகாம்களை நிரந்தரமாக்குவதற்கு அரசு ஏற்பாடுகள்?

கொழும்பு, மார்ச் 15

இராணுவத் தேவைகளின் பின்னர் கலைக்கப்பட வேண்டிய வடக்குக் கிழக்கு மற்றும் அதன் எல்லைப் பிரதேசங்களில் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாம்கள் மற்றும் பிரிவுகளை நிரந்தரமான முகாம்களாகவும் பிரிவுகளாகவும் அறிவிக்க அரசு தீர்மானித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

(24ஆம் பக்கம் பார்க்க)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி முன்னாள் ஆசிரியரும், தற்போதைய கட்டைவேலி ஞானசாரியார் கல்லூரி ஆசிரியரும், பெரியாழ்வார் ஆச்சிரமத்தின் ஆன்மீகச் சொற்பொழிவாளர்களில் ஒருவருமான

**பரஞ்சோதி செல்வநாயகம்**

M.A.DIP.IN.ED.

அதிபர் தரம் II இக்கு பதவி உயர்வு பெற்றதையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம். அவர் மென்மேலும் உயர்வுகளைப் பெற்று நல் வாழ்வு வாழ வல்லிபுர ஆழ்வாதைப் பிரார்த்திக்கின்றோம்.

வல்புரம், புலோலி. (95910) பெரியாழ்வார் ஆச்சிரமம்.

## University of Jaffna, Sri Lanka General Convocation 2010 March 26th, 27th & 28th

Graduands those who opt to obtain their degrees in person at the above convocation are requested to obtain their cloaks at the **Academic Branch** on the following dates, producing their receipt of payment for cloaks and the Student Identity Card/ National Identity Card.

| Date | Time | Degrees |
|---|---|---|
| 2010. 03.16 | 09.30 a.m.-12.00 p.m 02.00 p.m.-04.30 p.m | BA (Completed in the year 2008) |
| 2010. 03.17 | 09.30 a.m.-12.00 p.m 02.00 p.m.-04.30 p.m | |
| 2010. 03.18 | 09.30 a.m.-12.00 p.m 02.00 p.m.-04.30 p.m | BA (Completed in the year 2007,2009) |
| 2010. 03.19 | 09.30 a.m.-12.00 p.m 02.00 p.m.-04.30 p.m | BFA- Music BFA- Dance, Art & Design |
| 2010. 03.20 | 09.30 a.m.-12.00 p.m 02.00 p.m.-04.30 p.m | PhD, M Phil and Master's Degree |
| 2010. 03.21 | 09.30 a.m.-12.00 p.m 02.00 p.m.-04.30 p.m | Vavuniya Campus (Both faculties) Postgraduate Diplomas |
| 2010. 03.22 | 09.30 a.m.-12.00 p.m 02.00 p.m.-04.30 p.m | BBA B.Com,B.Sc (Agriculture) |
| 2010. 03.23 | 09.30 a.m.-12.00 p.m 02.00 p.m.-04.30 p.m | B.Sc.,BSMS MBBS |

12.03.2010 (c/565694) **Registrar**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில் 12 ★ 02 ★ 1939

ஆண்டவன் அடியில் 13 ★ 02 ★ 2010



கேதீஸ்வரனின் பாசமிகு தந்தை

**அப்புக்குட்டி கிருஸ்ணசாமி**

ஆயிரம் ஆயிரம் கதை சொல்லும்
அந்தக் கண்களை மறக்கத்தான் முடியுமா?
திரும்பி எங்களிடம் வரும் நாளை
ஆவலுடன் எதிர்பார்க்கலாமா?
என்றும் உம் நினைவுகளுடன்...

வடக்கு-கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்.

(C/565725)

## மாதர் சங்க பிரதிநிதிகளுக்கு விசேட பயிற்சிகள்

நாவற்குழி, மார்ச் 15

'விழுது' அரச சார்பற்ற நிறுவனம் இவ் வருடத்தில் யாழ்ப்பாணம், நல்லூர், வலிகாமம் கிழக்கு, கோப்பாய் பிரதேச செயலக பிரிவுகளில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு பல பயிற்சிகளை வழங்கி வருகின்றது.

கணக்கு வைப்பு முறை, கருத்திட்ட அறிக்கை தயாரித்தல், பால்நிலை தொடர்பான செயலமர்வு ஆகியவற்றை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்குப் பயிற்சிகளாக வழங்கப்படுகின்றது. கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இருபாலை கிழக்கு, புத்தூர் கிழக்கு, ஆவரங்கால் மேற்கு, அச்செழு, உரும்பிராய், செல்வபுரம், உரும்பிராய் வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் மேற்சொன்ன திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. (1-121)

## 'அமைதியின் வாக்கியங்கள்' அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ்ப்பாணம் ஜீவசக்தி சங்கத்தினர் ''அமைதியின் வாக்கியங்கள்'' என்னும் அறிமுக நிகழ்வினை எதிர்வரும் 20ஆம் திகதி நடத்தவுள்ளனர்.

சாவகச்சேரி சிவன்கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்றத்தில் நடைபெறும் இந் நிகழ்வில் ஜீவசக்தி சங்கப் பிரமுகர் பிரேம்ராவத் கருத்துரை வழங்குவார். (1-207)

## கச்சாயில் நீர் வற்றியதால் 100 குடும்பங்கள் தொழில் இழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 15

சாவகச்சேரி - கச்சாய் கடலேரியில் திடீரென நீர் வற்றியது. இதனால் கடலேரியில் தொழில் புரிந்த 100இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தொழில்களை இழந்துள்ளனர்.

தொழில்களில் ஈடுபட்ட படகுகளும், கட்டுமரங்களும் நீரற்ற பகுதியில் காணப்படுகின்றன.

கடலேரிப்பகுதியை ஆழமாக்கித்தருமாறு உரிய அதிகாரிகளைக் கோரியுள்ள தாகப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர். (1-207)

## மீசாலை விக்னேஸ்வராவில் சாயி பஜனை நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 15

மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் மாதாந்தம் பௌர்ணமி தினத்துக்கு முதல்நாள் காலை 8 மணி தொடக்கம் 9 மணிவரை சாஜி பஜனை நடத்தப்படவுள்ளது.

முதலாவது பஜனை எதிர்வரும் 29ஆம் திகதி பங்குனி உத்தர தினத்தன்று ஆரம்பித்து வைக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் பி.ப. 4 மணிக்கு மீசாலை வடக்கு வேம்பிராயில் உள்ள நந்தகுமாரன் நாகநந்தினி ஆசிரியரின் இல்லத்தில் சாயி பஜனை இடம்பெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (1-207)




Diploma in Information Technology
University of Colombo
3 Pass A' Levels? → Register for DIT
No Pass A' Levels? → Foundation In Information Technology
Government staff, Teachers!
Get the incentives! Assure your Promotions!!
Diploma மாணவர்களுக்கு மேலதிக கட்டணம் இன்றி MCTS,MCP(USA),A+,N+,ICDL,Sun Java தகைமைகள்
கொழும்பு பல்கலைக்கழகத்திடமிருந்து சிறப்பு விருது பெற்ற நிறுவனம்
MCS 324,Palaly Road,Parameswara Junction Web site : Http://www.mcsitcampus.org Call 772395895


## மரண அறிவித்தல்கள்

### சின்னையா தேவராஜா

(ஓய்வு பெற்ற அதிபர், யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்)

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா தேவராஜா அவர்கள் நேற்று (14.03.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் ஜெபபாக்கியத்தின் (இளைப்பாறிய ஆசிரியை, யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை, பருத்தித்துறை) பாசமிகு கணவரும், தேவராணி (UK), நல்லராணி (UK) ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வரட்ணம், லேனா, புனிதம், அருட்திரு. போல்பெஞ்ஜமின், சரோஜா (USA), அமரர்களான லியனகே, சலோமி, போல் ஜேக்கப் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

'பெத்தேல்', பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை, பருத்தித்துறை.

தகவல்: திருமதி ஜெபபாக்கியம் (மனைவி).

### LATE MR.CHINNIAH THEVARAJAH

(Retired Principal, Velautham Maha Vidyalayam, Point Pedro)

**The Death is Announced of Chinniah Thevarajah (Former Principal, Velautham Maha Vidyalayam, Point Pedro) beloved husbance of Jebapackiam (Retired Teacher, Methodist Girl's High School, Point Pedro), loving Brother of Thevaranee (UK), Nallaranee (UK), brother in law of Selvaratnam (UK), late liyanege (UK), late Salome, Lena Late Paul.Jacob, Punitham, Rev.Paul Benjamin, Sarojah (USA).**

**Funeral arrangements will be notified later.**

"Bethel", Old Post Office Lane, Point Pedro.

Mrs. Jebapackiyam Thevarajah, (Informant)

### திருமதி குமாரு மீனாட்சி

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் முடக்காடு ஒழுங்கை அல்வாய் தெற்கு, அல்வாயை (நெல்லியடி கிழக்கு) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குமாரு மீனாட்சி 12.03.2010 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.03.2010) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முடக்காடு ஒழுங்கை, அல்வாய் தெற்கு, அல்வாய்.

தகவல்: செ.ஸ்ரீநிவாசன் (மருமகன், பிரதேச செயலர், தென்மராட்சி)


Hurry up ! Hurry up!!
UNBELIEVABLE PRICES @ MUSIC WORLD
நம்ப முடியாத விலைகளில்...

| | | |
|---|---|---|
| MWC OFF I Rs.39,500/= Intel 2.6GHZ Dual Core, Intel Esonic G31 Motherboard, Harddisk 40 GB Sata, Ram 1GB 800 DDR-II, ATX Casing 500W, DVD Writer, 16" LCD Monitor, Multi Media Keyboard, Optical Mouse, Multi Media Speaker. Free issues: Headphone, Card Reader, Pen Drive | MWC OFF II Rs.43,500/= Intel 2.7GHZ Dual Core, Intel AsRock G31 Motherboard, Harddisk 160GB Sata, Ram 1GB 800 DDR-II, ATX Casing 500W, Sony DVD Writer, 16" LCD Monitor, Multi Media Keyboard, Optical Mouse, Multi Media Speaker. Free issues: Headphone, Card Reader, Web Camera | ADSL Routers: TP Link ADSL 1 port Router 3,700.00; TP Link ADSL 2 port Router 3,800.00; TP Link ADSL 4 port Router 5,750.00 |
| MWC OFF III Rs.53,500/= Intel 2.7 GHZ Dual Core, Intel Foxconn G31 Motherboard, Harddisk 320 GB Sata, Ram 1GB 800 DDR-II, ATX Casing 500W, DVD Writer SONY 24x, 19" LCD Monitor, Multi Media Keyboard, Optical Mouse, Multi Media Speaker, UPS 650 W. Free issues: Computer Table, Web Camera, Card Reader, Pen Drive | MWC OFF IV Rs.59,900/= Intel 2.7 GHZ Dual Core, Intel G31 Motherboard, Harddisk 320 GB Sata, Ram 2 GB 800 DDR-II, ATX Casing 500W, DVD Writer SONY 24x, 19" LCD Monitor, Multi Media Keyboard, Optical Mouse, Multi Media Speaker, UPS 650 W. Free issues: Computer Table, Computer Chair, Web Camera, Card Reader | Dongle: HSDPA Modem (SIM Model) 3.G D Link / Prolink (3.5 M ---> 7.2 M) 8,750.00; PAP2 LinkSYS: PAP 2 Link SYS (No.1 Green Light) 7,500.00; Web Cameras: AD Tech Web Camera 1,500.00; Web Camera (Normal) 950.00 |

விரையுங்கள் இச் சலுகை கையிருப்பு உள்ள வரை மட்டுமே
MasterCard VISA கடனட்டைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.
MUSIC WORLD & COMPUTERS 141B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி.
musiccom27@yahoo.com / musicworld@sltnet.lk - 021 222 6554


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## வரவு - செலவுத் திட்டம் இன்றியே அரையாண்டைக் கடக்கும் நிலைமை

ஒரு நாட்டின் பொருளாதாரப் போக்கைத் தீர்மானிக்கும் கொள்கைப் பிரகடனமாக அமைவது வருடாந்தம் சமர்ப்பிக்கப்படும் வரவு - செலவுத்திட்டம்தான்.

ஒரு புறத்தில் பொருளாதாரம், நிதி முகாமைத்துவம், செலவினம் ஆகியவை தொடர்பில் அரசின் கொள்கைப் போக்கை அந்த வரவு - செலவுத்திட்டம் வெளிப்படுத்தும் அதேசமயம், மறுபுறத்தில் நாட்டின் செலவினங்கள் யாவற்றையும் சட்ட ரீதியாக நெறிமுறைப்படுத்தி, ஒழுங்குபடுத்தும் செயற்போக்காகவும் அந்த வரவு - செலவுத் திட்ட நடைமுறை அமைவது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே சிதைந்து, சீரழிந்து, அதல பாதாளத்தில் வீழ்ந்து கிடக்கும் இலங்கையின் பொருளாதாரம் குறித்து பல தரப்புகளிலும் அதீத கவலை வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது.

அதேசமயம், மறுபுறத்தில் அரசின் செலவினத் திட்டப் போக்கில் உள்ள ஒட்டை, கட்டுப்பாடின்மை, பொறுப்புக் கூறும் கடப்பாடின்மை, வெளிப்படையான தன்மை இல்லாதமை ஆகியவை காரணமாக நாட்டில் ஊழல், மோசடி, லஞ்சம், நிர்வாகச் சீர்கேடு, வீண் விரயம் ஆகியவை தாராளமாக மலிந்து, நாடு கெட்டுக் குட்டிச்சுவராகி, பொருளாதாரப் பிரச்சினைகளுக்குள் மூழ்கி அடிபட்டுப் படுத்துவிடும் என் று பொருளாதார நிபுணர்கள் அஞ்சுகின்றனர்.

இந்தச் சீத்துவத்தில் நடப்பு ஆண்டுக்கான உத்தேச வரவு - செலவுத் திட்டத்தைக் கூட சமர்ப்பிக்காமல் இந்த ஆண்டின் அரைவாசிக் காலத்தை நாடு தாண்டவேண்டியிருக்கிறது என்று அபாயச்சங்கு இப்போது ஒலிக்கப்படும் சூழல் ஏற்பட்டிருக்கின்றது.

இந்த வருட முற்பகுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த முற்கூட்டியே உத்தேசித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அதனைத் தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தலும் முற்கூட்டியே - சில மாதங்கள் முன்னதாகவே - நடத்தப்படும் என்றும் கோடிட்டுக்காட்டினார்.

2010 ஆம் ஆண்டின் முற்பகுதியில் புதிய பொதுத் தேர்தலுக்கு அறிவித்தல் விடுத்து, அதைத் தாம் நடத்தவுள்ளதால், அந்தப் பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சிக்கு வரும் புதிய அரசே 2010 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தைத் தீர்மானிக்க வேண்டும் என்றும், அதற்கு வசதியாக அத்திட்டத்தை அப்போது ஆட்சியில் இருக்கும் அரசு சமர்ப்பிக்காது என்றும் கடந்த ஆண்டு இறுதியில் அரசுத் தலைவர் தரப்பில் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதன் காரணமாகக் கடந்த நவம்பர் மாதம் தற்போதைய அரசினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவேண்டிய - 2010 ஆம் ஆண்டுக்கான - வரவு -செலவுத் திட்டம் அப்போது சமர்ப்பிக்கப்படாமல் போயிற்று. அதற்குப் பதிலாக நாடாளுமன்றத்தில் ஓர் உத்தேச இடைக்கால ஏற்பாட்டு ஒழுங்கு - ஒதுக்கீடு - மட்டும் அப்போது சமர்ப்பிக்கப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலையும், பொதுத் தேர்தலையும் காட்டி 2010 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் அச்சமயம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாமல் போயிற்று.

இப்போது ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்து விட்டது. பொதுத் தேர்தல் திருவிழா நடந்துகொண்டிருக்கின்றது.

எதிர்வரும் ஏப்ரல் 8ஆம் திகதி பொதுத் தேர்தல் நடந்து, புதிய அரசு தேர்ந்தெடுக்கப்பட்டு, அது பதவியேற்று, அதன் பின்னர் அந்த அரசு நடப்பு ஆண்டின் வரவு - செலவுத் திட்ட விவகாரங்களை ஆராய்ந்து, கொள்கைகளை வகுத்து, வரவு - செலவுத் திட்டத்தை இறுதி செய்து, அதைப் பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து, அதன் மீது குழுநிலையில் விவாதம் நடத்தி, அதன் மீதான மூன்று நிலை வாசிப்புகளையும் நடத்தி முடித்து, புதிய வரவு - செலவுத் திட்டம் நடைமுறைக்கு வரும்போது ஜூன் மாதம் கடந்து விடும் என நாடாளுமன்ற அலுவலக வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

ஆக, இந்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டம் இந்த வருடத்தின் முதல் அரை ஆண்டு தாண்டிய பின்னர்தான் நடைமுறைக்கு வரப்போகின்றது என்பது பெரும்பாலும் நிச்சயமாகிவிட்டது.

வழமையாக நடப்பு ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் முந்திய ஆண்டு நவம்பரில் சமர்ப்பிக்கப்பட்டு டிசம்பருக்குள் - புதிய ஆண்டு பிறப்பதற்குள் - நிறைவேற்றப்பட்டுவிடும். இம்முறை நடப்பு ஆண்டில் ஆறு மாதம் கழிந்த பின்னர்தான் அது நிறைவேறும் வாய்ப்பு இருப்பதால், அதுவரை இந்த இடைக்கால ஏற்பாடு என்ற பெயரில் நாட்டின் நிதிச் சக்கரம் தன்பாட்டில் ஓடப் போகின்றது.

அதிலும் கூட, தற்போதைய நாடாளுமன்றம் இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களுக்கான இடைக்கால ஏற்பாட்டுக்கே நிதி அனுமதியை வழங்கியிருந்தது. அந்தத் தொகை கூட முதல் மூன்று மாதங்களுக்கு முன்னரே முடிவடைந்து விட்டதால், பல துறைகளுக்கும் மேலதிக இடைக்கால ஒதுக்கீட்டை நிதி அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே தமக்குள்ள அதிகாரத்தைப் பிரயோகித்து வழங்கி வருகின்றார் என்றும் கூறப்படுகின்றது.

இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கு மட்டுமல்லாமல், அது தாண்டி அடுத்த இரு மாதங்களுக்கு - அதுவும் புதிய வரவு - செலவுத் திட்டம் நிறைவேறும் வரை இந்த இடைக்கால ஏற்பாடு தொடரப் போகின்றது.

நாட்டின் வரவு - செலவைக் கனகச்சிதமாகத் திட்டமிட்டு, அதன்படி நாட்டை மேம்படுத்தும் ஒரு மேன்மையான கொள்கைத் திட்டம் ஆட்சித் தரப்புக்கு இல்லாத போது, வரவு - செலவுத் திட்டம் குறித்து அது ஏன் அலட்டிக்கொள்ளப் போகின்றது? திட்டமில்லாமல் செலவிட்டு நாட்டைக் கெடுக்கும் அதிகாரவர்க்கத்துக்கு இதுபற்றி எல்லாம் ஏது கவலை?

# குற்றப் பத்திரிகையை ஏற்க மறுத்து விட்டார் பொன்சேகா

**நேற்று 14.03.2010 அன்று சண்டேரைம்ஸ் பத்திரிகை எழுதியிருந்த அரசியல் விமர்சனத்திலிருந்து ஒரு பகுதி**

சென்றவாரம் வியாழக்கிழமையன்று ஓய்வுபெற்ற ஜெனரல் சரத் பொன்சேகாவை சந்தித்துப்பேச ஒருவர் வந்தார். சரத் அடைத்து வைக்கப்பட்டுள்ள கடற்படை தலைமையகத்தில் பலத்த காவலில் உள்ள இணைப்புப் பகுதியில் இது நடந்தது.

இராணுவத் தரப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கிரிசாந்த சில்வா அங்கு வந்திருந்தார்.

பொது இராணுவ நீதிமன்ற விசாரணையை பொன்சேகா எதிர்கொள்ளவிருக்கிறார் என்ற செய்தியை அதிகாரப்பூர்வமாக அவருக்கு வழங்குவதற்காவே ஜெனரல் சில்வா வந்திருந்தார்.

### குற்றப்பத்திரிகை ஆவணங்கள்

அத்துடன் சில ஆவணங்களையும் அவர் வழங்க வந்திருந்தார். அதில் பின்வரும் அம்சங்கள் அடங்கியிருந்தன:

1. கடற்படை தலைமையகத்தின் விடுதி அறையில் ஜெனரலுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காக பொது ராணுவ நீதிமன்றம் அமர்ந்து செயல்படுவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் முப்படை களின் பிரதம தளபதி என்ற வகை யிலான அழைப்பு ஆணை. இந்த நீதிமன்றம் மார்ச்16 மற்றும் 17 ஆம் திகதிகளில் தன் அமர்வுகளை மேற்கொள்ளும். மன்றத்தின் தலைவர் மற்றும் இரு விசாரணையாளர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவர்கள் அனைவரும் மேஜர் ஜெனரல்கள்.இதில் ''காத்திருக்கும் உறுப்பினர்கள்'' என்ற வகையில் மேலும் நான்கு பேரின் பெயர்களும் அடங்கி யிருந்தன.

2.குற்றப்பத்திரிகை-1- மூன்று குற்றச்சாட்டுக்களை கொண்டிருந் தது.

3.குற்றப்பத்திரிகை -2- இரண்டு குற்றச்சாட்டுக்களை கொண்டிருந்தது.

4.கடற்படை தலைமையகத்தின் விடுதி அறையில் பிரதம ராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் தயாரட்னாயக்காவால் பதிவு செய்யப்பட்ட '' சாட்சியங்களின் சுருக்கம்'' தொடர் பான சாராம்சம்.

இவை ஆவணங்களில் அடங்கியிருந்தன. இவைகளை ஏற்றுக் கொள்வதற்கு முன்னாள் ராணுவ ஜெனரலை இணங்கச் செய்வதற்கு மேஜர் ஜெனரல் கிரிசாந்த சில்வா முயன்று கொண்டிருக்கையில் ஒரு சிப்பாயின் வீடியோ கமரா செயல்படத் தொடங்கியது. முன்னாள் இராணுவ ஜெனரல் ராணுவ நீதி மன்றத்தின் முன் ஆஜராகும்படி அறிவுறுத்தப்பட்டார் என்பதற்கான ஏதாகிலும் ஆதாரம் இருக்க வேண்டும் என்பதாக உயர் இராணுவ அதிகாரிகள் விரும்பியிருந்தார்கள் என்று இது காட்டியது.

இதற்கு பொன்சேகா அளித்த பிரதிபலிப்பு ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் இருந்தது.

### ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்

சட்டப்படி நான் கைது செய்யப்பட்டிருக்கவில்லை என்று ஆங்கிலத்தில் கூறிவிட்டு "மம மேக்க பாரகன்னே நெஹ" ( நான் இதை ஏற்றுக் கொள்ளவில்லை) என்று சிங்களத் திலும் கூறினார்.

மேஜர் ஜெனரல் சில்வா ஆவணப் பத்திரங்களைக் கையில் வைத் துக் கொண்டு அங்கிருந்து வெளியேறினார்.

சிரேஷ்ட ராணுவ அதிகாரிகள், சட்டமா அதிகாரிகள் மற்றும் அரச அதிகாரிகளின் நீண்ட கலந்துரையாடல்களின் பின்னர் பொது ராணுவ நீதிவான்கள் கூடுவதற்கான கட்டளையில் ஜனாதிபதி மகிந்தராஜ பக்ஷ கையெழுத்திட்டார்.

ராணுவ நீதிமன்றத்தின் தலைவராக மேஜர் ஜெனரல் ஹர்ஷா வீரத்துங்க இருப்பார். ராணுவத் தலைமையகத்தின் நிதித்துறை பணிப்பாளர் நாயகமாக அவர் இருந்து வருகிறார். ஏனைய உறுப்பினர்கள் ராணுவ தலைமையகத்தின் குவாட்டர் மாஸ்டர் ஜெனரல் மேஜர் ஜெனரல் லலித் விஜேதுங்க, இலங்கை ராணுவ தொண்டர் படையணியின் கொமாண்டண்ட் மேஜர் ஜெனரல் அருணா ஜயதிலக்க ஆகியவர்களாவர்.

முப்படை அதிகாரிகளைக் கொண்ட ராணுவ நீதிமன்றம் அமைப்பது தொடர்பான முந்தைய யோசனை கைவிடப்பட்டு விட்டதாக மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க கடந்த வியாழக்கிழமை நடந்த பத்திரிகையாளர் கூட்டத்தில் அறிவித்தார். இராணுவச் சட்டத் தில் அதற்கான அதிகாரப் பிரிவுகள் இல்லையென்ற சட்டவல்லுநர்கள் சுட்டிக் காட்டியதே இதற்குக் காரணம்.

## தலைசிறந்த சட்டத்தரணிகள் அவர் சார்பில் ஆஜராகி வாதிடுவர்

கடற்படை, விமானப்படை சட்டங்களில் இதற்கான பிரிவுகள் உண்டு என்று அவர்கள் சுட்டிக் காட் டியுள்ளனர்.

நீதிமன்ற அழைப்பாணையில் றியர்அட்மிரல்சுமிந்திராபெர்ணாண்டோ, நீதிவான் சட்டவாதியாக (Judge Advocate) குறிப்பிடப்பட்டுள்ளார். அவர் கடற்படையில் தொண்டர் அணியில் ஓர் அதிகாரியாக இருக்கிறார். சட்டமா அதிபர் திணைக்களத்துடன் இணைப்பில் உள்ளவர்.

குற்றச்சாட்டுகள் தொடர்பான சட்ட பிரச்சினைகள் பற்றி நீதிமன்றுக்கு ஆலோசனை கூறுவது இவர் கடமை. விசாரணைநடை முறைக ளில் முறை கேடுகள் இடம்பெறும் வேளைகளில் மன்றின் கவனத்துக்குக் கொண்டு வருவது இவரது இன் னொரு கடமை. சம்பந்தப்பட்ட விடயங்களில் சாட்சிகளை அவரால் கேள்வி கேட்கமுடியும். மன்று தேவையென்று கருதுமிடத்து சாட்சியங்களை அவர் தொகுத்தளிப்பார். மேலும் வழக்குத் தொடர் பான சட்ட விடயங்கள் பற்றி ஆலோ சனைகளும் வழங்குவார்.

## குற்றங்கள் நிரூபிக்கப்படுமானால் நட்சத்திரப் பட்டங்கள் பறிபோகும்

நாளை செவ்வாய்க்கிழமை பொது ராணுவ நீதிமன்றம் கூடும் போது ஜெனரல் பொன்சேகாவுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் பற்றி முதலில் விசாரிக்கத் தொடங்கும். புதன் கிழமையன்று குற்றப் பத்திரிகை 2- இல் உள்ள குற்றச்சாட்டுக்களை விசா ரிக்கத் தொடங்கும்.

ஓய்வுபெற்ற ராணுவ ஜெனரல் ராணுவ நீதிமன்ற விசாரணைகளுக்கு வருகைதரமாட்டார் என்ற விடயம் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட போது ஜே.வி.பியின் அனுர குமார திஸாநாயக -ஜனாதிபதி தேர்தலின் போது ஜெனரல் பொன்சேகாவின் பேச்சாளராகவும் இருந்தவர் பின் வருமாறு கூறினார்:

சட்டவல்லுநர் தன் ஓய்வு பெற்ற இராணுவத் தளபதியின் சார்பில் நீதிமன்றில் தோன்றுவார்கள்.

### சட்டவிரோதமான விசாரணை

அவருக்கு கனிஷ்ட தரத்தில் உள்ள அதிகாரிகளைக் கொண்ட ஓர் ஆயத்தினால் முன்னாள் ராணுவத் தளபதி விசாரிக்கப்படுவதற்கான சட்டத்தகைமை பற்றி கேள்வி எழுப்புவார்கள். ராணுவ நீதிமன்றத் தின் முன் அவரை நிறுத்துவதற்கான அம்சம் எதுவும் இராணுவச் சட்டத்தில் கிடையாது. இந்த விசாரணை சட்ட விரோதமானது. எனவே இந்த விசாரணைகளுக்கு அவர் ஆஜராகமாட்டார். இவ்வாறு அவர் கூறினார். ஜெனரல் பொன்சேகா விசாரணைகளுக்கு வருகை தராமல் இருப்பதனால் இராணுவ நீதிமன்ற விசாரணை தடைப்படப் போவதில்லை. ஒலிபெருக்கியை அவர் இருக்கும் இணைப்புப் பகுதியில் பொருத்துவதன் மூலம் விசாரணைகளை அவர் கவனிக்கும்படி செய்வதற்கு அதிகாரிகள் முயலக் கூடும். மேலும் செவ்வாய்க் கிழமை மேஜர் ஜெனரல் ஒருவர் அவரிடம் சென்று விசாரணைகள் நடைபெறும் அறைக்கு பாதுகாப்புடன் அழைத்துச் செல்ல முயல்வார். அவர் மறுக்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரி நீதிமன்றுக்கு அவா மறுத்து விட்டதுபற்றி அறிவிப்பார். அதன் பின்னர் எதிரி இல்லாத நிலையிலேயே விசாரணைகள் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### ஏனைய குற்றச்சாட்டுக்கள்

ஓய்வுபெற்ற ராணுவத் தளபதி மீதான வேறு' சில பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் பற்றி விசாரணைகள் இன்னமும் முடிவுறாமலேயே இருக்கின்றன. இந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகள் ராணுவ நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டா என்று தெரிகிறது. புலனாய்வுகள் முடிவுற்றதும் சிவில் நீதிமன்றத்தில் இக் குற்றச்சாட்டுக்களை தாக்கல் செய்யலாம் என சட்ட வல்லுநர்கள் கருதுவதாகத் தெரிகிறது.

அரசாங்கத்தைக் கவிழ்ப்பது மற்றும் ஜனாதிபதி ராஜபக்ஷவை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியது போன்ற குற்றச்சாட்டுக்களாகும் இவை.

### பொன்சேகா சார்பில் சட்டத் தரணிகள் தோன்றுவர்

செவ்வாய்,புதன் கிழமைகளில் நடைபெறவிருக்கும் ராணுவநீதிமன்ற விசாரணைகள் அன்றைய தினங்களிலேயே முடிவுறும் என்று சொல்ல முடியாது. ஓய்வுபெற்ற ராணுவ ஜெனரலின் ஆதரவாளர்கள் ஜனாதிபதி சட்டத்தரணி தயா பெரெவன் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முயன்று வருகின்றார். இவர் கடந்த வருடம் வரை கனடாவில் இலங்கையின் உயர்ஸ்தானிகராகப் பதவி வகித்தவர்.

செவ்வாய், புதன்கிழமைகளில் இராணுவ நீதிமன்ற விசாரணைகளை ஆரம்பிக்கும் போது பொன்சேகாவின் சட்டத்தரணிகள் அவர் கைது செய்யப்பட்டமையும் நீதிமன்ற உள்ளடக்கமும் சட்ட விரோ தமான வழக்குகள் என்பது தொடர் பான ஆட்சேபனைகளைக் கிளப்பி ஆணித்தரமாக வாதிடுவார்கள் என்று கருதப்படுகின்றது. இந்த அடிப்படையிலேயே பொன்சேகா விசாரணைக்கு முகம் கொடுக்க மறப்புத் தெரிவித்து வருகின்றார்.

### நட்சத்திரப் பட்டங்கள் பறக்கவிடுவோம்

பொன்சேகாவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களின் மீது அவர் குற்றவாளியாகக் காணப்படுவாரானால் அவரது இராணுவத் தராதரம் குறைக்கப்பட்டு விடும். அதாவது அவரது இராணுவ நட்சத்திர பட்டங்கள் அபகரிக்கப்படலாம். RWP (ரண விக்கிரம பதக்கம்), RSP(ரணசூர பதக்கம்) மற்றும் VSV (விஷிஸ்ட சேவா விபூஷணய) போன்ற நட்சத்திரப் பட்டங்களை அவர் இழப்பார். ஏறத்தாழ ஒரு வருடத் திற்கு முன்பு வரை அவரை மாபெரும் இராணுவ வீரராகப்புகழ்ந்தார்கள். 'ஆனால் அவரது குற்றச்சாட்டுக்கள் நிரூபண மானால் அவர் ஒரு சாதாரண மனிதராக இருக்க முடியாது. ஒரு குற்ற வாளியாகவே கணிக்கப்படுவார்.

உலகிலேயே மிகச் சிறந்த ராணுவத் தளபதி என்று ஓங்கிப் புகழப்பட்ட ஒரு மனிதனின் இவ்வாறுதான் அமையப்போகின்றது. (ப)

## நாளை

| | |
|---|---|
| பங்குனி 02 | 16 .03.2010 செவ்வாய்க்கிழமை |
| திதி: | பிரதமை பி.இ. 04.15 வரை |
| நட்சத்திரம்: | பூரட்டாதி கா. 07.01 வரை |
| சுபநேரம்: | 10.50-12.20 வரை |
| ராகுகாலம்: | 03.20-04.50 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ALLIANCE FRANCAISE DE JAFFNA
61, Kachcheri-Nallur Road, Jaffna.
Phone: 0212228093,
E.mail: alliancejaffna@yahoo.com

**Learn French the French Way**
**French Classes**

சர்வதேச மொழியான French மொழி வகுப்புகள் French Embassy இன் அனுசரணையுடன் பிரஞ்சு கலாசார மையத்தின் ஊடாகக் கற்பிக்கப்படுகின்றது.

பிரெஞ்சு தூதரகம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரே ஒரு கலாசார, பிரெஞ்சு மொழி பயிலுவதற்கான ALLIANCE FRANCAISE ஒரு மையமாகும்.

தொடர்ச்சியான கற்கைகளை மேற்கொள்வதன் மூலம் உள்ளகப் பரீட்சைக்கும் மேலும் ஐரோப்பிய டிப்ளோமா பரீட்சையான DELF பரீட்சைக்கும் தோற்ற முடியும்.
விரிவுரையாளர்கள்: பிரான்ஸியரும், பிரெஞ்சில் தகைமை பெற்றோர்களும்.

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.



## கொக்குவில் இந்துக் கல்லூரி நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்படும் பெரும் விளையாட்டுப் போட்டிகள்

**போட்டிகள் விபரம்**

| | |
|---|---|
| 15வயதின் கீழ் பிரிவு. | வலைப்பந்தாட்டம் |
| 19வயதின் கீழ் பிரிவு. | கூடைப்பந்து (ஆண்,பெண்) |
| | கிரிக்கெற் (ஆண்) ரி 20 |
| | உதைபந்து (ஆண்) |
| | எல்லே (ஆண்,பெண்) |
| | கரம் (ஆண்,பெண்) |
| | கரபந்து (ஆண்) |
| | சதுரங்கம் (தனி) (ஆண்,பெண்) |

விண்ணப்ப முடிவுத்திகதி.25.03.2010
★விண்ணப்பப்படிவங்களை கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம்.

அதிபர்,
நூற்றாண்டு விழாக் குழு, கொக்குவில் இந்துக்கல்லூரி.


## முதலாம் ஆண்டு நினைவுகளும் 33 ஆவது பிறந்த தினமும்

தோற்றம் 25 ★ 03 ★ 1977



மறைவு 26 ★ 03 ★ 2009

**திருமதி அஜந்தா அபராஜிதன்**
(கிராம சேவையாளர், பளை)

அந்தி மஞ்சள் வானம்
செந்தீயில் கருகிட
நெஞ்சு பிளந்து நினைவிழந்து
போனோமம்மா!
கானிலாவைத்தந்த வானமே
கருமிருளில் மறைந்ததேனோ?
அபயம் தந்தவரை
அந்தரிக்க விட்டதேனோ-
மீண்டும் பிறந்து வா எங்கள்
குல விளக்காக

தற்காலிக முகவரி (95900) குடும்பத்தினர்.
மிசாலை கிழக்கு, மிசாலை. புலோப்பளை மேற்கு, பளை.

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்

உதயம் 17 ★ 01 ★ 1983



அஸ்தமனம் 18 ★ 03 ★ 2007

**அமரர் துரைராஜா பாஸ்கரன்**
(திதி : அமாவாசை)

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உம் நினைவுகள் எமை விட்டகலாது
ஆசைக்கொரு மகள் அப்பா என்று
அழைக்கின்றாள் ஒரு கணம் வந்து
பதில் கூறுவீரோ!

புங்கன்குளம் வீதி,
அரியாலை. (95900) மனைவி, மகள்.

## காரைநகர் -காவலூர் பாதைப்படகுச் சேவை சீர்

யாழ்ப்பாணம், மார்ச் 15

காரைநகருக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையில் கடல் போக்குவரத்தில் ஈடுபட்டு வரும் பாதைப்படகு 'பெரி' திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இந்தப் 'பெரி' அண்மையில் பழுதடைந்ததை அடுத்து போக்குவரத்துப் பாதிக்கப்பட்டிருந்தது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உதவியுடன் இந்தப் படகு திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

தற்போது கடற்பாதைப் போக்குவரத்து சீராக இடம்பெற்று வருவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஒ-224)


### தேவை

கல்பேட் 1 Kg 350/= வுக்கும் ஊர்ச்சேவல் 450/= வுக்கும் கொள்வனவு செய்யப்படும்.
158/4, தாசன் பாம், கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

அரச அலுவலரின் ஒருகைப் பயன்பாட்டில் நல்ல நிலையில் உள்ள BAJAH BOXER - DOUBLE SHEET மோட்டார்சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு - 0770710729

### வேலையாள் தேவை

129c, கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள ரயர் கடையில் வேலை செய்வதற்கு அனுபவம் உள்ள வேலை ஆள் தேவை. நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். து.தவம் (உரிமையாளர்),
வசந்தவம் ரயர் வேக்ஸ்,
யாழ்ப்பாணம். தொ.பே. ௨௨௨ 108௨

### புறோயிலர் கோழி விற்பனை

புறோயிலர் இறைச்சிக் கோழி குறைந்த விலையில் மொத்தமாக விற்பனைக்குண்டு
K.ராஜேந்திரன்,
கரணவாய். தொ.பே. 0212264439

### KANDY AQUARIUM
### கண்டி அக்கூறியம்

கண்டியில் இருந்து எடுத்துவரப்பட்ட பல வர்ண பூக்கன்றுகள் மிகவும் மலிவு விலையில் இன்று காலை 11 மணி தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம்.

| | மொத்த விலை (25 கன்றுகளுக்கு மேல்) | சில்லறை விலை |
|---|---|---|
| ரோசா | 75.00 | 90.00 |
| பேபிரோசா | 50.00 | 65.00 |
| கப்புறு | 50.00 | 65.00 |
| சுப்பர்டெய்சி | 50.00 | 75.00 |

(இதனைத் தவிர வேறு கன்றுகளும் மலிவு விலையில்)
100 கன்றுகளுக்கு மேல் எடுப்பவர்களுக்கு உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து தரப்படும். குறிப்பிட்ட அளவு கன்றுகளே உள்ளதால் முந்துங்கள்.
81, கண்டி வீதி,
(பழைய பூங்கா வீதி நேர்முன்பாக), யாழ்ப்பாணம்.
0714624433 - யாழ்ப்பாணம்
0715218078 - கண்டி


## கணனி அன்பளிப்பு


யாழ்ப்பாணம், மார்ச் 15

காரைநகர் ஊரி அ.மி.த.க. பாடசாலைக்கு முன்னாள் அமைச்சர் அமரர் இ.மகேஸ்வரனின் துணைவியார் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கணனி ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

பாடசாலை சமூகம் விடுத்த கோரிக்கையை அடுத்து மகேஸ்வரன் ஞாபகார்த்தமாக பாடசாலை அதிபர் இ.சிறிதரனிடம் கடந்த வெள்ளிக்கிழமை திருமதி விஜயகலா மகேஸ்வரன் கணனியைக் கையளித்தார்.

(ஓ-250)


## புதிய மொடல் சிக்கன காஸ் குக்கர் அறிமுகப்படுத்துகின்றோம்



40% (Gas) காஸ் பாவனையைக் குறைக்கக் கூடியது Eccomate - Eco - 303 காஸ் குக்கர் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
★ மொத்த வியாபாரிகளுக்கு விஷேட விலைக் கழிவு உண்டு.

யாழ்.மாவட்ட விநியோகஸ்தர்கள்
டாட் என்ரபிரைஸ்,
11,12, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.
T.P: 021 222 3098, 7622


## 33 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

**சதாசிவம் தில்லைநாதன்**



மலர்வு 12.02.1952 உதிர்வு 11.02.2010

உள்ளத்தால் உயர்வாகி - எம்
வாழ்விற்கு வழிகாட்டி
இதயத்தில் இருக்கும்
எங்கள் உயிரே
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும்
பிரார்த்திக்கின்றோம்.

இன்று (15.03.2010) திங்கட்கிழமை எமது இல்லத்தில் மு.ப. 10 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றரர், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். குடும்பத்தினர்.
(95909)

## மரண அறிவித்தல்

*திருமதி பரமேஸ்வரி நித்தியானந்தன்*



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி நித்தியானந்தன் நேற்று (14.03.2010) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நித்தியானந்தனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மாணிக்கம் - சின்னப்பிள்ளை தம்பதியினரின் கனிஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான சிவகுரு - இராசபூரணம் தம்பதியினரின் மருமகளும் நித்தியகலா, கமலேந்திரன், கலாராணி, விமலராணி, ஸ்ரீமோகன் ஆகியோரின் அருமைத்தாயாரும் இந்திரநாதன் சத்தியதாசன், ஜெயகாந்தன் (தபால் அலுவலகம், யாழ்ப்பாணம்), சந்திரவதனி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு, முத்துக்குமாரு, அன்னபூரணம், சிவசுப்பிரமணியம், தெய்வேந்திரம், இராசரத்தினம் மற்றும் சிவபாதம் ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (15.03.2010) திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

GPS றோட்,
கல்வியங்காடு. (சி/565724) தகவல்: குடும்பத்தினர்.


## VACANCIES

யாழ்.முன்னணி கல்வி நிறுவனத்துக்கு பின்வரும் பதவி நிலைகளுக்கு இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- Full time Lecturer - (Spoken English)
- Part time Lecturer - (Spoken English)
- வரவேற்பாளர் (Receptionist)
- சந்தைப்படுத்தல் முகாமையாளர்



மேற்குறித்த பதவிகளில் பணியாற்ற விரும்புபவர்கள் தங்கள் சுயவிபரக்கோவையை (Bio Data) 7 நாட்களுக்குள் அனுப்பிவைக்கவும்.
விளம்பர இலக்கம். 3999
உதயன் பப்ளிகேசன் No.361 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது அடையாளத்தைக் காப்பதற்கு ஓரணியில் நின்று குரல் கொடுக்க வேண்டும்

## மக்களின் நீதியான வாழ்வுக்கு உதவுவதே இன்றைய தேவை என்கிறார் சிறிதரன்



**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களில் ஒருவரான சிவஞானம் சிறிதரன் உதயனுக்கு வழங்கிய நேர்காணல் இது. இவர் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் அதிபராகப் பணியாற்றியவர். முழுக்க முழுக்கப் போர்ச் சூழலில் வாழ்ந்தவர்.**

**கேள்வி:** தொடர்ச்சியாகப் போராட்டசூழலில் வாழ்ந்து வந்திருக்கின்றீர்கள். தொடர்ந்து போருக்கு இரையாகிய வன்னியில் கிளிநொச்சியில் வாழ்ந்திருக்கிறீர்கள். உங்களது வாழ்வுக்கு போர் எத்தகைய அனுபவங்களை தந்திருக்கின்றன. எத்தகைய மாற்றங்களை தந்திருக்கின்றன. அடுத்த கட்டத்திற்குச் செல்லும் நம்பிக்கையை எப்படி உருவாக்கிக் கொண்டீர்கள்?

**பதில்:** எனக்கு அறிவு தெரிந்த காலத்திலிருந்து ஏறத்தாழ மூன்று தசாப்த காலங்கள் முழுமையான போருக்குள்ளேயே வாழ்ந்து வந்திருக்கின்றேன். தமிழ் மக்கள் மீதான பொருளாதாரத் தடைகள், பாரிய இராணுவத்தாக்குதல்கள், தொடர்ச்சியான ஏதிலி வாழ்க்கை, சொத்துக்களை இழந்து அல்லது சூறையாடப்பட்டு நிராதரவான நிலை, உலகமே எங்களை அநாதைகளாக்கிய நிலை, என்று யோசிக்கும் அளவுக்குப் போரின் வடு என்னைப் புடம் போட்டிருக்கிறது.

கண்ணுக்கு முன்னே கண்ட கொடிய போரின் அவலங்கள் உலகில் எங்குமே நடந்திருக்காது என்றுதான் எண்ணுகிறேன். என்றாலும் எமது உரிமைகளுக்காக, நாங்கள் பிறந்து வளர்ந்து அள்ளி விளையாடிய மண்ணுக்காக, மரபு வழித் தாயகத்திற்காக இறுதி மூச்சு வரை குரல் கொடுக்க வேண்டும் என்ற பேரவா மனதில் உள்ளது.

நாங்கள் மலைபோல் நம்பியிருந்த போராட்டம், நம்பிக்கைத் துரோகங்களாலும் காட்டிக்கொடுப்புக்களாலும் அழிக்கப்பட்டு தமிழினம் தனக்கென ஒரு தலைமைத்துவம் இல்லாது அரசியல் அநாதைகளாக ஒடுங்கி வாழும் இன்றைய சூழலில் எனது இனத்தின் உரிமைக்காக, மறுவாழ்வுக்காக இயன்றவரை பாடுபட வேண்டும் என்ற எண்ணமே எனது அரசியல் பிரவேசமாகியது.

**கேள்வி:** வன்னி மக்கள் பலர் தொடர்ந்தும் தடுப்புமுகாமில் தடுக்கப்பட்டுள்ளார்கள். பல மக்கள் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக தடுப்பில் உள்ளார்கள். நீங்கள் தடுப்பு முகாமில் தங்கியிருந்த பொழுது ஏற்பட்ட அனுபவங்கள் எப்படி இருந்தன? இன்றைய வாழ்வுச் சூழலில் தடுப்பு முகாம் வாழ்க்கை எத்தகைய நிலையில் இருந்தது? முகாமிலிருந்து வெளியில் வரும் பொழுது உங்கள் மனநிலை எப்படி இருந்தது?

**பதில்:** வயல்வளம் அள்ளிக்கொடுக்க, கடல் வளம் கைகொடுக்க, தென்னை, மா, பலா, பனையுடன் நாங்கள் கையேந்தாது ஈழத்தின் பல பாகங்களில் வாழ்ந்தவர்களுக்கு அரிசியும் கடலுணவும் கொடுத்து செழிப்போடு வாழ்ந்த மக்கள் வேரோடு பிடுங்கி எறியப்பட்டு, தமது சொத்துக்களை இழந்து, அங்கங்களை இழந்து, கூடி இருந்தவர்களின் உயிர்களை இழந்து, மனம் பேதலித்தவர்களாக தறப்பாள் கொட்டகைகளில் யாரோ கொடுக்கும் அரிசிக்காகவும், தண்ணிக்காகவும் எந்தநாளும் வரிசையில் காத்து வாழும் வாழ்க்கை. எப்பொழுது தமது சொந்த வீடுகளில் நிம்மதியாக வாழ்வோம் என்ற ஏக்கப்பெருமூச்சு, இதுதான் தடுப்பு முகாமில் தொடரும் வாழ்க்கை.

**கேள்வி:** போர் அல்லது போராட்டச் சூழலில் வாழ்ந்துவிட்டு அரசியலுக்குள் பிரவேசிக்கிறீர்கள். நாடாளுமன்ற அரசியலில் ஏன் இறங்கத் தீர்மானித்தீர்கள்? ஈழத்தில் பல்வேறு அரசியல் கட்சிகள் உள்ள நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளராக இறங்குவது எப்படி முக்கியம் பெறுகிறது?

**பதில்:** இன்று தமிழர்களின் அரசியல்கூட தலைமைத்துவம் அழிக்கப்பட்டு அவர்கள் அநாதரவாக்கப்பட்டுள்ளார்கள். கிளிநொச்சி மாவட்டம் கடந்த 30 வருடங்களாக எந்தவொரு நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தையும் கொண்டிருக்கவில்லை. எமது மாவட்ட மக்களினதும் தமிழ் மக் களினதும் அரசியல் உரிமைக்காக, வாழ்வுரிமைக்காக குரல் கொடுக்கவேண்டிய தேவை இன்று ஒவ்வொரு தமிழ் புத்திஜீவிகளுக்கும் உண்டு. இந்தநிலையில் காலத்தின் தேவையால் எனது அரசியல் பிரவேசம் நிகழ்ந்தது.

அதிலும் இன்று தமிழர் உரிமைக்காக விடுதலைப்புலிகளின் காலத்திலிருந்து தராகி டி.சிவராம், ஜோசப் பரராசசிங்கம், சட்டவாளர் ரவிராஜ் போன்றோரின் பெரு முயற்சியாலும் தமிழர்க ளின் ஏகபிரதிநிதிகளான விடுதலைப் புலிகளால் கட்டிணையாக்கப்பட்ட கட்சி தமிழ்த்தேசிய கூட்டமைப்பு. பலரின் தியாகமும் இரத்தமும் வேர்வையும் கலந்து உருவாக்கப்பட்டு தமிழர் உரிமைக்காக குரல் கொடுக்கும் கட்சி என்பதால் அதன் ஊடாக அரசியலில் களமிறங்குகிறேன்.

**கேள்வி:** ஈழத் தமிழ் அரசியல் கட்சிகளை அழிக்கவும் ஈழத் தமிழ் அரசியல் வலுவை சிதைக்கவும் அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை அல்லது சூழ்ச்சிகளை மேற்கொள்வதைப் பார்க்க முடிகிறது. இந்த எண்ணத்தை இலகுபடுத்தும் வகையில் சில தமிழ் கட்சிகளும் அரசியல்வாதிகளும் செயற்படுகிறார்கள் போலத்தெரிகிறது. இவை எத்தகைய ஆபத்தை ஈழத் தமிழ் அரசியலில் ஏற்படுத்தும் எனக் கருதுகிறீர்கள்?

**பதில்:** தமிழர்களின் பேரம் பேசும் ஆற்றலை இல்லாதொழிப்பதே இன்று தமிழ் மண்ணில் பல கட்சிகள் சுயேசை குழுக்களாக களமிறக்கப்பட்டதன் அர்த்தமாகும். தமிழர்கள் ஜனாதிபதி தேர்தலில் காட்டிய ஒற்றுமையை இத்தேர்தலில் முழுமையாகக் காட்டவேண்டும். தமிழர்களுக்கு ஒரு தீர்வு கிடைப்பதென்றால் அது ஒற்றுமையின் கீழேயே கிடைக்கும். படிப்படியாக எங்களுடைய இன அடையாளங்கள் அழிக்கப்படுகின்றன. எங்கள் நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. மொழியை மூன்றாம் தரத்தில் கூட வைத்து பார்க்க மாட்டார்கள் போலுள்ளது. மாறி மாறி வரும் சிங்கள அரசுகள் தங்களுக்குள் முரண்பாடுகள் இருந்தாலும் தமிழர்களை




அழிப்பதையும் தமிழர்களின் மொழி கலாசாரத்தை சிதைத்து உரிமைக் குரலை நசுக்கும் ஒரு நிகழ்ச்சி நிரலுடன் செயற்படுகின்றன. ஆனால் தமிழர்கள் குறிப்பாக புத்திஜீவிகள் பணத்திற்காக, பதவிக்காக இனத்தைக் காட்டிக்கொடுக்கும் இன அடையாளத்தை அழிக்கும் செயற்பாட்டிற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதுதான் வேதனை. இந்நேரம் உரிமைகளை வென்றெடுக்க நாம் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். ஒரே அணியின் கீழ் ஒன்று சேர்ந்து குரல் கொடுக்க வேண்டும்.

**கேள்வி:** போரின் பிறகு ஈழத்தமிழர்களின் அரசியலில் என்ன ஓட்டம் இருக்கப்போகிறது? கனவுகள் நிறைவேறாத சூழலில் ஈழப்போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்படுகிறது. இனி ஈழ அரசியலில் வரும் பிரதிநிதிகள் எத்தகைய பங்கை ஆற்றவேண்டும்?

**பதில்:** கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலான ஈழப் போரில் 2,00,000 க்கும் மேற்பட்ட மக்களையும் 40 ஆயிரத்திற்கு மேற்பட்ட போராளிகளையும் இந்த மண்ணில் விதையாக்கியிருக்கிறோம். இன்று தம் பிள்ளைகளுக்கு ஒரு மெழுகுவர்த்தி கொளுத்தி ஆறுதலடையக்கூட அவர்களின் தாய், தந்தை சகோதரர்களுக்கு உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. அப்பாவி இளைஞர், யுவதிகள் 15000 இற்கும் மேற்பட்டவர்கள் சிறையில் இருக்கிறார்கள். ஏதுமறியா அந்த அப்பாவிகளில் பல்கலைக்கழக மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், மருத்துவர்கள் புனர்வாழ்வு என்ற பெயரில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

பல தாய், தந்தையர்களுக்கு தம் பிள்ளைகள் எங்கே இருக்கின்றார்கள் என்பதுகூட தெரியாது. அவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா? இல்லையா? என்பதைக் கூட அறியமுடியாத சூழல், வன்னியில் முழுச்சொத்துக்களும் சூறையாடப்பட்டுள்ளன. தாங்கள் வசதியாக, சந்தோஷமாக வாழ்ந்த வீடுகளின் அத்திவாரங்களைக் கூட பார்க்க முடியவில்லை. எல்லாவற்றையும் இழந்து 12 தகரத்திற்குள்ளும் தறப்பாள்களுக்குள்ளும் அடிமைகளாக வெறுமையாக ஒடுங்கி வாழும் வாழ்க்கைதான் கிடைத்திருக்கிறது. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள், யாழ்ப்பாணத்தின் வடமராட்சி கிழக்கு, வவுனியா வடக்கு, மன்னாரின் மடுப்பிரதேசம் போன்ற பகுதிகளில் வாழ்ந்த மக்களின் துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் வாகனங்கள், பாரவூர்திகள், சிற்றூர்திகள் பேருந்துகள், உழவு இயந்திரங்கள் இவற்றுக்கு என்ன நடந்தது?

இந்த நிலையில் ஈழ அரசியலில் வரும் பிரதிநிதிகள் எதை முன்வைப்பார்கள் என்பது பிரச்சினை தான். இவ்வளவு நடந்தும் எந்தத் தீர்வும் இல்லாமல் பழைய வாழ்க்கைக்கு போயுள்ள மக்களுக்கு தங்களை தாங்களே நிர்ணயிக்ககூடிய சுயநிர்ணய உரிமையை பெற்றுக்கொடுப்பதே முதல் பணியாக இருக்க வேண்டும். புலத்தில் வாழும் தமிழர்களையும் நிலத்தில் வாழும் தமிழர்களையும் இணைத்து மாறிவரும் உலகச் சூழலுக்கேற்ப உலக அரங்கில் எமது உரிமைப்பிரச்சினையை விளக்கி தீர்வு காணப்படவேண்டியது மிக முக்கியமான எமது கடமையாகும்.

**கேள்வி:** இந்தத் தேர்தலில் உங்களது வாக்குறுதிகள் எப்படி அமைகின்றன? அவை எந்தளவு ஈழ மக்களின் வாழ்வு, கனவு, நம்பிக்கை, ஏக்கம் என்பவற்றில் பொருந்தி நிற்கின்றன? அவற்றை எப்படிச் சாதிக்க முடியும் என்று நினைக்கிறீர்கள்?


**நேர்காணல்: தீபச்செல்வன்**

**பதில்:** எமது மக்களுக்கான உரிமைகளுக்காக படிப்படியாக எல்லோரையும் இணைத்து தமிழர்கள் ஓரணியாகி, விடுதலைக்காக, நிம்மதியான வாழ்வுகாக, எமது அடையாளத்தைக் காப்பதற்காக குரல் கொடுத்து தீர்வு ஒன்றை விரைவாக அடைய வேண்டும். எல்லாவற்றையும் இழந்து நிர்க்கதியாக நிற்கும் தலைமைத்துவம் சிதறடிக்கப்பட்டு வெறுப்பு விரக்தி நிலைக்கு தள்ளப்பட்டுள்ள மக்களுக்கு நீதியான வாழ்வுக்கு உதவவேண்டும் என்பதே எனது நோக்கம்.


நாடாளுமன்றத் தேர்தல் - 2010

(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - TNA)

உண்மைக்கும் உரிமைக்கும் ஓங்கி ஒலித்தது உதயனின் குரல். இனியும் தொடரவேண்டும் நாடாளுமன்றில்.....!





நோர்வே விசேட தூதர் ஹன்சன் போவர் நோர்வே தூதர் ஹன்ஸ் பிரஸ்கர் உடன்....

போடுங்கள் புள்ளடி வீட்டுக்கு நேரே !
அடுத்த புள்ளடி 6 க்கு மேலே!!

இலங்கைத் தமிழரசுக் கட்சி

X 6

தொழிலதிபர்

உதயன் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு விற்பனைக்கு

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அண்மையில், K.K.S. Roadஇல் இருந்து, பிரபல்யமான இடம், 4ஆவது வீடு. பெரியபாதையுடன் 5 பரப்பில் அமைந்துள்ள பெரிய வீடு விற்பனைக்கு உண்டு. குடியிருப்பதற்கு, மெடிக்கல் சென்ரர், அலுவலகம், வியாபார நடைமுறைகளுக்கு மிகவும் உகந்தது. வீடு, entrance gate, exit gate, porch, 2 குசினி, முன் விறாந்தை, நடு hall, உள் hall, 5அறைகள், 3 கழிவு கூடங்கள் என்பவற்றைக் கொண்டது. பின் புறமாக இன்னுமொரு வீடு அமைக் கலாம். வருவாய் தரும் மரங்கள், கிணறு, pipe வசதியும் உண்டு. K.K.S.Road 40 அடியாகப் பெருப்பிக்கப்படுகின்றது.

**Tel: 0776326345, 94-112715028**
**Email: nalariyam@gmail.com**


## ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் - 04
திகதி - 13.03.2010

ஜாதிக சம்பத Jathika Sampatha — உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து **V** — அதிர்ஷ்ட இலக்கம் **1** — வெற்றி இலக்கம் **8 8 9 1 8**

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | | | | | | | | | தொகை | பரிசு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | V | 1 | 8 | 8 | 9 | 1 | 8 | ரூ. | 18,639,911.00 | - |
| 1 பரிசு | | 1 | 8 | 8 | 9 | 1 | 8 | ரூ. | 2,000,000.00 | - |
| 2 பரிசு | | | 8 | 8 | 9 | 1 | 8 | ரூ. | 100,000.00 | 03 |
| 3 பரிசு | | | | 8 | 9 | 1 | 8 | ரூ. | 10,000.00 | 29 |
| 4 பரிசு | | | | | 9 | 1 | 8 | ரூ. | 1,000.00 | 299 |
| 5 பரிசு | | | | | | 1 | 8 | ரூ. | 50.00 | 2880 |
| 6 பரிசு | | | | | | | 8 | ரூ. | 20.00 | 28018 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | | | | | | | | | தொகை | பரிசு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 8 | 8 | 9 | 1 | | ரூ. | 1,000.00 | 30 |
| 8 பரிசு | | | 8 | 8 | 9 | | | ரூ. | 100.00 | 290 |
| 9 பரிசு | | | 8 | 8 | | | | ரூ. | 50.00 | 2919 |
| 10 பரிசு | V | | | | | | | ரூ. | 20.00 | 11570 |
| 11 பரிசு | V | 1 | | | | | | ரூ. | 100.00 | 1300 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,159,710.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
23/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு
ரூ.19,163,434.00

## யாழ். பிராந்திய திறந்த பல்கலையில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 15

இலங்கைதிறந்த பல்கலைக் கழகத்தின் 30ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் ''ஆற்றல்களை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள்'' என்ற தலைப்பில் முகாமைத்துவக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறும் இந்த நிகழ்வில் ஆர்வலர்கள் கலந்து கொள்ளலாம் என அதன் இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

இதே வேளை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தில் வரும் சனிக்கிழமை நடைபெறவிருந்த ஆங்கிலக்கற்கைநெறி நாள்பாடசாலை நடைபெற மாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-10)


# இலங்கை வங்கி
## ஏலவிற்பனை அறிவித்தல்

1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 22 ஆம் பிரிவு (397 ஆம் அத்தி) இன் கீழ் விற்பனை அறிவித்தல்.

**கடன் தொடர்பு இல. 2889204, 6987860**

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 17.04.2009 ஆம் திகதி 1598 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 08.04.2009 ஆம் திகதி டெய்லி நியூஸ், தினமின, தினகரன் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விவரித்த சொத்தையும் நிலமனையையும் இல.692, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு.கே.பி.பாலகிருஸ்ணன் 20.03.2010 ஆம் திகதி மு.ப.10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டத்திலும் பிரிவிலும் நல்லூர் பிரிவில் திருநெல்வேலி இறைவரி உத்தியோகத்தர் பிரிவில் 'அருமகலட்டி' என அழைக்கப்படும் மற்றும் பெயருடைய ஆறரை லாச்சம் (6½ லாச்சம் V.C) விஸ்தீரணமுடைய காணி. இவ் ஆறரை லாச்சங்களிலிருந்து (லாச்சம் 6½ V.C) பிரிக்கப்பட்ட ஒருபகுதி வடக்குப் பக்கத்தில் மூன்றரை லாச்சங்கள் (3½ லாச்சங்கள் V.C) ஏற்கனவே சீதனம் வழங்கப்பட்டுள்ளதுடன் தெற்குப் பக்கமாக காணியின் மீதிப்பாகம் மூன்று லாச்சங்கள் (3 லாச்சங்கள் V.C) விஸ்தீரணமுடைய காணியும் வீடும் பயிரிடப்பட்ட மற்றும் இயற்கைப் பயிர்களும் வடக்கு எல்லையில் காணப்படும் கிணற்றின் பங்கும் வழி/வாய்க்கால் பாவிப்புரித்தும் ஆகும். இக்காணி யாழ்ப்பாணம் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். ரத்னராஜா வரைந்த 20.06.2005 ஆம் திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. 1064 இன் கீழ் துண்டு 01 என விவரித்துள்ளதுடன் மூன்று லாச்சங்களும் பதினாறு தசம் எட்டு ஒன்று குழிகளும் (3 லாச்சங்களும் V.C, 16.81 குழிகளும்) விஸ்தீரணமுடையது. இது நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் வட்டாரம். இல.09 இல் யாழ்ப்பாணம் ஆடியபாதம் வீதி வரிமதிப்பிலக்கம் 116/2ஐக் கொண்டது. இக்காணியின் எல்லைகளாவன. கிழக்கில் பி.சேனாதிராஜாவின் ஆதனமும், வடக்கில் கணேசனின் மனைவி குமுதினியின் ஆதனமும், மேற்கில் ஒழுங்கையும்,தெற்கில் பி.சேனாதிராஜாவின் ஆதனமும் எல்லைகளாகக் கொண்டு இவ் எல்லைகளுள் அடங்கும் சகலதும் ஆகும். இக்காணி யாழ்ப்பாணம் காணிப்பதிவகத்தில் தொகுதி D 356 ஆம் பக்கம் 150 இல் பதிவு செய்யப்பட்டது.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி
இலங்கை வங்கி,
திருநெல்வேலி.

E. பிரேமராஜன்
கிளை முகாமையாளர்.


# சபிண்டீகரண அழைப்பு

## அமரர் உஷாதேவி ஜெகநாதன்



கடந்த 01.03.2010 அன்று
இறைவனடி சேர்ந்த எமது
குடும்பத் தலைவி அமரர் உஷாதேவி
ஜெகநாதன் அவர்களின்
சபிண்டீகரணக் கிரியைகள் நாளை
(16.03.2010) செவ்வாய்க்கிழமை
காலை 6 மணிக்கு அன்னாரின்
இல்லத்தில் நடைபெறவுள்ளது.
மேற்படி கிரியைகளிலும் தொடர்ந்து
நடைபெறும் நிகழ்வுகளிலும்
முற்பகல் 11 மணியளவில்
நடைபெறும் மதிய போசன
நிகழ்விலும் கலந்துகொண்டு
அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்குமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.


குறிப்பு :
இந்த அழைப்பினை தயவுகூர்ந்து தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொண்டு உற்றார், உறவினர், நண்பர்கள் அயலவர்கள் அனைவரையும் வருகை தருமாறு மிகவும் பணிவாக வேண்டி நிற்கின்றோம்.

பாடசாலை வீதி,
கெருடாவில்,
தொண்டைமானாறு.



குடும்பத்தினர்.

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



அமரர்
## சின்னையா தர்மலிங்கம்

மலர்வு 29.05.1932 — உதிர்வு 13.02.2010

கடந்த 13.02.2010 அன்று
இறைபதமெய்திய எமது
குடும்பத்தலைவரின்
அந்தியேட்டிக் கிரியை இன்று
(15.03.2010) திங்கட்கிழமை
காலை 4 மணியளவில்
அன்னாரின் இல்லத்தில்
நடைபெற இருப்பதால் தாங்
களும் கலந்து அன்னாரின் ஆத்ம
சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு
அன்று மதியம் 12 மணியளவில்
நடைபெறும் மதியபோசன
நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.
அத்துடன் நேரில் வந்தும்
தொலைபேசி மூலமும் துண்டுப்
பிரசுரமூலம் கண்ணீர் அஞ்சலி
செலுத்தியவர்களுக்கும் எமது
நன்றியைத்
தெரிவித்துக்கொள்கிறோம்.

கொம்மந்தறை, வல்வெட்டித்துறை.
0776141907, 0770870385

த.இராசசேகரம்,
த.சிவசேகரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேசப் பொருளாதார உற்பத்தியின் சுட்டியாக யாழில் எழுந்து நிற்கும் உயிர் நுட்பு நிறுவனம்




ஆ.பிரியந்தினி

யாழ். மண்ணின் உற்பத்திப் பொருள்களுக்குப் பெறுமதி சேர்த்து,உயிரூட்டும் நிறுவனமாக 'உயிர் நுட்பு'' என்ற நிறுவனம் காணப்படுவதுடன் முழுவதும் எமது சுதேச உற்பத்திப் பொருள்களும் தொழில்நுட்பத் திறன்களும் கையாளப்பட்டு வருகின்றன. இதன் மூலம் யாழ்ப்பாண வளங்களை, தொழில் நுட்பத்திறனை சர்வதேச ரீதியில் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது. 1993 ஆம் ஆண்டு **Partnership Bio Tec** ஆக இது தன் முதல் முயற்சியில் இறங்கியது. பின்னர் 1994 இல் உயிர் நுட்பு தனியார் கம்பனியாகவும் இறுதியில் 2004 ஆம் ஆண்டு சர்வதேச பொது கம்பனியாகத் தேசிய ரீதியில் வளர்ச்சிப் பரிணாமம் பெற்று வந்துள்ளது.

அந்தவகையில் இந்த நிறுவனமானது விஷேடமாக உள்ளூர் உற்பத்தியான குறிஞ்சா இலையில் இருந்து தேநீர் தயாரிக்கும்பொடியை உற்பத்தி செய்கின்றது. இதனைக் கனடா, லண்டன், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றார்கள். இதன் மூலம் அந்நியச் செலாவணியை எமது நாட்டிற்கு ஈட்டித் தருகின்றது. வெளிநாடுகளில் இக் குறிஞ்சா தேநீர்ப் பொடிக்கு நல்ல வரவேற்புக் காணப் படுகின்றது.

மேலும் இவர்கள் ஒரு புதிய வகை வைனைத் தயாரிக்கின்றனர். இதில் 3 வகை காணப்படுகின்றது. திராட்சை வைன், இனிப்பு திராட்சை வைன், உலர் திராட்சை வைன் என்பன காணப்படுகின்றன. உலர் திராட்சை வைன் என்பது நீரிழிவு நோயாளர்கள் பயன்படுத்தும் ஒரு பான வகையாகும். இத்திராட்சை ரசத்தை ஏ-9 பாதை திறந்ததும் வருகை தந்த வெளிநாட்டவர் மற்றும் தென்இலங்கைப் பயணிகள் பெரிதும் விரும்பிக் கொள்வனவு செய்தனர்.

அடுத்து இங்கு மென்பானச் சோடா உற்பத்தியும் இடம் பெறுகின்றது. அதாவது ஒறேஞ் சோடா, நெக்டா சோடா, 2டி கோலா என்பன உற்பத்தி செய்யப்படுகின்றன. இதில் 2டி கோலா என்பது நீரிழிவு நோயளர் பயன்படுத்தும் பிரத்தியேகமான மென்பானமாகும். இது சீனித்தன்மை அற்ற பானம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவற்றுடன் சுதேச வளங்களைப் பயன்படுத்தி கூந்தல் வளர்ச்சிக்கான எண்ணெயும் தயாரிக்கப்படுகின்றது. இதில் நல்லெண்ணை மற்றும் சுதேச மூலிகைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதனைப் பயன்படுத்துவதன் மூலமாக இளநரை மற்றும் முடி உதிர்வு என்பவற்றிற்குக் குறுகிய காலத்தில் சிறப்பான பலனை அடையலாம். (வளரும்)




# சூழலைப் பாதுகாத்திடுவோம் உயிர்கள் உள்ளங்களை மதித்திடுவோம்



ப.ராஜசோபனா

இன்று யாழ். நகரை நோக்குகையில் இந் நகரில் ஏற்பட்டுள்ள மாற்றம் வளர்ச்சிப்போக்கு பெரும்மகிழ்வை நம்மிடையே ஏற்படுத்தியுள்ள போதிலும் நமக்குப் பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. இப்பாதிப்பை மாற்றியமைப்பது ஒவ்வொருவரின் கடமையாகும். ஏனெனில் இப்பாதிப்புக்கு இப்பிரதேசத்தைப் பயன்படுத்தும் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் காரணமாக உள்ளனர் என்பது உண்மை. இன்று யாழ். நகரின் போக்குவரத்து வளர்ச்சி, பொருள்களை இலகுவாகப் பெறல், அனைத்து இடங்களிலிருந்தும் மக்கள் வருகை தரல் போன்றவை இந்நகரை அபிவிருத்திப்பாதையில் இட்டுச்செல்லும் காரணிகளாக இருக்கின்றன. இவ்வாறான காரணிகளே இன்று யாழ். நகரைப்பாதிக்கும் காரணிகளாகவும் அமைந்துள்ளன என்பதைக் குறிப்பிடுதல் மனவருத்தத்திற்குரியது. ஆனால் இவையே உண்மை, ஏனென்றால் இன்று பல நோய்களினால் பாதிக்கப்பட்ட நிலையில் பெரும் எண்ணிக்கையான மக்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ளனர். இவற்றை நோக்குகையில் இந்நோய்கள் பரவுவதற்குப் பெரும் காரணியாக நுளம்பு போன்ற சில கிருமிகளே உள்ளன. இக்கிருமிகள் உற்பத்தியாகும் இடங்களாக பாழடைந்த நிலைகளில் காணப்படும் குளங்கள், பெரும் வாய்க்கால்கள், நீர் தேங்கிய நிலையில் காணப்படும் குட்டைகள், வீதியோரங்களில் அகற்றப்படாத நிலையில் காணப்படும் குப்பை கூழங்கள் காணப்படுகின்றன. இன்றைய யாழ்.நகரின் வளர்ச்சிக்கு ஏற்ப வீதிகளின் விரிவாக்கம் காணப்படாமை, பிரதான வீதிகள் சில இடங்களில் புனரமைக்கப்படாமை என்பவற்றால் மனிதர்கள் மட்டுமல்லாது மிருகங்கள், பிராணிகளும் விபத்துக்குள்ளாக்கப்படுகின்றன. இவ்வாறு வீதிகளில் பல உயிரினங்கள் விபத்துக்குள்ளாகி அகற்றப்படாமையால் இவை துர்நாற்றம் வீசுவதோடு கிருமிகள், நுண்ணங்கிகளின் பெருக்கத்தையும் ஏற்படுத்தி வருகின்றன. இதனால் இன்று யாழ். நகரில் நோய்களின் உருவாக்கத்திற்கு இவையும் காரணிகளாக அமைந்துள்ளன.

அத்தோடு இன்று சன நடமாட்டத்தின் அதிகரிப்பும் யாழ்.நகரைப் பெரும் பாதிப்புக்குள்ளாகி வரும் காரணிகளில் ஒன்றாகும். இதனால் தங்குமிடவசதிப் பிரச்சினை ஏற்படுகின்றது. வேறு வழியின்றி மக்கள் பொது இடங்கள், வாகனங்கள் போன்றவற்றைத் தமது தரிப்பிடங்கள், உணவுக்கூடங்களாய் அமைத்து அவற்றைப் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் வீதிகளில் குப்பை கூழங்கள் பெருமளவில் அதிகரிக்கின்றன. அவை மட்டுமன்றி இவர்கள் சுகாதாரச் சீர்கேடான முறையில் வீதிகளைப் பயன்படுத்துவதால் மேலும் மேலும் யாழ்.நகர் பாதிப்புக்குள்ளாகின்றது. மேலும் இவர்கள் மீதி உணவை வீதிகளில் வீசி விடுவதால் மிருகங்கள் இழுத்துச் சென்று வீதிகளை அசுத்தம் செய்கின்றன. இவையும் நகர் அசுத்தப்படுவதற்கு ஏதுவாக அமைகின்றன.

நாம் இவற்றை இல்லாதொழிப்பதற்கு வெளிநாடுகளில் உள்ள சுகாதாரத்திட்டத்துடன் தொடர்புடைய நிறுவனங்களின் உதவியைப் பெறவேண்டும். மேலும் இன்று யாழ்.நகரில் குப்பை கூழங்களை இடுவதற்கென மிகக்குறைந்த அளவிலேயே குப்பைத்தொட்டிகள் காணப்படுகின்றன. இவற்றின் தொகை அதிகரிக்கப்பட வேண்டும்.

மேலும் மாணவர் மத்தியில் சுகாதாரம் தொடர்பான கருத்தரங்குகளை [illegible] நடத்தி மாணவர்கள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். தொற்று நோய்களுக்குள்ளாகும் மக்களின் தொகையைப் பெருமளவில் இவற்றைச் செய்வதன் மூலம் குறைக்கலாம். வெளிநாட்டு வீதிகளில் எந்தவொரு இடத்திலும் குப்பைத் தொட்டிகளைத் தவிர வேறு இடங்களில் குப்பை போட அனுமதியில்லை. அவ்வாறு செய்தால் அபராதப் பணம் செலுத்துதல் போன்ற தண்டனைகள் காணப்படுகின்றன. அவ்வாறான சட்டதிட்டங்களை இங்கேயும் ஏற்படுத்தலாம். முயற்சித்தால் முடியாதது ஒன்றுமில்லை. முடியவில்லையெனில் நாம் முயற்சிக்கவில்லையென்றுதான் அர்த்தம்.

தோழர்களே! நம்மைக் காப்பாற்ற வேண்டுமாயின் நம் சூழலை நாம் பாதுகாக்க வேண்டும். வீதியில் சுத்தம் வேண்டுமெனில் நம் வீட்டில் சுத்தம் வேண்டும். எனவே வீதியையும் வீட்டையும் சுத்தப்படுத்தி நம்மையும் நம் சூழலையும் சுத்தமாய்ப் பேணி எவரது துன்பத்திற்கும் காரணியாக நாம் மாறாதிருப்போம். இதற்காக நம் சூழலை, நம் யாழ். நகரைப் பாதுகாப்போம்.

மேலும் தேவையான பொருள்கள் இங்கே இன்று இலகுவாகக் கிடைக்கும் அதேவேளை தரக்குறைவான, சுகாதாரமற்ற பொருள்கள் வீதியோரங்களிலும் குட்டைகளுக்கு அருகாமையிலும் வைத்து விற்கப்படுகின்றன. இதன்போது கிருமிகள் உணவு, உடைகள் போன்றவற்றில் படிகின்றன. இதனால் இன்று பெரும் பாதிப்பை யாழ். நகர மக்கள் எதிர்நோக்கியுள்ளார்கள். ஒரு மனிதனை ஆன்மிகத்தில் சுத்தப்படுத்தல் ஆலயம் என்றால் அவனை ஆளுமை ஒழுக்கத்தில் சுத்தப்படுத்துவது பாடசாலை எனலாம். அப்பாடசாலை ஆலயம் போல் புனிதமாய் பேணப்படவேண்டும். ஆனால் பாடசாலைக்கு அருகாமையில் உள்ள சிலர் பொறுப்பின்றிக் குப்பை போடாதீர்கள் என எழுதப்பட்டுக் காணப்படும் இடங்களில் குப்பைகளைக் கொட்டிச் செல்லும் நிலை. இவர்கள் தம்மை தாமே அவமதிப்பது மட்டுமல்ல மற்றவனையும் பாதிப்புள்ளாக்கி தம்மையும் பாதிப்புக்குள்ளாக்கும் செயலாகும்.


எனவே இவை மாற்றப்பட வேண்டும். எமது நாடு, எமது பிரதேசம், [illegible] எம்மில் தோற்றம் பெறவேண்டும். பிற [illegible] போன்று இங்கே குப்பையை பசளையாக்குதல் போன்ற நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். ★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றத் தேர்தல்

(இலங்கைத் தமிழரசுக் கட்சி,
தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு)

## 08 ஏப்ரல் 2010






**அன்பான வாக்காளப் பெருமக்களே!**

கடந்த 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாகவும் 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பாகவும் போட்டியிட்ட நான், எதிர்வரும் 2010 ஏப்ரல் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலிலும், நான் வரித்துக்கொண்ட தமிழ்த் தேசிய இனத்தின் அதே அடிப்படை இலட்சியங்களையும், அபிலாசைகளையும் எவ்விதத்திலும் கைவிடாத அரசியல் இலக்குகளாகக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடுகின்றேன்.

முதலில் நான் யாழ்ப்பாணம் மாவட்டத்திலேயே உங்களோடு ஒருவனாக வாழ்ந்து நீங்கள் அனுபவித்த அத்தனை சிரமங்களையும், கெடுபிடிகளையும், நெருக்கடிகளையும் உங்களோடு சேர்ந்து அனுபவித்தவன் என்பதையும் அன்றாடம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக அவ்வப் போது குரல் கொடுத்தும் வருவதை நீங்கள் அறிவீர்கள்.

1987 இல் இலங்கை இந்திய ஒப்பந்தத்தையடுத்து உருவாக்கப்பட்ட இடைக்கால நிர்வாகத்தின் பிரதம நிர்வாகியாக சிபாரிசு செய்யப்பட்டு நியமிக்கப்பட்டேன். ஆனால் ஒப்புக்கொண்டதற்கு மாறாக மட்டக்களப்பு பிரதிநிதித்துவம் நீக்கப்பட்டதால் இந்த நியமனத்தை ஏற்க மறுத்தேன். அத்துடன் 1991 இல் ஈரோஸ் நாடாளுமன்றப் பட்டியலில் நாடாளுமன்ற உறுப்பினராக நியமனம் பெற்று ஜனாதிபதி பிரேமதாசாவுடன் சமாதான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டேன்.

இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டிருந்த போது, அரசியல் செயற்பாடுகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்த நிலையில் தனியொருவனாக நின்று மக்களுக்காக பேசியதுடன் சமாதானம் ஏற்படவும் பாடுபட்டதும் நீங்கள் அறிந்ததே!

1952 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அமரர் கு.வன்னியசிங்கம் அவர்களுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் ஆதரவாக செயற்பட்டதன் மூலம் எனது அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்து இப்பொழுது தமிழரசுக் கட்சியின் பொருளாதாரத்துறை துணைச் செயலாளராக பதவி வகிக்கின்றேன்.

1983 ஆம் ஆண்டு ஜூலை கலவரத்தைத் தொடர்ந்து அரச சார்பற்ற நிறுவன சேவைகளில் ஈடுபாடு கொண்டு செயற்பட்டு வருவதுடன் 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவராகவும் செயற்பட்டுள்ளேன். அத்துடன், இடம் பெயர் மக்களுக்கு உதவுவதற்கென உருவாக்கப்பட்ட இந்து அமைப்புக்களின் ஒன்றியத்தின் பொருளாளராகவும் பணியாற்றி வருகின்றேன்.

நான் மாநகரசபை ஆணையாளராக கடமையாற்றிய காலம் முழுவதும் நெருக்கடியானதாகவே இருந்திருக்கின்றது. 1977 இல் யாழ்ப்பாணம் பெரிய கடைச்சந்தை மற்றும் கடைத்தொகுதிகள் அரச காவல்துறையால் எரிக்கப்பட்டதும், அவற்றை மூன்று மாதங்களில் மீளக்கட்டுவித்து குத்தகை எடுத்தவர்களுக்கு உதவியதுடன், நகர மத்தியில் போக்குவரத்து நெரிசல்களை குறைக்கும் பொருட்டு கோணாந்தோட்டம் மற்றும் முனீஸ்வரன் இணைப்பு வீதிகளையும் திறந்து வைத்தேன். துரையப்பா விளையாட்டரங்க வேலைகளை பூர்த்தி செய்ததுடன் யாழ்ப்பாணம் நவீன சந்தையின் இரண்டாவது கட்டத்தை பூர்த்தி செய்து கேள்வி கோரி வர்த்தகர்களுக்கு வழங்கியவன்.

1981 ஜூன் முதலாம் திகதி எரியூட்டப்பட்ட யாழ்ப்பாணம் பொதுநூலகத்தை புனரமைத்து, மேற்குப்புற கட்டடவேலையைப் பூர்த்தி செய்து அமரர் அ.அமிர்தலிங்கம் அவர்கள் மூலம் 04.06.1984 ஆம் திகதி திறந்து வைப்பித்தேன். 1985 ஆம் ஆண்டு மாநகர அலுவலகம் தாக்குதலுக்குள்ளான போது சேவைகளை தடங்கலின்றி மேற்கொண்டதுடன் மாநகர அலுவலகத்தை நல்லூரில் அமைத்து செயற்பட வைத்தேன். அத்துடன் 1986 இல் யாழ்ப்பாண மாநகரத்துக்கென தீயணைப்புச் சேவையை உருவாக்கினேன்.

இவற்றைத் தொடர்ந்து இனிமேல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கிணங்க;

**★ அரசியல்**

கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக நமது தலைமைகள் எடுத்து வந்த "தமிழ் பேசும் தேசிய இனம்"; வடக்கு- கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடப் பிரதேசம்; அவர்களுக்கு தனித்துவமான கலாசார, மொழி மற்றும் பண்பாட்டு அடையாளங்கள் உண்டு; அவர்களுக்கு சுயாட்சி உரிமையும் சுயநிர்ணய உரிமையும் உண்டு என்ற நிலைப்பாட்டில் உறுதியாக நின்று கொண்டு; அதிகார பரவலாக்கல்- நடவடிக்கையின்படி வடக்கு- கிழக்கு என்ற ஓர் அதிகார அலகை சிதைக்க எடுக்கும் நடவடிக்கைகளை மறுதலித்து நிற்பது; அடிப்படை மனித உரிமைகளை மறுக்க வழிசமைக்கும் அவசரகாலச் சட்டத்தை நீக்கவும், உயர் பாதுகாப்புவலயங்களை நீக்கவும் பாடுபடுதல்,வடக்கு- கிழக்கு மாகாணங்களின் குடிசனப் பரம்பலைச் சிதைக்கும் சகல குடியேற்ற முயற்சிகளையும் எதிர்த்தல்.

**★ பொருளாதாரம்**

முப்பது வருட கால யுத்த சூழ்நிலையால் சிதைந்து போன பொருளாதார உட்கட்டுமானங்களை மீளக்கட்டியெழுப்பி, தமிழ் பேசும் மக்களது பொருண்மிய வளர்ச்சிக்கு வழிசமைத்து, வேலை வாய்ப்புக்களை உருவாக்க நடவடிக்கை எடுத்தல்.

விவசாயத்துக்குட்படுத்தப்படாது உள்ள நிலங்களில் விவசாயம் மேற்கொள்வதற்குரிய நடவடிக்கைகளையும், ஊக்குவிப்புக்களையும், சந்தை வாய்ப்பையும் ஏற்படுத்தி விவசாயத்துறையை இலாபகரமான தொழிலாக மாற்றியமைத்தல்.

கடற் தொழிலுக்குள்ள தடைகளை முழுமையாக நீக்கி இத்தொழிலை இலாபகரமான ஒன்றாக அமைப்பதற்கான நடவ்டிக்கைகளை எடுத்தல்.

பனைவள அபிவிருத்திக்கும், பனம்பொருள் உற்பத்திக்கும், சந்தைப்படுத்தலுக்கும் திட்டங்கள் தீட்டிச் செயற்படும் பொருட்டு, பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக நின்று ஊக்கமளிப்பதுடன், பனை அபிவிருத்திச் சபையின் தலைவராகவும், பெரும்பான்மை உறுப்பினர்களாகவும் வட மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தைச் சேர்ந்தவர்களையே நியமிக்க வேண்டும் என வற்புறுத்துதல்.

**★ இடம் பெயர்ந்தோர் மீள் குடியேற்றம்**

யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்துள்ள அத்தனை மக்களையும், அவர்களது சொந்த இடங்களில் போதிய அடிப்படை வசதிகளுடன் கூடிய குடியிருப்புக்களில் குடியேறவும்; தத்தமது தொழில்களை மீள ஆரம்பிப்பதற்கான சகல வசதிகளையும் ஏற்பாடு செய்து அவர்களது வாழ்வாதாரத்திற்கு வழிசமைத்தல் தொடர்பான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல்.

**★ உள்ளூராட்சித் துறை**

பறித்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சிப் பணிகளை மீளப்பெற்று உள்ளூராட்சிச் சேவையை தனித்துவம் மிக்கதாக்கி உள்ளூராட்சி மன்றங்கள் மக்களுக்கான அடிப்படை வசதிகளை வழங்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்குதல்.

**★ கூட்டுறவுத்துறை**

கூட்டுறவுத்துறை நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்தி, வர்த்தகத் துறையில் நிலைத்து நிற்கத்தக்கதான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுத்தல்.

**★ அரச துறைகள்**

அரச அதிகாரிகள் சுதந்திரமாகவும், பக்கசார்பின்றியும், வெளிப்படைத் தன்மையுடனும் செயற்படக் கூடிய சூழ்நிலையை உருவாக்குதல்.

**★ ஓய்வூதியர் நலன்**

2006 ஆம் ஆண்டுக்கு முன்பு ஓய்வு பெற்றவர்களுக்கு 06/2006 ஆம் இலக்க சுற்றறிக்கையின்படியான ஓய்வூதிய கணிப்பை அமுல் செய்ய வற்புறுத்துதல்.

**★ அரச சார்பற்ற நிறுவனங்கள்**

இக்கட்டான காலங்களில் எல்லாம் இன்னலுற்ற மக்களுக்கு கைகொடுத்து உதவும் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை ஊக்குவிக்கவும், அவற்றின் செயற்பாடுகளுக்கு தடையாக இருப்பனவற்றை நீக்கப் பாடுபடுதலும்.

**★ இளைஞர் வேலைவாய்ப்பு**

பல்கலைக்கழக பட்டதாரிகள், தொழில்நுட்ப கல்லூரிகளில் பயின்றவர்கள் உள்ளிட்ட வேலையற்ற இளைஞர்களுக்கு அரசாங்க மற்றும் தனியார் துறைகளில் வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுக்கவும்; வேலை வாய்ப்புக்களை உருவாக்கக்கூடிய தொழில் முயற்சிகளை உருவாக்குவதற்கான வளங்கள் தொடர்பான ஆய்வுகளையும், திட்டமிடுதல்களையும், அமுல் செய்வதையும் ஊக்குவித்தல்.

**★ அன்புக்குரிய வாக்காளப் பெருமக்களே!**

மேற்குறிப்பிட்டவற்றைக் கருத்திற் கொண்டு தமிழ் தேசிய இனத்தின் உரிமைச் சின்னமான வீட்டுக்கு நேரே புள்ளடியிட்டும்; எனது விருப்புவாக்கு எண்ணான பதினொன்றுக்கு மேலே புள்ளடியிட்டும் என்னை நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

'தமிழ் தேசியத்திற்கு வலிமை சமூகத்திற்கு சேவை'
சீ.வி.கே.சிவஞானம்.

(விளம்பர இலக்கம்: சி/56571)



## உத்தியோக பூர்வ முடிவுகள்

சுப்பிரி வாசனா சம்பத்

சீட்டிழுப்பு இலக்கம் 540
திகதி 2010/03/13

25 | 30 40 45 52

| | | பரிசுத்தொகை | வெற்றியாளர் தொகை |
|---|---|---|---|
| [illegible] | [illegible] | ரூ. 23,825,764.80 | ---- |
| [illegible] | [illegible] | ரூ. 1,000,000.00 | 01 |
| [illegible] | [illegible] | ரூ. 50,000.00 | 03 |
| [illegible] | [illegible] | ரூ. 2,000.00 | 216 |
| [illegible] | [illegible] | ரூ. 1,000.00 | 405 |
| [illegible] | [illegible] | ரூ. 100.00 | 10,189 |
| [illegible] | [illegible] | ரூ. 50.00 | 5,736 |
| [illegible] | [illegible] | ரூ. 20.00 | 148,586 |
| [illegible] | [illegible] | ரூ. 30.00 | 23,584 |

ரூ. 6,931,340.00

ரூ 24,077,861.60

தேசிய லொத்தர் சபை



## ஆறாத நினைவில் ஐந்தாண்டுகள்



அமரர் இளையபவி
கிருஷ்ணபிள்ளை

மண்மகிழ: 10.07.1936
கண்நெகிழ: 15.03.2005

இலட்சியங்கள் பல சுமந்து
இவ்வுலகில் தான் வாழ்ந்து
இறைவனடி சேர்ந்துவிட்ட எம்
தெய்வமே! என்றென்றும்
உம் நினைவுகளுடன்...

குளமங்கால்,
மல்லாகம். (95859)

குடும்பத்தினர்.


## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மார்ச் 15

பண்ணாகம் விசுவத்தனை முருகமூர்த்தி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளது. எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 11மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (201-28)

* * *

அல்வாய் மேற்கு தேவரையாளி கண்ணகை அம்பாள் ஆலயத்தின் அலங்காரத் திருவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி காலை 9மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் மு.ப.10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ஒ-201)

* * *

சுழிபுரம், மார்ச்15

சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் விளக்கேற்று நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை மாலை நடைபெறவுள்ளது. 23ஆம் திகதி செவ்வாய் முதலாவது பொங்கலும் 30ஆம் திகதி செவ்வாய் எட்டாம் நாள் பொங்கலும் நடை பெறும். விளக்கேற்று நாள்முதல் தினமும் மாலை விசேட பூஜை, கூட்டுப் பிரார்த்தனை நடைபெறும். (28)

## மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு

கைதடி.மார்ச் 15

கனடாவில் இருந்து வருகைதந்திருக்கும் பொன்.கிருஸ்ணனின் அனுசரணையில் லயன்ஸ் கழகத்தின் சாவகச்சேரிப் பிரிவினரின் ஏற்பாட்டில் இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

லயன்ஸ் கழகத்தின் சாவகச்சேரி பிரிவுத் தலைவர் லயன் ப. செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் ஐம்பதுக்கும் மேற்பட்ட வயோதிபர்களுக்கு கண் பரிசோதிக்கப்பட்டு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. (201-288)




## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

### உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2104 திகதி 13 – 03 – 2010

ஆங்கில எழுத்திற்கும் N

வெற்றி எண்கள் 23 30 38 51

போனஸ் இல: 20

ஜக்பொட் பரிசு ரூ. 11,487,850/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 169964 | 20/- | 3,399,280/- |
| 2 இல | 12101 | 100/- | 1,210,100/- |
| 3 இல | 244 | 1,000/- | 244,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 6841 | 40/- | 273,640/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 478 | 1,000/- | 478,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 09 | 10,000/- | 90,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 11,487,850/- | - |
| 1 இல + போனஸ் இல | 8071 | 100/- | 807,100/- |
| 2 இல + போனஸ் இல | 382 | 500/- | 191,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 324 | 200/- | 64,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 14 | 1,500/- | 21,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 8,178,920/- |
| தங்க நாணயங்களின் பெறுமதி | 10 | | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 198443 | - | 8,778,920/- |

ஆலிந்தயே வாசனா வெற்றியாளர்கள்
தங்கக்காசு வெற்றியாளர் - R. ரொஷான் உடவைக் - களனி.
கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - G.A. குணபால - பன்வல.

2 தங்க நாணயங்கள் வெற்றி பெற்ற டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கொழும்பு | 301730140-1-11 |
| புத்தளம் | 301725067-2-47 |
| நுவரேலியா | 301715976-8-36 |
| அநுராதபுரம் | 301719811-7-15 |
| கம்பஹா | 301730531-5-11 |
| திருகோணமலை | 301718361-8-08 |
| கம்பஹா | 301724680-0-36 |
| பொலன்னறுவை | 301724348-4-20 |
| வவுனியா | 301715836-8-40 |
| களுத்துறை | 301717381-1-00 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 11,951,625/-

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...... இராசிபலன்

## மார்ச் 14 முதல் 20 வரை

தருபவர் - வித்யா

### மேஷம்

இந்த வாரம் சந்திராஷ்டமம் என்பதால், எதிலும் கவனமாகவும், எச்சரிக்கையாகவும் செயற்விட்டு, அதில் திருப்தி இல்லாமல் போகலாம். காத்திருப்புகள், இழுத்தடிப்புகள் நேரும். கலகலப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். நீண்ட நாள்களாக சந்திக்காத சிலரை சந்திப்பீர்கள். சூரியன், குரு லாப ஸ்தானத்தில் இருப்பதால், பெரிய மனிதர்களின் உதவி, அனுசரணை கிடைக்கும். வளர்ந்த பிள்ளைகள் வழியில் பெருமைப்படும் வகையிலான சம் பவங்கள் நடக்கலாம். நீண்ட நாள்களாக வராத கடன் மிகுதிகள் வரலாம். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரலாம். வெளிவட்டாத தொடர்புகள் விரும்பும் விதத்தில் அமையும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் மற்றும் உறவினர்கள் வகையில் திடீர் செலவுகள் ஏற்படலாம். அரசாங்கம், அரசியல், மருத்துவம், அதிகாரிகள் தொடர்பான விஷயங்கள் சாதகமாகும். தந்தை வகையில் ஏற்பட்ட மனஸ்தாபம், நெருக்கடிகள் தீர்ந்து நிம்மதி காண்பீர்கள். அரசியல்வாதிகளை நம்பி இறங்கிய காரியங்கள் நல்ல விதமாக முடியும். சுக்கிரன் விரய ஸ்தானத்தில் உச்ச பலமாக இருப்பதால், குடும்பத்திற்காகவும், மனைவி வழியிலும், ஆடம்பர விஷயங்களுக்காகவும் கணிசமான பணத்தை செலவிடலாம். இருந்தாலும், அந்தச் செலவுகளை ஈடுகட்டும் வகையிலான பணவரவுகளும் உண்டு. மூன்றாம் இடத்தில் கேது இருப்பதால், மாற்று மதத்தினர் சகாயம் கிட்டும். காரிய வெற்றி உண்டு. பணவரவைப் பெறலாம்.

### இடபம்

இந்த மதியம் ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். நண்பர்களுக்காக சில காரியங்களைச் செய்வீர்கள். அடுக்கடுக்காக பல வேலைகளை திட்டமிட்டு செய்வீர்கள். சந்திராஷ்டமம் என்பதால், கவனக்குறைவு, மறதி, தண்டச் செலவு, வீண் விவகாரம், மன அமைதி பாதிப்பு போன்ற பிரச்சினைகளைச் சந்திக்கலாம். லக்கினாதிபதி சுக்கிரன் லாப ஸ்தானத்தில் இருப்பதால், செல்வாக்கும், சொல்வாக்கும் அதிகரிக்கும். மற்றவர்கள் மத்தியில் உங்களின் பெருமையை, வசதியை வாய்ப்பை காட்டிக் கொள்ள முற்படுவீர்கள். நீண்ட நாள்களாக வாங்க நினைத்த பொருள்களை வாங்குவீர்கள். உறவுப் பெண்கள், பயணங்கள், சகோதரிகள், மனைவி, தாயார் வழியில் உதவிகள் கிடைக்கலாம். புதன் சூரியன் சாதகமாக இருப்பதால், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், தந்தை தொடர்பான வகையில் ஆதாயம் அனுகூலம் பெறலாம். நீண்ட நாட்களாக செல்ல நினைத்த உறவினர் ஒருவரின் வீட்டிற்கு செல்லலாம். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரலாம். அரசியல்வாதிகள் பொறுப்புடன் செயற்பட்டு செல்வாக்கு பெறுவர். பத்தாம் இடத்தில் குரு இருப்பதால், தொழில் ரீதியான விஷயங்களில் கவனம் அவசியம். அஜாக்கிரதையால் அவ்வப்போது அவதிகளுக்கு ஆளாகலாம். செவ்வாய் சாதகமாக இருப்பதால், உடன் பிறப்புக்கள், பங்காளிகள் உதவிகரமாக இருப்பர். அவர்கள் வகையில் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்ந்து பாசம் அதிகரிக்கும். நிலம், பூமி விவகாரங்கள் சாதகமாக அமையும். எதிர்பாராத சந்திப்பு நிகழும். காரிய வெற்றி பெறலாம்.

### மிதுனம்

இந்த வாரம் பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். பெண்கள் வகையில் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். எந்த வேலையையும் தங்கு தடையின்றி, விறுவிறுப்பாக முடிப்பீர்கள். ஊக்கம், உற்சாகம் கூடும். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பிரியமானவர்களின் சந்திப்பால் மகிழ்ச்சி, சந்தோஷம் அடைவீர்கள். நான்காம் இடத்தில் சனி இருப்பதால், ஜீவன காரிய விஷயங்கள் திருப்தி தரும் வகையில் இருக்காது. இந்தத் தொழிலில் இருக்கலாமா அல்லது வேறு ஏதாவது தொழிலுக்கு மாறி விடலாமா என, சிலருக்கு மனம் அலைபாயும். பணிபுரிவோர் விரும்பாத மாற்றங்களால் சிரமங்களுக்கு ஆட்படலாம். எதிர்பார்த்த அளவுக்கு எதிலும் லாபம் கிடைக்காமல் பற்றாக்குறை நிலவரம் குடிகொள்ளும். சுக்கிரன், சூரியன் சாதகமற்ற நிலையில் இருப்பதால், பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள், சகோதரிகள் தொடர்பான வகையில் திடீர் செலவுகள் ஏற்பட்டு உங்களை சங்கடப்படுத்தலாம். பழைய வாகனங்களை மாற்றி புதிய வாகனங்கள் வாங்கலாம். உங்களின் செயற்பாடுகளால் தந்தையோ அல்லது அவரின் செயற்பாடுகளால் நீங்களோ எரிச்சல் அடையலாம். மருத்துவ காரியங்கள் நினைத்தபடி நடக்காமல் இழுத்தடிக்கலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்களால் ஆதாயம் உண்டு. அவர்கள் சந்திப்பு நிகழும். இரண்டாம் இடத்தில் செவ்வாய் இருப்பதால், யாரிடமும் கடும் வார்த்தைகளைப் பேசுவதை தவிர்க்கவும். கணவன் மனைவி உறவிலும் வீண் சர்ச்சைகளை தவிர்த்து விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. சந்திராஷ்டமம் என்பதால், கவனம் அவசியம். பக்தி நாட்டம் கூடும்.

### கடகம்

இந்த வாரம் பிள்ளைகள் வழியில் எதிர்பாராத செலவுகளை சந்திக்கலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். ஆலயங்களுக்கு சென்று வழிபாடு நடத்தலாம். கேளிக்கை, கொண்டாட்டங்களால் சந்தோஷம் அடைவீர்கள். எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். நீண்ட நாள்களாக சிலருடன் பேச நேரிடலாம். பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமை அடைவீர்கள். மூன்றாம் இடத்தில் சனி இருப்பதால், முன்னேற்ற தடைகள் விலகி, நினைத்த காரியங்களைச் சாதிக்கும் வாய்ப்பு கிடைக்கும். கடந்த கால இழப்புகளை ஈடுகட்டுவீர்கள். புதிய வேலை வாய்ப்புகளை பெற முற்பட்டுள்ளோர் நல்ல தகவல்களை கேட்கலாம். இழுத்தடித்த வழக்கு விவகாரங்கள் சுமுகமாக முடியும் சூழ்நிலை உருவாகலாம். பதவி உயர்வு வாய்ப்புகள் சாதகமாகலாம். சூரியன், குரு சாதகமற்ற நிலையில் உள்ளதால், மனைவி, குழந்தைகளின் விருப்பத்தை நிறைவேற்ற முடியாமல் சாக்குப் போக்கு சொல்லி தள்ளி வைக்கலாம். தந்தையின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம். பணிபுரிவோர் அதிகாரிகளை அனுசரித்துச் செல்ல வேண்டும். மற்றவர்கள் மத்தியில் அவர்களைப் பற்றி வெளிப்படையாக விமர்சிக்க வேண்டாம். மாற்று மதத்தினர், உறவுப் பெண்கள், சகோதரிகள் போன்றவர்கள் உதவிகரமாக இருப்பர். அவர்கள் தொடர்பான காரியங்கள் நல்ல விதமாக முடியலாம். உடன் பிறப்புக்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். பம்பரமாகச் சுழன்று பணியாற்றுவீர்கள். மறதி, தடுமாற்றம் உண்டு.

### சிம்மம்

இந்த வாரம் வெறுப்பு, விரக்தி ஆட்கொள்ளும். சில விஷயங்களில் மற்றவர்களை முந்திக் கொண்டு செயல்படுவதால், அவதிகளுக்கு ஆளாகலாம். உறவினர்கள் சிலர் உங்கள் மூலம் காரியம் சாதிக்க முற்படுவர். கடன் மிகுதிகள் வசூலாகும். திடீர் செலவு, தண்டச் செலவு நேரும். முடிவுகள் எடுக்க முடியாமல் குழப்பம், தடுமாற்றங்களுக்கு ஆள்படலாம். ஏழாம் இடத்தில் குரு சாதகமாக இருப்பதால், உறவினர்கள், நண்பர்கள் அயலார் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். உங்களுக்கோ, குடும்ப உறுப்பினர்களுக்கோ சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் நல்ல திருப்பங்களைக் காணலாம். சேமிப்புத் திட்டங்களில், சீட்டுகளில் போட்ட பணம் திடீரென கைக்கு கிடைக்கலாம். இருந்தாலும், சூரியன் சாதகமற்ற நிலையில் இருப்பதால், தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள் தொடர்பான விஷயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். அவர்கள் வழியில் அன்புத் தொல்லைகளுக்கு ஆளாகலாம். சுக்கிரன் சாதகமாக இருப்பதால், ஆடம்பர விடயங்களில் நாட்டம் செல்லும். சகோதரிகள் வழியில் உருவான தொல்லைகள் விலகி நிம்மதி பெறுவீர்கள். தம்பதியர் இடையே ஏற்பட்ட மனஸ்தாபம் விலகும். பொழுது போக்கு விடயங்களால் ஆறுதலான மாறுதலான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். சனி இரண்டாம் இடத்தில் இருப்பதாலும், புதன் நீச்சம் அடைவதாலும், யாருக்கும் அவசரப்பட்டு வாக்குக் கொடுக்க வேண்டாம். சிலர் தொழில் நிமித்தம் குடும்பத்தை விட்டு பிரிந்து வெளியூர், வெளிநாடு செல்லலாம். வரும் பணவரவுகளை பெறலாம். நட்பால் நன்மையுண்டு.

### கன்னி

இந்த வாரம் தயக்கம், தடுமாற்றம் இல்லாமல் எந்த வேலையையும் துணிச்சலாகச் செய்வீர்கள். கடனுதவி, நிதியுதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில் பலன் கிடைக்கும். நீண்ட நாள் முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். ஆதாயமில்லாத அலைச்சல், திரிச்சல்களுக்கு ஆள்படலாம். உங்களுக்கு தெரிந்த ஒருவரை மற்றொருவருக்கு அறிமுகப்படுத்தி வைப்பீர்கள். மற்றவர்களுக்காக சில செலவுகளை செய்யலாம். ஏழாம் இடத்தில் சுக்கிரன் இருப்பதால், கணவன் மனைவி இடையே சிறு சச்சரவுகள் வரலாம் என்பதால், பேச்சில் நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது. வாகனங்கள் பழுதாகி தொந்தரவு கொடுக்கலாம். சகோதரிகள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தள்ளிப் போகலாம். ஜென்மத்தில் சனி இருப்பதால், முயற்சிகளில் முட்டுக்கட்டைகள் ஏற்படும். எந்த வேலையும் எளிதில் முடியாமல் இழுத்தடிக்கலாம். நீங்கள் கஷ்டப்பட்டு வேலை செய்தாலும், அதை குறை சொல்பவர்களே அதிகம். ஆறாம் இடத்தில் சூரியன் இருப்பது சாதகமான அம்சமே. அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடிவுக்கு வரும். எதிர்பாராத திடீர் பணவரவுகளை பெறலாம். தந்தை உங்கள் விஷயத்தில் அதிக பாசமாக நடந்து கொள்ளலாம். செவ்வாய் சாதகமாக இருப்பதால், உடன் பிறப்புக்கள் உதவிகரமாக இருப்பர். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறலாம். புதன் ஏழில் நீச்சம் அடைவதால், [illegible] அக்கறை காட்ட வேண்டும். தொழில் விஷயங்களிலும் கவனம் அவசியம். [illegible] உண்டு. பணவரவுகளை பெறலாம்.

### துலாம்

இந்த வாரம் ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். வாயைக் கொடுத்து மற்றவர்களிடம் வாங்கிக் கட்டிக் கொள்ளலாம். வேலைப்பளுவால் அவதிப் படலாம். உறவினர் வருகையால் உங்களின் பணிகளில் தடை ஏற்படலாம். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். கொடுத்த வாக்கை காப்பாற்றி பெருமை சேர்ப்பீர்கள். அடமானமாக வைத்த பொருள்களை மீட்கலாம். விரய ஸ்தானத்தில் சனி இருப்பதால், ஏதாவது ஒரு வழியில் செலவுகள் உருவாகிக் கொண்டே இருக்கும். அதனால், எந்தச் செலவைச் செய்தாலும், இதுதேவையானது என, யோசித்துச் செய்ய வேண்டும். நிலம், பூமி தொடர்பான விடயங்களில் அவசரப்பட்டு முடிவுகள் எடுக்க வேண்டாம். சிலர் நல்லவர் போல நடித்து உங்களை ஏமாற்றலாம் என்பதால், கவனம் அவசியம். இருந்தாலும், குரு சாதகமாக இருப்பதால், அவநம்பிக்கை விலகி, எதிலும் தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். யாருடைய பணமாவது உங்களின் கைகளில் புரளலாம். வளர்ந்த பிள்ளைகள் வழியில் வருமானம் கிடைக்கலாம். சூரியன் சாதகமற்ற நிலையில், சில விடயங்களில் அடிக்கடி, குழப்பங்கள் தடுமாற்றங்களுக்கு ஆளாகலாம். தந்தை தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்வது நன்மை தரும். சுக்கிரன் சாதகமற்ற நிலையில் இருப்பதால், தேக ஆரோக் கிய விடயங்களில் அக்கறை காட்ட வேண்டும். பெண்கள் விடயங்களில் தலையிட வேண்டாம். அலைச்சல், திரிச்சல் உண்டு. எதிர்பாராத செலவு, சந்திப்பு நிகழும்.

### விருச்சிகம்

இந்த வாரம் உற்சாகம், தெம்பாக செய்றபடுவீர்கள். மற்றவர்களுக்கு சில நல்ல யோசனைகள் சொல்வீர்கள். கடனாக கொடுத்த பணம் திரும்ப வரலாம். பெண்கள் வகையில் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். குழப்பம், தடுமாற்றங்களுக்கு ஆள்படலாம். திட்டமிட்ட காரியங்கள் முடியாமல் இடர்பாடுகள் ஏற்படலாம். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். சனி லாப ஸ்தானத்தில் இருப்பதால், உறவினர்கள், நண்பர்கள் மத்தியிலும், தொழில் ரீதியாகவும் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். மற்றவர்கள் கஷ்டப்பட்டு முடிக்கும் வேலைகளை எல்லாம் நீங்கள் எளிதாக முடிப்பீர்கள். வீடு, மனை வாங்க போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. கடந்த காலத்தில் வாங்கிப் போட்ட சொத்துக்களை இப்போது நல்ல விலைக்கு விற்கும் வாய்ப்பு உருவாகலாம். குரு நான்காம் இடத்தில் இருப்பதால், தேக ஆரோக்கிய விடயங்களிலும், தாய் உடல் நலன் தொடர்பான வகையிலும் செலவுகள் ஏற்படலாம். இருந்தாலும், அந்த குரு தொழில் ஸ்தானத்தை பார்ப்பதால், அதில் முன்னேற்றம் காணலாம். பணிபுரிவோர் விரும்பிய இடம் மாற்றம் பெறலாம். ஐந்தாம் இடத்தில் சுக்கிரன் இருப்பதால், பிள்ளைகள் வழியில் சுபச் செலவுகளை செய்ய நேரிடலாம். உறவுப் பெண்கள், மனைவி, சகோதரிகள் உதவிகரமாக இருப்பர். அவர்களின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். இருந்தாலும், ராகுவும், 8ல் கேதுவும் இருப்பதால், கொடுக்கல் வாங்கல்களில் சில நேரம் குழறுபடிகள் உருவாகலாம். உங்களிடம் வாக்குக் கொடுத்தவர்களும் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். எதிர்பாராத சந்திப்புகள் நிகழும். மறதியால் அவதியுண்டு. பணவரவை பெறலாம்

### தனுசு

இந்த வாரம் செலவுகள், அலைச்சல்கள் உருவாகும். பணப்பற்றாக்குறையால் சிலரிடம், கடன், வாங்க நேரிடலாம். தர்ம, புண்ணிய காரியங்களைச் செய்வீர்கள். ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள். சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்தவர்கள் உங்களை தேடி வரலாம். மூன்றாம் இடத்தில் சூரியன் இருப்பதால் குத்தகை, எதிர்கால முன்னேற்றத்திற்கான திட்டங்களை செயற்படுத்துவீர்கள். அரசு தொடர்பான கான்ட்ராக்ட், உதவி பெற மேற்கொண்ட முயற்சிகள் கைகூடி வரலாம். உத்தியோகஸ்தர்கள் அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர். மருத்துவ சிகிச்சைகளும் மனதிற்கு ஆறுதல் தரும் வகையில் அமையலாம். சுக்கிரன், புதன் சாதகமாக இருப்பதால், பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் உதவிகரமாக இருப்பர். அவர்களை நம்பி இறங்கிய காரியங்கள் நல்ல விதமாக முடிவுக்கு வரலாம். பத்தாம் இடத்தில் சனி இருப்பதால், வேலைப்பளு தொடரும். அதிக நேரம் வேலை பார்த்தாலும், குறைந்த அளவு ஆதாயமே கிடைக்கலாம். பணிபுரிவோருக்கு பொறுப்புகள் கூடிக் கொண்டே இருக்கும். ஜென்மத்தில் ராகு இருப்பதாலும், ஏழாம் இடத்தில் கேது இருப்பதாலும், கூட்டுத் தொழில் விவகாரங்களில் கவனமாக இருப்பது நல்லது. நீண்ட தூர பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும். சகோதரர்கள், பங்காளிகள் வகையில் சிரமங்களே அன்றி, நன்மையில்லை. தடை, தாமதங்கள் ஏற்படலாம். பணம் வரும்.

### மகரம்

இந்த வாரம் சந்திரன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால், பணவரவுகளைப் பெறலாம். கடன் மிகுதிகள் வசூலாகும். உறவினர்கள், நண்பர்கள் சந்திப்பால், விருந்து, விசேஷங்களால் சந்தோஷம் அடைவீர்கள். சில வேலைகளுக்கு ஒன்றுக்கு பல முறை அலைய நேரிடலாம். எதுவும் குறைந்த செலவில் முடியாமல், அதிகமாகச் செலவாகும். உடல் ரீதியான உபாதைகளால் உற்சாகம் குறையலாம். இரண்டாம் வீட்டில் குரு இருப்பதால், போட்டிகள், எதிர்ப்புகள் இல்லாமல் எதையும் சுலபமாக முடிக்கும் வல்லமை அதிகரிக்கும். பிள்ளைகள் செயற்பாடுகளால் மகிழ்ச்சி, சந்தோஷம் அடைவீர்கள். பொன், பொருள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறலாம். வரவுகளைப் பற்றி கவலைப்படாமல் தாராளமாக செலவு செய்வீர்கள். அதேநேரத்தில், சூரியனும் அதே வீட்டில் இருப்பதால், குதர்க்கமான பேச்சுக்களை வாக்குவாதங்களை தவிர்க்க வேண்டும். சிலருக்கு கண் தொடர்பான பிரச்னைகள் ஏற்படலாம். சுக்கிரன் சாதகமாக இருப்பதால், பெண்கள், நீண்ட தூர பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். பூர்வீக சொத்துக்களாலும் சிலர் ஆதாயம் பெறலாம். பல நாட்களாக இழுத்தடித்த சொத்துக்களை விற்கும் சூழ்நிலை உருவாகலாம். புதன் சாதகமற்ற நிலையில், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வகையில் இடையூறுகள், சிரமங்கள் உருவாகலாம். நிலம், பூமி விவகாரங்களில் அவசரம் வேண்டாம். எதிர்பாராத உதவிகள் கிடைக்கலாம். மறதி, தண்டச் செலவு நேரும்.

### கும்பம்

இந்த வாரம் குடும்பத்தில் கலகலப்பு, சந்தோஷம் குடிகொள்ளும். நீண்ட நாள்களாக வராத பணவரவுகள் வரலாம். மற்றவர்களுக்கு தெரியாமல் ரகசியமாக சில காரியங்களைச் செய்வீர்கள். புதிய அனுபவங்களைப் பெறலாம். நண்பர்கள் வட்டம் விரிவடையும். அலைச்சல் இல்லாமல் இருந்த இடத்தில் இருந்தே சில காரியங்களை முடிப்பீர்கள். ஜென்மத்தில் குருவும், அஷ்டமத்தில் சனியும் இருப்பதால், எந்த வேலையும் எதிர்பார்த்த வேகத்திற்கு நடக்காமல் மெதுவாக நடக்கலாம். பல விடயங்கள் பற்றி மனக்கோட்டை கட்டி, அது தகர்ந்து போகலாம். உறவினர்கள் மத்தியில் உங்களின் கௌரவம் பாதிக்கப்படாமல் இருக்க, அவர்களிடம் உதவி பெறுவதை தவிர்க்க வேண்டும். தொழில் ரீதியான விஷயங்களிலும் கவனம் அவசியம். ஜென்மத்தில் சூரியன் இருப்பதால், எதற்கெடுத்தாலும் கோபம் உண்டாகலாம். இரண்டாம் இடத்தில், சுக்கிரன், புதன் சாதகமாக இருப்பதால், சுக சௌகரியங்கள் அதிகரிக்கும். வீட்டில் வசதி வாய்ப்புகளை அதிகரிக்க முற்படுவீர்கள். புதிய உறவுப் பெண்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கும். பழைய வாகனங்களை மாற்றி புதிய வாகனங்கள் வாங்கலாம். தாயார் வகையில் ஏற்பட்ட மனஸ்தாபம் நீங்கி பாசம் அதிகரிக்கும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், சகோதரர்கள், பங்காளிகள், மாற்று மதத்தினர் உங்களின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பர். சொத்து விவகாரங்களில் ஏற்பட்ட சிக்கல்கள் தீரலாம். பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் ஆதரவு, பாராட்டைப் பெறுவர். செலவு, அலைச்சல் உண்டு. ஊக்கம், உற்சாகமாக செயல்படுவீர்கள்.

### மீனம்

இந்த வாரம் தொழில் ரீதியாக சிலர் உங்களைப் பாராட்டலாம் அல்லது விமர்சிக்கலாம். வெளியூர் பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும். உடல் உபாதைகளால் மருத்துவச் செலவுகள் ஏற்படலாம். திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடி நடக்கலாம். தயக்கமின்றி எந்த விஷயத்திலும் துணிச்சலாக இறங்கி சாதிப்பீர்கள். கணவன் மனைவி இடையே பாசம் அதிகரிக்கும். ஏழாம் இடத்தில் சனி இருப்பதால், கூட்டுத் தொழிலில் சிரமங்கள் ஏற்படலாம். வாழ்க்கைத் துணைவருக்கு உடல் நல பாதிப்பு ஏற்படுவதால், அவர்களின் வேலைகளையும் நீங்கள் சேர்த்துச் செய்யலாம். தொழில் ரீதியான விஷயங்கள் விரும்பும் வகையில் இருக்காது. வாங்கிய கடனுக்கு வட்டி கட்ட, மற்ற இடங்களில் கைமாத்து வாங்கி சமாளிக்க நேரிடலாம். ஜென்மத்தில் சுக்கிரன் உச்சபலத்துடன் இருப்பதால், ஆடம்பர விஷயங்களில் நாட்டம் செல்லும். விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் எந்தக் காரியத்தையும் செய்வீர்கள். பெரிய மனிதர்களின் நட்பை பெறலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்களால் ஆதாயம் இல்லை. அவர்கள் வகையில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வராமல் இழுத்தடிக்கலாம். பிள்ளைகள் தொடர்பான விஷயங்களில் [illegible] நடந்து கொள்வது நன்மை தரும். மற்றவர்களை நம்பி எதையும் செய்வதை விட, [illegible]க்கு உதவி என, செயற்படுவது நல்லது. தந்தை அரசியல்வாதிகளால் ஆதாயம் இல்லை. பணம் வரும். அடகு வைத்த பொருள்களை மீட்கலாம். சோர்வு, சோம்பல் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தல் 2010 யாழ் மாவட்டம்

—நான் உங்கள் வீட்டுப் பிள்ளை இது ஊரறிந்த உண்மை

நான் பதவியேற்று மூன்று மாதங்களில் மாண்பு மிகு ஜனாதிபதியின் ஆதரவுடன் பாதுகாப்பு வலயத்தை கட்டம் கட்டமாக அகற்றுவேன்



www.angajan

X 1

அங்கஜன் இராமநாதன்

Angajan Ramanathan B.ENG(HONS) MBA

இளமை-துடிப்பு-செயற்றிறன்


## பலாலிவீதி சேதம்: பயணிப்போர் பாவம்

கைதடி மார்ச் 15

உரும்பிராய்ச் சந்தியிலிருந்து புன்னாலைக் கட்டுவன் வரையுள்ள பலாலி வீதியின் ஒருபகுதி கடந்த பல வருடங்களாகச் சீர்செய்யப்படாமையினால் அவ் வீதியால் பயணம் செய்வோர் பெரும் அசௌகரியங்களை அனுபவிப்பதாகக் கூறப்படுகின்றது.

மேற்படி வீதி திருத்தப்படாத நிலையில் குண்டும் குழியுமாகக் காணப்படுவதனால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன. இதனைச் சீர் செய்வதற்காக இராணுவத்தினர் மண்ணைப் போட்டு அக்குழிகளை நிரப்பியுள்ளதையும் காண்முடிகின்றது. ஆனாலும் தற்போது வீசும் காற்றினால் வாகனங்கள் செல்லும் போது மண் அள்ளப்பட்டு வீதியால் பயணம் செய்யும் மாணவர்கள், அலுவலக ஊழியர்கள் போன்றோரின் உடைகள் மீதும் படிவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எனவே இவ்விடத்தில் சம்பந்தப்பட்டோர் உடனடிக் கவனமெடுத்துஇவ் வீதியை உடன் சீர் செய்து தர வேண்டும் எனவும் மக்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (04 288)

## வார்த்தையைத் தாங்கினால் அது உன்னைத் தாங்கும்

### தவக்காலச் சிந்தனை

பிள்ளாய் இதை கவனி! ஞானமுள்ளவனாயிரு, உன் மனதை நன்நெறியில் செலுத்து. குடிகாரரோடு சேராதே.... குடிகாரரும் பெரும் தீனியரும் முடிவில் ஏழைகளாவர். உண்டு குடித்த மயக்கம் கந்தையை உடுத்தும். (நீதிமொழிகள் 23:19-21)

குடும்பத்தைக் குலைப்பது குடியால். வார்த்தை மாறுவது குடியால். குழந்தைகள் சீரழிவது குடியால், வறுமை உன் வீட்டில் குடியிருக்கும். நீ மட்டும் உண்டு குடித்தால் உன் மனைவி, பிள்ளைகள் கந்தையை உடுப்பார்கள். உன் பிள்ளையின் மனநிலை எப்படி கெட்டுப் போகும் நினைத்துப்பார். ஆண்டவர் வார்த்தைக்குச் செவி கொடு. "உலர்ந்த எலும்புகளே! ஆண்டவர் வாக்கைக் கேளுங்கள்" (எசேக்கேல் 37:4) அன்று ஆண்டவரின் வார்த்தை உலர்ந்த எலும்புகளுக்குள்ளும் உயிர்மூச்சுப் புகுந்ததே. அன்று சொன்னவர் இன்றும் சொல்கின்றார். "கல்லை அகற்றி விடுங்கள்" (யோவா 11:39) ஆண்டவரின் வார்த்தை உன் உள்ளத்தில் புகாமல் தடுக்கும் கல் உன்னிடம் என்ன? காமமா, குடியா, கோபமா, எரிச்சலா, மன்னிக்க முடியாத தன்மையா இந்தக் கற்களை நீதான் புரட்டவேண்டும். மார்த்தாலிடம் ஆண்டவர் கேட்கின்றார். "என்னை நம்புகின்றாயா" நித்தியமானவர் உன்னையும் என்னையும் கேட்கின்றார். உன் ஆத்துமாவுக்கு உயிர்மூச்சு வேண்டுமா? வார்த்தையானவரை இதயத்தில் தாங்கு. "உன் சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக் 1:38) அந்த வார்த்தை என்ற உண்மையைத் தாங்கினதால்தானே அந்த அன்னை இன்று அமலோற்பவ மாதாவாக இருக்கிறார். நீ வார்த்தையை தாங்கினால் அது உன்னைத் தாங்கும். **அருட்தந்தை வி.இக்னேஷியஸ், சே.ச.**


## මහජන සම්පත / மஹஜன சம்பத / Mahajana Sampatha

**12.03.2010**

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2215

வெற்றி எழுத்து: U

வெற்றி எண்கள்: 0 0 7 9 9 7

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | U | 0 | 0 | 7 | 9 | 9 | 7 | ரூபா.10,000,000/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 0 | 0 | 7 | 9 | 9 | 7 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | | | 0 | 7 | 9 | 9 | 7 | ரூபா. 100,000/= | பரிசுகள் 16 |
| 3 பரிசுகள் | | | | 7 | 9 | 9 | 7 | ரூபா. 10,000/= | பரிசுகள் 144 |
| 4 பரிசுகள் | | | | | 9 | 9 | 7 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1338 |
| 5 பரிசுகள் | | | | | | 9 | 7 | ரூபா. 100/= | பரிசுகள் 13356 |
| 6 பரிசுகள் | | | | | | | 7 | ரூபா. 20/= | பரிசுகள் 131810 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 0 | 0 | 7 | 9 | 9 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 12 |
| 8 பரிசுகள் | | 0 | 0 | 7 | 9 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 123 |
| 9 பரிசுகள் | | 0 | 0 | 7 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1366 |
| 10 பரிசுகள் | | 0 | 0 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 13259 |
| 11 பரிசுகள் | U | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 52769 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை

**Rs. 14,447,730.00**

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு

தேசிய லொத்தர் சபை

234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk




# 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்



**மண்ணில்: 06.06.1921**

**விண்ணில்: 13.06.2010**



## அமரர் நாகேந்திரர் மனுவேற்பிள்ளை எற்வேட் J.P.

*(இணக்கசபை, பிரஜைகள் குழுத் தலைவர்)*

கடந்த 13.02.2010 சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்த எமது அன்பின் குடும்பத் தலைவரின் மரணச்செய்தி கேட்டு வருகைதந்த உற்றார், உறவினர், நண்பர்கள், தொலைபேசி மூலம், தந்தி மூலம், துண்டுப்பிரசுரம் மூலம், பத்திரிகை மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும், மலர் வளையம் வழங்கி அஞ்சலி செலுத்தியோர், வருகைதந்து ஆறுதல் கூறிய கௌரவ அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும், முன்னாள் பேராயர் அருட்கலாநிதி எஸ்.ஜெபநேசன் அவர்களுக்கும், இன்னாள் பேராயர் அருட் கலாநிதி D.S.தியாகராசா அவர்களுக்கும், மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை அவர்களுக்கும், தீவக பொலிஸ் அத்தியட்சகர் பிரேமரட்ணா அவர்களுக்கும், நெடுந்தீவு கடற்படை அதிகாரி, பொலிஸ் பொறுப்பதிகாரி, உத்தியோகத்தர்களுக்கும், குருமார்களுக்கும், அரச - அரசசார்பற்ற அதிகாரிகளுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் அஞ்சலி செலுத்திய உதயன் பத்திரிகை நிறுவனத்தினருக்கும் நினைவு மலரை வெளியிட்டு உதவிய PQ மைக்றோ டிஜிற்றல் நிறுவனத்திற்கும் அந்தியகால சேவை E.Son நிறுவனத்திற்கும் இறுதித் திருப்பலியை நெடுந்தீவு புனித சவேரியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுத்த பங்குத்தந்தை அருட்பணி அமல்ராஜ் அடிகளாருக்கும் அனைத்து வாழ் அன்பு உள்ளங்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்.

**அன்னாரின் ஆன்மா சாந்தியடைய புனித சவேரியார் மூலம் எல்லாம் வல்ல இறை இயேசுவை வேண்டுகின்றோம்.**

நெடுந்தீவு-13. மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
021 321 3640, 021 321 9797. பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(5-565685)



# வாகன உதிரிப்பாகங்களுக்கான விற்பனை ஊக்குவிப்பு உத்தியோகத்தர் (Sales Promotion Officer)

**டக்லஸ் அன்ட் சன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்** நிறுவனத்தார் ஆகிய நாம், இலங்கையில் கடந்த 25 வருடகாலமாக இறக்குமதி செய்யப்பட்ட வாகன உதிரிப்பாகங்கள் பற்றறி மற்றும் டயர் ஆகியவற்றின் விற்பனையில் முன்னோடியாகத் திகழ்கிறோம்.

நாம் எமது பொருட்களை யாழ் மாவட்டத்தில் சந்தைப்படுத்தவும் விற்பனை செய்யவும் விற்பனை ஊக்குவிப்பு உத்தியோகத்தர்களை தெரிவுசெய்ய உள்ளோம்.

தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்களின் கடமையானது எமது பிரசித்தபெற்ற பொருட்களை உதிரிப்பாகக் கடைகளிலும் வாகனம் திருத்தும் இடங்களிலும் சந்தைப்படுத்தவும் விற்பனை செய்யவும் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் 32 வயதிற்கு உட்பட்டவராகவும் G.C.E.(O/L), G.C.E.(A/L) சித்தியடைந்தவராகவும் தமிழில் வியாபார நிமித்தம் சரளமாகப் பேசக்கூடியவராகவும் அலுவலக செயற்பாடுகள் நிமித்தம் ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் ஓரளவு தேர்ச்சி பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் வாகனம் ஒட்டும் அனுமதிப் பத்திரமும் வைத்திருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு தகுந்த பயிற்சியும் கவர்ச்சியான சம்பளம் மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனவுகளும் வழங்கப்படும். மேலதிகமாக மோட்டார் சைக்கிளும் எரிபொருள் செலவு மற்றும் பல கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**விண்ணப்பதாரிகள் தயவுசெய்து 7 நாட்களுக்குள் விண்ணப்பிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
**டக்லஸ் அன்ட் சன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்**
290/25, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொடர்பு கொள்ள வேண்டிய நபர்:
**இ. சுந்தரநாதன் தொலைபேசி இலக்கம்: 0772260340**

GT RADIAL Experience the Performance - Discover the Value · YUASA · GLOBAL · INCOE · UNION JAPAN · EXEDY · MITSUBOSHI · 555 · LUK · TOKICO · NOK


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உ

தில்லையம்பதியாள் துணை



சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் தில்லையம்பதி

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்

## நூதனபஞ்சதள இராஜகோபுர பஞ்சகுண்டபக்ஷ

# மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்

**விரோதி வருஷம் பங்குனித்திங்கள் 4ஆம் நாள் (18.03.2010) வியாழக்கிழமை காலை 10.18 மணி முதல் 11.30 மணி வரை**

அம்பிகை அடியார்களே!

இலங்கைத்தீவின் சிரமென போற்றப்படும் யாழ்ப்பாணம், கோண்டாவில் நகரில் மாண்பான தெய்வீகமாட்சி நிறைதலமான கோண்டாவில் தில்லையம்பதியில் சகல சௌபாக்கியங்களையும் வாரிவழங்கும் ஆதிசக்தியாம் அன்னை ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயிலில் இருபுறமும் நாதமணிஓசை ஒலிக்க பஞ்சதளமும் அழகிய சிற்பங்களும், கலைமிகுவர்ணங்களும், மெருகூட்டும் சுந்தரஇராஜகோபுர கும்பாபிஷேகப்பெருவிழா ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்கலகரமான விரோதி வருஷம் பங்குனித்திங்கள் 4ஆம் நாள் (18.03.2010) வியாழக்கிழமை சித்தாமிர்தயோகமும், அச்சுவினிநட்சத்திரமும் கூடிய மு.ப. 10.18 மணிமுதல் 11.30 மணிவரையுள்ள இடபலக்கின சுபமுகூர்த்த வேளையில் நடைபெற அன்னையின் திருவருள் கிடைக்கப்பெற்றுள்ளது. அடியார்கள் அனைவரும் இப்பெருஞ்சாந்திவிழாவிலும் அதற்கு முன்பு நடைபெறும் வழிபாடுகளிலும் ஆசாரசீலர்களாக வருகை தந்து அம்பாளின் இஷ்டசித்திகளைப் பெற்றுய்வீர்களாக.

## கிரியா கால நிகழ்வுகள்

**2 ஆம் நாள் (16.03.2010) செவ்வாய்க்கிழமை**

காலை 06.00 மணிமுதல் 06.21மணி வரையுள்ள கோதுளிகா முகூர்த்தத்தில் பிரசன்ன மஹாகணபதிபூஜை, பஞ்சகவ்விய வருணபூஜை, ஜபம், மஹாகணபதிஹோமம், பிரமச்சாரிபூஜை, விநாயகர்அநுபூதி, பாராயணம். மாலை 04.00 மணி சுத்திபுண்ணியாகம், வாஸ்துசாந்தி, நவக்கிரகமகம், கோளாறுபதிகம் பாராயணம், தானாதிகள், மிருத்சங்கிரணம்.

**3 ஆம் நாள் (17.03.2010) புதன்கிழமை**

காலை 07.00 மணி பிரதிஷ்டா சங்கற்பம், தேவபிராமண அனுஞ்ஞை, காலை 08.05 மணிமுதல் 08.45 மணி இராஜகோபுர கலசஸ்தாபனம், கங்கணபந்தனம், சிவாச்சார்யபூஜனம், கடஸ்தாபனம், யாகபூஜை, பஞ்சாக்கினி, விபஜனம், பாவனாபிஷேகம், ஸ்ரீசக்திஹோமம், லலிதாசஹஸ்ரநாமஹோமம், அபிராமி அந்தாதி பாராயணம், மாலை 04.00 மணி கணேசவர்த்தனம், பஞ்சகவ்யபூஜை, வருணஆராதனை, யாகபூஜை, மகாதீபலட்சுமிபூஜை, தீபஒளிவிழா, திரவியஹோமம் லலிதாதிரிசதிநாமஹோமம்.

**4ஆம் நாள் (18.03.2010) வியாழக்கிழமை**

காலை 07.00 மணி தேவபாராயணம், யாகபூஜை, லலிதாஅஷ்டோத்திரசதநாமஹோமம், அக்கினி சம்யோஜனம், வசுத்தாரஹோமம், மகாபூரணாகுதி, உபசாரஆகுதி. காலை 09.00 சோடஷஉபசாரபூஜை, ஹோமசமர்ப்பணம், வேதஸ்தோத்திரதேவபாராயணங்கள், கீதஉபசாரம், நந்திதாளம், மஹாபேரீதாளம், ஆசீர்வசனம், அந்தர்பலி பஹிர்பலி, தானாதிகள், கும்பஉத்தாபனம், வீதியுலா, காலை 10.30 மணி எட்டுத்திக்கும் எதிர்ஒலிக்கும் ஓங்காரநாதமணிக்கோபுர கும்பாபிஷேகம், 10.45 மணி சுந்தர பஞ்சதள இராஜகோபுரகும்பாபிஷேகம், பகல் 11.00 மணி அன்னை சிவகாமி அம்பாள் பரிவாரமூர்த்திகள் அபிஷேகம், 12.00 மணி விசேடபூஜை, குருவணக்கம், ஆசியுரை, சம்பாவனை, பிரசாதம்வழங்கள், மகேஷ்வரபூஜை (அன்னதானம்) மாலை 05.30 மணி விசேடபூஜை, வசந்த மண்டபபூஜை, சர்வஅலங்காரபூஷணியாக தில்லைச்சிவகாமி அம்பாள் இராஜகோபுர மங்களதரிசனம் திருவீதியுலா.

## கும்பாபிஷேக குருமார் விபரம்

**இராஜகோபுர கும்பாபிஷேக பிரதமகுரு**
'வேதாகம பூஷணம்'
**பிரம்மஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக்குருக்கள்**
(ஆதீனகுரு ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர்கோயில், மருதனாமடம்)

**சர்வபோதகம்**
'மந்திரகிரியா சுரபி'
**சிவஸ்ரீ குமார சரவணபவக்குருக்கள்**
(இந்துமத விசேடகுரு, இணுவில்)

**சர்வசாதகம்**
**பிரம்மஸ்ரீ நா.பிரசாந்தசர்மா**
**பிரம்மஸ்ரீ ச.சாந்தரூபசர்மா**

**சிவஸ்ரீ கா.திவாகரக்குருக்கள்**
(கருணாகரப்பிள்ளையார் கோவில், உரும்பிராய்)
**சிவஸ்ரீ ஸ்ரீ.வைகுந்தக்குருக்கள்**
(நல்லூர்,கந்தசாமி கோவில்)
**சிவஸ்ரீ சா.நிவாசக்குருக்கள்**
(சந்திரசேரப்பிள்ளையார் கோவில், கல்வியங்காடு )
**சிவஸ்ரீ ச.சுதாகரக்குருக்கள்** (சுன்னாகம்)

**ஆசியுரை**
'சிவாகம ஞானபாஸ்கரன்'
**சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள்**
(ஸ்ரீ கன்னகா பரமேஸ்வரி தேவஸ்தானம், வட்டுவினி இணுவில்)

**ஸ்தானிக குரு**
**பிரம்மஸ்ரீ மு.குருபரசர்மா**
(ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் தில்லையம்பதி)

**யாகசம் ரக்ஷைகர்கள்**
**பிரம்மஸ்ரீ வாசு விஷ்ணுவர்த்தனசர்மா**
**பிரம்மஸ்ரீ சிவசுதசர்மா**
**பிரம்மஸ்ரீ சிவபாலசர்மா**

இராஜகோபுர கோபுர நிர்மாணிப்பு
தமிழ் நாடு கொள்ளிடம் சீர்காழி
ஸ்தபதி
க.புருஷோத்தமன் குழுவினர் (தென்னிந்தியா)

இராஜகோபுர கதவு நிர்மாணம்
சிற்பாசாரியார் க.இலங்கநாதன்
(கோண்டாவில் கிழக்கு)

வர்ணஅமைப்பு
என்.நீதன் ஆட்ஸ் குழுவினர்
(தில்லையம்பதி)

மங்கள வாத்தியம்
பிரசாத் குழுவினர் (கோண்டாவில்)
தேவானந் குழுவினர் (கோண்டாவில்)

**கோபுரதர்சனம் இருவட்டு வெளியீட்டுவிழா**
**நண்பகல் 12.00 மணி**

19.03.2010 வெள்ளி இலட்சார்ச்சனை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெற்று 11ஆம் நாள் பங்குனி உத்தர சங்காபிஷேகம் நடைபெறும்.

கோபுரதரிசனம் கோடி புண்ணியம்

"தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே சரணம்"

தில்லையம்பதி.

இங்ஙனம்
பரிபாலனசபை,
இராஜகோபுர திருப்பணி சபை.

Nisha Tel: 021 5105678

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஒகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

# கணக்கீடு - 01 | பகுதி - I

01. நிதிக் கணக்கீட்டின் பிரதான நோக்கமாவது,
   1) கணக்கு புத்தகங்களில் அனைத்து நடவடிக்கைகளையும் பதிவு செய்வதாகும்.
   2) கிரயங்களின் பகுப்பாய்வை விவரமான முறையில் முகாமைக்கு வழங்குது.
   3) நிறுவனத்தின் நிதிசார் பெறுபேறுகளை ஏற்றுக்கொள்ளப்பட்ட நிதியறிக்கைகள் மூலம் முன்வைத்தல் ஆகும்.
   4) இலாபங்களைக் கணித்தல் ஆகும்.
   5) உள்ளகத் தகவல்களை வழங்குதல் ஆகும்.

02. தனிவியாபாரி ஒருவரது மூலதனத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் பெறுபேறு ஒன்றாக இருப்பது,
   1) கடன் கொள்வனவு.
   2) காசோலை மூலம் கடன்கொடுத்தோர் ஒருவரைத் தீர்த்தல்.
   3) நிலையான சொத்து ஒன்றைக் கடனுக்கு கொள்வனவு செய்தல்.
   4) காசாகச் செலுத்தபட்ட சம்பளம்.
   5) மேற்கூறிய அனைத்தும் ஆகும்.

03. தனிவியாபாரியான வினித் ஆரம்ப மூலதனமாக 20,000/= உம், இறுதி மூலதனமாக 7,500/= ரூபாவையும் கொண்டுள்ளார். குறித்த ஆண்டு காலத்தில் அவர் புதிய மூலதனமாக 3,000 ரூபாவையும் அறிமுகப்படுத்தியதோடு தனது தேவைகளுக்காக 6,000ருபாவை எடுப்பனவு செய்திருந்தார். எனின், அவ்வருட இலாபநட்டத் தொகை,
   1) 9,500/= 2) 1,500/= 3) 7,500/=
   4) 17,500/= 5) மேற்கூறிய எதுவுமன்று.

04. 2009 ஜனவரி 01 இல் வாடிக்கையாளரான சுனிலின் கணக்கில் 7,000/= வருமதியாக இருந்தது. அம் மாதத்தில் அவர் 4,000/= பெறுமதியானப் பொருட்களை வாங்கியதுடன் 2,500/= பெறுமதியான பொருட்களைத் திருப்பி அனுப்பியிருந்தார். அவரால் செலுத்தப்பட்ட காசு 5,000 ரூபா எனின், ஜனவரி 31 இல் சுனிலின் கணக்கின் மீதி,
   1) 3,500/= 2) 4,500/= 3) 5,000/= 4) 6,000/= 5) 5,500/=

05. 750 ரூபாவான கொள்வனவுத்திரும்பல்கள் தவறுதலாக விற்பனைத்திரும்பல் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டது. எனினும், அது வழங்குநரின் கணக்கில் சரியாகப் பதிவு செய்யப்பட்டது. இதனால் பரீட்சை மீதியின் மொத்த தொகைக் காட்டுவது,
   1) செலவு நிரல் தொகை 750/= வரவு மீதி நிரலின் தொகையை விட அதிகம்.
   2) வரவு நிரல் தொகை 750/= செலவு மீதி நிரலின் தொகையைவிட அதிகம்.
   3) செலவு நிரல் தொகை வரவு நிரல் தொகையை விட 1,500/= அதிகம்.
   4) வரவு நிரல் தொகை செலவு நிரல் தொகையை விட 1,500/= அதிகம்.
   5) வரவு நிரல் தொகை செலவு நிரல் தொகையை விட 1,440/= அதிகம்.

06. அலுவலகச் சாதனங்களின் வழங்குநரிடமிருந்து பெறப்பட்ட பட்டியல் ஒன்று எழுதுபொருள் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இவ் வழுவானது,
   1) விடுபாட்டு வழுவாகும். 2) மூலப்பதிவு வழுவாகும்.
   3) ஈடு செய்யும் வழுவாகும். 4) கோட்பாட்டு வழுவாகும்.
   5) கணக்கு மாறி பதிதல் வழுவாகும்.

07. 2007ஆம் ஆண்டில் எழுது கருவிகளுக்காகச் செலுத்திய தொகை 1,850/= 2007 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் கையிலுள்ள காகிதாதிகளின் தொகை 150/= ஆகவும், வெளியிலுள்ள பட்டியல் நிலுவைத்தொகை 100/= ஆகவும் இருந்தது. 2005ஆம் வருட முடிவில் உள்ள கையிலுள்ள காகிதாதிகள் 600/= உம் வெளியிலுள்ள காகிதாதிகளின் பட்டியல் நிலுவைத் தொகை 130/= உம் ஆகும். 2007 ஆம் ஆண்டில் இலாபநட்டக் கணக்கில் தாக்கல் செய்த காகிதாதிகளின் தொகை யாது?
   1) 1,430/= 2) 1,340/= 3) 1,400/= 4) 2,430/= 5) 4,100/=

08. சரத் வணிகமொன்று ஜனவரி மாதத் தொடக்கத்தில் வங்கி மீதியாக 30,000 ரூபாவைக் கொண்டிருந்தது. குறித்த மாதத்தில் மூலப்பொருட்களான 20,000/= பட்டியல் ஒன்று 15% வியாபாரக் கழிவுக்கும் 10% காசுக் கழிவுக்கும் அமையக் கொடுப்பனவு காசோலை மூலம் நிகழ்ந்தது. 5% காசுக்கழிவுக்கமைய 6,000/= மீதியுடைய கடன்பட்டோரிடம் காசோலை பெறப்பட்டு வைப்பிலிடப்பட்டது. குறித்த மாத இறுதியில் காசேட்டு வங்கி மீதித் தொகையானது,
   1) 15,300/= 2) 10,000/= 3) 5,300/= 4) 20,000/= 5) 15,000/=

09. நிலையான சொத்துக்களின் கணக்கு தேறிய புத்தகப்பெறுமதியாக 76,300 ரூபாவைக் காட்டியது. 20,000 கிரயமுடைய சொத்தொன்று 5,000/= இற்கு விற்கப்பட்டது. இவ்வகற்றலில் நட்டம் 8,000/=. இவ்வகற்றல் தொடர்பில் நிலையான சொத்துக் கணக்கில் பதிவு எதுவும் இடம்பெறவில்லை. ஆகவே, நிலையான சொத்துக் கணக்கில் காணப்பட வேண்டிய சரியான மீதி யாது?
   1) 63,300/= 2) 64,400/= 3) 62,000/= 4) 73,500/= 5) 73,600/=

10. இலங்கை கணக்கீட்டு நியமம் 18 இன் படி சொத்தின் பெறுமானத்தேய்விடக்கூடியத் தொகை எனப்படுவது,
   1) சொத்தின் கிரயத்தின் பெறுமதி.
   2) சொத்தின் இறுதிப் பெறுமதி.
   3) சொத்தின் கிரயத்திலிருந்து இறுதிப் பெறுமதியைக் கழித்துவரும் தொகை.
   4) சொத்தின் கிரயத்துடன் இறுதிப் பெறுமதியைக் கூட்டிவரும் தொகை.
   5) சொத்தின் கிரயத்தை பயன்படுகாலத்தினால் வகுத்து வரும் தொகை.

11. சூர்யா வணிகத்தின் 31.12.2008 இல் உள்ள பரீட்சை மீதியிலுள் சில விவரங்கள் வருமாறு,

| விவரம் | வரவு | செலவு |
|---|---|---|
| விற்பனைகள் | | 73,716 |
| திரும்பல்கள் | 5,863 | 3,492 |
| கழிவுகள் | 871 | 1,267 |

வியாபாரக் கணக்கில் வெளிப்படுத்தப்பட்ட தேறிய விற்பனைகளின் தொகையானது,
   1) 66,586/= 2) 66,982/= 3) 67,853/= 4) 79,224/= 5) 64,982/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## SPECIAL GUIDE FOR 2010 A/L COMMERCE STUDENTS

12. ஆதவன் வணிகத்தின் தொழிற்படு மூலதனம் 54,300/= ஆக இருந்தது. பின்னர், பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்ந்தேறின.
   * கடன்கொடுத்தோருக்கு காசோலை மூலம் கொடுப்பனவு 4,000/=
   * 250 ரூபா அறவிடமுடியாக் கடனாகப் பதிவழிக்கப்பட்டது.
   * 100 ரூபா கிரயமானப் பொருட்கள் 230 ரூபாவிற்குக் கடனுக்கு விற்கப்பட்டன.
   தற்போதைய தொழிற்படு மூலதனமானது,
   1) 54,420/= 2) 54,530/= 3) 54,180/= 4) 54,400/= 5) 54,550/=

13. வணிகமொன்றின் தொடக்க இருப்புக்கள் 40,000/= ஆகவும் முடிவுப்பொருள் இருப்புக்கள் 20,000/= ரூபாவும் ஆகும். கொள்வனவுத் திரும்பல்கள் 10,000 ரூபாவாகவும் விற்பனைக் கிரயம் 160,000 ரூபாவும் எனின், கொள்வனவுகளின் தொகை,
   1) 100,000/= 2) 140,000/= 3) 125,000/=
   4) 175,000/= 5) 150,000/=

14. கிருஷ்ணா வணிகத்தில் காசுப் புத்தகத்திலுள்ள வங்கிநிரல் 485 ரூபாவைச் செலவு மீதியாகக் காட்டியது. பின்னர், பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டன.
   * காசு விற்பனைகள் 1,450/= (150/= VAT உள்ளடங்கலாக)
   * வாடிக்கையாளரிடமிருந்து பெறுவனவுகள் 2,400/=
   * கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவுகள் 1,800/= (காசுக் கழிவுகள் 5% கழிக்கப்படும்)
   * வாடிக்கையாளரிடம் பெற்று மதிப்பிழந்த காசோலைகள் 250/=
   தற்போது காசுப் புத்தக வங்கி நிரலின் மீதியானது,
   1) 1,255 வரவு 2) 2,375 செலவு. 3) 1,405 செலவு.
   4) 1,045 வரவு 5) 1,905 செலவு.

15. பின்வருவனவற்றில் முதன்மை புத்தகமொன்றாக இருப்புது,
   1) இரட்டைப்பதிவுக் கணக்குப் பதிவியல்கள் விதிகள் பிரயோகிக்கப்படுவது இல்லை.
   2) பேரேட்டுக் கணக்குகள் பேணப்பட்டிருக்கும்.
   3) பேரேட்டுக் கணக்குகளில் பதிவதற்கு முன்பாக கொடுக்கல்வாங்கல்கள் பதியப்பட்டிருக்கும்.
   4) துணைக் கணக்குகள் வைத்திருக்கப்படும்.
   5) கவனத்தை ஈர்ப்பதொன்றான வடிவமாக இருக்கும்.

16. வணிகமொன்றினால் தயாரிக்கப்பட்ட இலாபநட்டக் கணக்கு ஒன்றில் 2,000/= அட்டுறுச் செலவுகள் கருத்திற்கொள்ளப்படாமலும் இறுதித்தொக்குகள் 1,300/= ஆல் மிகையாக மதிப்பிடப்பட்டும் காணப்பட்டன. இவை காரணமாக தேறிய இலாபத்தில் ஏற்பட்ட பெறுபேறானது,
   1) தேறிய இலாபம் 700 ரூபாவால் கூட்டிக் காட்டப்படும்.
   2) தேறிய இலாபம் 700 ரூபாவால் குறைத்துக் காட்டப்படும்.
   3) தேறிய இலாபம் 3,300 ரூபாவால் கூட்டிக் காட்டப்படும்.
   4) தேறிய இலாபம் 3,300 ரூபாவால் குறைத்துக் காட்டப்படும்.
   5) தேறிய இலாபம் 1,300 ரூபாவால் குறைத்துக் காட்டப்படும்.

17. இலாப நோக்கமற்ற தாபனமொன்றிலுள்ள திரண்ட நிதியானது,
   1) நடைமுறையல்லாப் பொறுப்பு + நடைமுறைப் பொறுப்பு + நடைமுறையல்லாச் சொத்து.
   2) நடைமுறையல்லாச் சொத்து - நடைமுறைப் பொறுப்பு - நடைமுறையல்லாப் பொறுப்பு.
   3) பொது ஒதுக்கக் கணக்கிலுள்ள மீதியாகும்.
   4) நடைமுறையல்லாச் சொத்து + தேறிய நடைமுறைச் சொத்து - நடைமுறையல்லாப் பொறுப்பு.
   5) இவை எவையுமல்ல.

18. புதிய இளைஞர்கள் கழகமானது 2005 ஆம் ஆண்டில் மொத்தமாக 12,500/= இனைச் சந்தாப் பணமாகப் பெற்றிருந்தது. இத் தொகையில் 800/= 2004 ஆம் வருடத்துடனும், 400/= 2006 ஆம் வருடத்துடனும் தொடர்புடையவையாகும். 2005 ஆம் வருட முடிவில் சந்தா நிலுவைத் தொகை 250/= ஆகும். எனின், 2005 ஆம் வருட வருமானச் செலவுக் கணக்கிற்கு மாற்றப்படும் சந்தாத் தொகை,
   1) 11,050/= 2) 11,550/= 3) 11,850/= 4) 12,350/= 5) 12,150/=

19. பங்குடைமையொன்றில் ஆனந்த், அலீம், அமரா என்போர் 100,000 ரூபாப்படி மூலதனமிட்டுள்ளனர். இவர்களில் ஆனந்த் என்பவர் வரையறுத்த பங்காளியாக காணப்பட்டார். எதிர்பாராத விதமாக பங்குடைமைக்கு 540,000 ரூபா நட்டம் ஏற்பட்டது. எனில், இந்நட்டம் பங்காளரிடையே பகிரப்படும் விதம்,
   1) ஆனந்த் - 180,000/=, அலீம் - 180,000/=, அமரா 180,000/=
   2) ஆனந்த் - நட்டமேதும் ஏற்பதில்லை, அலீம் - 270,000/=, அமரா 270,000/=
   3) ஆனந்த் - 100,000/=, அலீம் - 220,000/=, அமரா 220,000/=
   4) ஆனந்த் - 50,000/=, அலீம் - 245,000/=, அமரா 245,000/=
   5) ஆனந்த் - 100,000/=, அலீம் - 100,000/=, அமரா 340,000/=

20. விற்பனைக் கணக்கானது,
   1) VAT உள்ளடக்கப்பட்ட மொத்த விற்பனைத் தொகையை செலவில் உள்ளடக்கியது.
   2) VAT தவிர்ந்த மொத்த விற்பனைத் தொகையை செலவில் உள்ளடக்கியது.
   3) VAT உள்ளடக்கப்பட்ட மொத்த விற்பனைத் தொகையை வரவில் உள்ளடக்கியது.
   4) தவிர்ந்த மொத்த விற்பனைத் தொகையை வரவில் உள்ளடக்கியது.
   5) விரும்பிய முறையில் பதிவிடலாம்.

*** 21-30 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடைகள் தருக.**

21. பிரவேசக் கட்டணம் (அனுமதிக்கட்டணம்) தொடர்பில் இலாபநோக்கமற்ற நிறுவனமொன்று கையாளக்கூடிய இருவிதமான கணக்கீட்டு முறைகள் யாவை?

.......................................................................................

22. பங்காளிகளான மணியம், கிருஷ்ணா, சாமுவேல் என்போர் 3:2:1 என இலாபநட்டங்களைப் பகிர்ந்துகொள்ளும் பங்குடைமையில் இருந்து சாமுவேல் இளைப்பாறினார். அவ்வேளையில் அவரது மூலதனமீதி 25,000 ரூபாவாகும். 100,000 ரூபாவுக்குக் காசோலை வழங்கப்பட்டு மீதி கடன் கணக்கிற்கு மாற்றப்பட்டது. இவற்றிற்குரிய நாட்குறிப்பினைத் தருக.

.......................................................................................

(13ஆம் பக்கம் பார்க்க)

ஆசிரியர்: திரு.R.ஜனகன் B.BA (Hons)
விவேகானந்தா கல்லூரி, கொழும்பு-13.
உதவி: R.ருஷாந்தி.

# கணக்கீடு -01, பகுதி I: தொடர்ச்சி....

23. கட்புலனாகும் நிலையானச் சொத்தொன்றின் பாவனைக் காலத்தைத் தீர்மானிக்கும் காரணிகள் நான்கு தருக.

......................................................................................

24. இலங்கையில் கணக்கீட்டுத் தகவல்களை வழங்கும் பொறுப்பினை வலியுறுத்தும் சட்டங்கள் இரண்டு தருக.

......................................................................................

25. நடைமுறைச் சொத்துக்களில் மாத்திரம் தாக்கங்களை ஏற்படுத்தும் நடவடிக்கை ஒன்றும் நடைமுறைப் பொறுப்புக்களில் மாத்திரம் தாக்கத்தை ஏற்படுத்தும் நடவடிக்கை ஒன்றும் தருக.

......................................................................................

26. 1) இலங்கைக் கணக்கீட்டு நியமம் -03 இற்கு அமைய நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்குரிய அடிப்படை யாது?

......................................................................................

2) இவ்வடிப்படைக்கு மாறாக வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்படும் நிதிக் கூற்றுக்களின் கூறு யாது?

......................................................................................

27. இலங்கைக் கணக்கீட்டு நியமம் 05 இன் படி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டிய ஏதேனும் இரு விடயங்களைத் தருக.

......................................................................................

28. X,Y,Z என்போரது பங்குடைமை ஒப்பந்தமானது பின்வரும் ஏற்பாடுகளை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது.
1) பங்காளர் மூலதனங்களுக் ஆண்டு வட்டி 5%.
2) பங்காளருக்கிடையிலான இலாபநட்ட விகிதம் 2:2:1
3) இளைப்பாறும் பங்காளியின் கடன்களுக்கு ஆண்டு வட்டி 6%.
4) பங்காளர் எடுப்பனவுகளுக்கு ஆண்டு வட்டி 5% தற்போது இவ் ஒப்பந்தத்தை முழுமையாக இரத்துச் செய்து பங்குடைமைச் சட்டத்திற்கமையச் செயற்பட முடிவு செய்தனர். எனின், இவ்விடயங்கள் தொடர்பில் பங்குடைமைச் சட்டத்தின் எப்பிரிவுகளை நீர் கையாளுவீர்?

......................................................................................

29. இலங்கை கணக்கீட்டு நியமம்- 18 இன்படி, செலவீனமொன்றை சொத்தாக இனங்காண்பதற்கு அது கொண்டிருக்க வேண்டிய பண்புகள் இரண்டு தருக.

......................................................................................

30. அலுவலகத் தேவைக்கென 5,000 ரூபாவுக்கும் மீள்விற்பனை செய்வதற்கென 5,000 ரூபாவுக்கும் காகிதாதிகளை "யாழ் வணிகம்" என்பது தனது வழங்குநரான யுனைடெட் கம்பனியிடமிருந்து கொள்வனவு செய்தது. இத்தொகைகளுக்கு மேலதிகமாக 15% VAT விதிப்பனவு செய்யப்பட்டது. "யாழ் வணிகம்" VAT இற்காகப் பதியப்பட்ட ஓர் அமைப்பு எனின், குறிப்பேட்டுப்பதிவைத் தருக.

......................................................................................

* **31 முதல் 35 வரையான கூற்றுக்கள் ஒவ்வொன்றும் "உண்மை" அல்லது "பொய்" என எழுதுக.**

31. பகுதிச் சமப்படுத்தல் முறையின் கீழ் உபபேரேடுகளில் அன்றி பொதுப்பேரேட்டில் மாத்திரமே கட்டுப்படுத்தும் கணக்குகள் தயாரிக்கப்படுகின்றன. (...............)

32. அளவுசார் தகவல்கள் யாவும் கணக்கீட்டுத் தகவல்கள் ஆகும். (...............)

33. வியாபாரக் கழிவு பற்றிய தகவல்களைத் திரட்டுவதற்கான மூலங்கள் பட்டியல்கள் ஆகும். (...............)

34. பங்குடைமை ஒப்பந்தப்படி பங்காளருக்கு அனுமதிக்கப்படும் சம்பளத்தொகை பங்குடைமைக்குரிய செலவொன்றாகும். (...............)

35. கொள்வனவு விற்பனை நாட்குறிப்புகள் இரட்டைத் தொழிற்பாடு ஆற்றுகின்றன. (...............)

* **36 முதல் 40 வரையான கூற்றுக்களிலுள்ள இடைவெளிகளை மிகப் பொருத்தமான முறையில் பூர்த்திசெய்க.**

36. இலங்கை கணக்கீட்டு நியமம்-05 இன் படி கையிருப்புக்கள் .............................. கிரயம் .............................. பெறுமதி என்பவற்றில் குறைவானதன்படி மதிப்பிடப்படும்.

37. புதிய பங்காளி ஒருவர் இணையும்போது நன்மதிப்புக் கணக்கினைத் தொடங்குதல் பங்குடைமையினது .............................. தாக்கங்களை ஏற்படுத்துவது இல்லை.

38. வியாபார நோக்கமற்ற தாபனம் ஒன்றில் கணக்கறிக்கைகள் தயாரிக்கும்போது பெற்றுக்கொள்ளப்பட்ட விசேட நன்கொடைகள் .............................. பொது நன்கொடைகள் .............................. காட்டப்படும்.

39. நடைமுறையல்லாச் சொத்துக்கள் .............................. , .............................. எனும் உருப்படி விடயங்களை உள்ளடக்கும்.

40. கணக்கீட்டு நியமங்களுக்கமைய சொத்துக்களின் கட்டாயமற்ற பண்பு என கருதப்படுவது .............................. ஆகும்.

# கணக்கீடு - 01 பகுதி - II

* **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.**

01. அண்ணாமலை உற்பத்தி நிறுவனத்தின் கணக்கேடுகளில் இருந்து 31 மார்ச் 2009 இல் எடுக்கப்பட்ட பரீட்சை மீதி பின்வருமாறு:-

| | 000 ரூபா | 000 ரூபா |
|---|---|---|
| ஆதனம் கிரயம் | 3,000 | |
| மோட்டார் வாகனம் கிரயம் | 2,200 | |
| தளபாடம் | 800 | |
| பொறி | 2,600 | |
| 01.04.2008இல் பெறுமானத்தேய்வு ஏற்பாடு | | |
| மோட்டார் வாகனம் | | 750 |
| தளபாடம் | | 250 |
| பொறி | | 900 |
| மூலப்பொருள் கொள்வனவு | 760 | |
| முடிவுப்பொருள் கொள்வனவு | 480 | |
| மூலப்பொருள் சுங்கத் தீர்வை | 140 | |
| சம்பளம் கூலி | 520 | |
| மின்கட்டணம் | 200 | |
| காப்புறுதி | 160 | |
| வாடகை | 30 | |
| 01 ஏப்ரல் 2008இல் மூலப்பொருள் | 18 | |
| முடிவுப்பொருள் | 26 | |
| குறைவேலை (மூலக்கிரயம்) | 15 | |
| நேர்கூலி | 18 | |
| தனியுரிமைக் கட்டணம் | 12 | |
| விற்பனை | | 3,260 |
| விற்பனை திரும்பல் | 60 | |
| பெற்ற முதலீட்டு வருமானம் | | 62 |
| கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் | 220 | 140 |
| விற்பனைச் செலவு | 46 | |
| 20% வங்கிக்கடன் | | 200 |
| அறவிடமுடியாக்கடன் | 24 | |
| ஐயக்கடன் ஏற்பாடு | | 75 |
| வங்கி | | 182 |
| மூலதனம் | | 5,510 |
| | 11,329 | 11,329 |

**மேலதிக தகவல்கள் பின்வருமாறு:-**

01. 31 மார்ச் 2009 இல் மூலப்பொருள் ரூபா 76,000. முடிவுப்பொருள் ரூபா 90,000. குறைவேலை (மூலக்கிரயம்) ரூபா 24,000.
02. 31 மார்ச் 2009இல் காணப்பட்ட இறுதி இருப்பினுள் 25,000 ரூபா இருப்புக்கள் பழுதடைந்தவையாக காணப்பட்டன. எனினும், இவற்றை 10,000 ரூபாவுக்கு விற்கமுடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
03. 25 மார்ச் 2009இல் 3,000 ரூபா பட்டியல் விலையிட்டு விற்பனை இன்றேல் திரும்பல் அடிப்படையில் அனுப்பப்பட்ட பண்டங்கள் திரும்பி வருவதாக இருந்தன. இவை கிரயத்துடன் 20% கூட்டி பட்டியலிட்டவையாகும்.
04. 31 மார்ச் 2009இல் முற்செலுத்தியவையும் அட்டுறு செலவுகளும் பின்வருமாறு:-

| | முற்பணம் | அட்டுறு செலவு |
|---|---|---|
| மின்கட்டணம் | - | 40,000 |
| காப்புறுதி | 10,000 | |
| விற்பனைச் செலவு | 14,000 | 8,000 |

05. பின்வரும் செலவுகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட வேண்டும்

| | தொழிற்சாலை | அலுவலகம் |
|---|---|---|
| காப்புறுதி | 50% | 50% |
| மின்சாரம் | 75% | 25% |
| வாடகை | 60% | 40% |

06. சம்பளம் கூலி என்பதினுள் தொழிற்சாலை மேற்பார்வையாளர் சம்பளம் ரூபா 140,000 உள்ளடங்கும்.
07. வங்கிக் கடன்களுக்கு 6 மாத வட்டி செலுத்த வேண்டியுள்ளது.
08. கடன்பட்டோரில் 6,000 ரூபாவை அறவிடமுடியாக் கடனாக பதிவழிப்பதுடன் ஐயக்கடன் ஏற்பாட்டை 40,000 ரூபாவாக சீராக்குக.
09. 30 செப்டெம்பர் 2006இல் 200,000 ரூபாவுக்கு வாங்கிய மோட்டார் வாகனம் 01 ஒக்டோபர் 2008இல் 100,000 ரூபாவுக்கு விற்கப்பட்டு விற்றுப்பெற்ற காசு மோட்டார் வாகன கணக்கில் செலவில் பதிந்தது தனிய வேறு பதிவுகள் இடம் பெறவில்லை.
10. நடைமுறை அல்லா சொத்துக்களுக்கு பின்வருமாறு பெறுமானத் தேய்விடுக. தளபாடம் கிரயத்தில் 5%, மோட்டார் வாகனம், பொறி கிரயத்தில் 10%.

**வேண்டப்படுபவை:-**

1) 31 மார்ச் 2007இல் முடிந்த ஆண்டுக்கு உற்பத்தி வியாபார இலாபநட்ட கணக்கு (நிலைக்குத்து வடிவில்)
2) 31 மார்ச் 2008இல் ஐந்தொகை.

02. பின்வரும் சமன்பாடானது 31.03.2008இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்டதாகும்.

| சொத்து | | செலவீடு | | தொங்கல் | | மூலதனம் | | வருமானம் | | பொறுப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 320,000 | + | 120,000 | + | 2,000 | = | 250,000 | + | 172,000 | + | 20,000 |

பின்வருவன தொடர்பான சீராக்கங்கள் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

1) இறுதி இருப்பில் உட்பட்டுள்ள ரூபா 10,000 கிரயமுள்ள பண்டங்கள் ரூபா 7,000 இற்கே தேறும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
2) 29.03.2008இல் விற்பனையின்றேல் திருப்புக என்ற அடிப்படையில் வாடிக்கையாளரொருவருக்கு ரூபா 8,000 இல் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பண்டங்களையும் விற்பனைகள் உள்ளடக்கியுள்ளன. இவற்றில் 50% ஆனவை விற்கப்பட்டன என உறுதிப்படுத்தப்பட்டதுடன் எஞ்சியதை திருப்பியனுப்புவதற்கான காலம் இன்னும் அடையப்படாதுள்ளது.
3) கடன்படுநர் தந்த காசு ரூபா 1,000 அவர் கணக்கில் பக்கம் மாறி பதியப்பட்டு இருந்தது.
4) ரூ.10,000 கிரயமுள்ளதும் ரூ.6,000 ஆல் குறைத்தெழுதப்பட்டதுமான மோட்டார் வாகனமொன்று 01.04.2007இல் ரூபா 4,800 கை மாற்றுப்பெறுமதியில் வினோத் கம்பனிக்கு கொடுக்கப்பட்டு ரூபா 30,000 கிரயமுள்ள புதிய மோட்டார் வாகனம் ஒன்று வாங்கப்பட்டது. மேலதிகமான காசை உரிமையாளர் தனது சொந்தப்பணத்திலிருந்து செலுத்தியிருந்தார். இவற்றிற்கான பதிவுகள் கணக்கேடுகளில் இடம்பெற்றிருக்கவில்லை.
5) 28.02.2008இல் ரூபா 12,000 கிரயமுள்ள பண்டங்கள் தீயால் அழிவுற்று அசுறப்பட்டது. காப்புறுதிக்கம்பனி நட்டத்தில் 75% ஈடு செய்வதற்கான காசை செலுத்தியிருந்தபோதும் உரிமையாளர் அதனை சொந்தத் தேவைக்கு எடுத்துக்கொண்டார்.
6) விற்பனையில் உள்ளடக்கியுள்ள ரூபா 4,600 தொகையானது 15% பெறுமதி வரி சேர்க்கப்பட்ட வரியையும் உட்படுத்தியிருந்தது. செலுத்துமதியான வரி ரூபா 15,000 பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
7) செலவீடுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 18,000 சம்பளத் தொகையானது ஊழியர் சேமலாப நிதிக்குரிய 10% ஊழியர் பங்களிப்பை நீக்கிய பின்னர் உள்ள தொகையாகும். ஊழியரின் பங்களிப்புத் தொடர்பான பதிவுகள் கணக்கீடுகளில் இடம்பெறவில்லை.

**வேண்டப்படுபவை:-**

1) கொடுக்கப்பட்டுள்ள சமன்பாட்டில் மேற்படி சீராக்கங்களின் தாக்கங்களைக் காட்டுவதற்கான அட்டவணையைத் தருக.
2) மேற்படி சீராக்கங்கள் தொடர்பான கணக்கீட்டு எண்ணக்கருக்களைக் குறிப்பிடுக.

(தொடர்ச்சி நாளை வெளிவரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரா. சம்பந்தருக்கும் கஜேந்திரகுமாருக்கும் ஒரு திறந்த மடல்....!

**இந்தத் திறந்த மடலை 'புதினப் பலகை' இணையத் தளத்தில் வரைந்தவர் நந்தன் அரியரத்தினம். தாயகத்தில் வாழும் இவர் நீண்ட கால அரசியல் செயற்பாட்டாளர், ஆய்வாளர், இலக்கியவாதியும்கூட.**

இராஜவரோதயம் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணி ஆகியோருக்கு!

கடந்த மே 2009 இற்கு பின்னரான தமிழ்த் தேசிய அரசியல் பற்றி நீங்கள் நன்கு அறிவீர்கள்.


இரா. சம்பந்தர்

இலங்கை அரசியலில் 2009 மே 18இற்கு முன்னர் தமிழ்த் தேசிய அரசியலின் தீர்மானிக்கும் ஆற்றல் எவ்வாறு இருந்தது என்பது பற்றியும், அதற்கு பின்னரான இன்றைய நமது அரசியலின் பலவீனமான நிலைமை பற்றியும் நீங்கள் அறிவீர்கள்.

அவற்றை அறியாமல் இருக்கும் அளவுக்கு நீங்கள் ஒன்றும் அரசியல் தெரியாத கத்துக்குட்டிகள் அல்லர்.எனவே அதன் உள்ளடக்கங்களை நான் விளக்கிச் சொல்ல வேண்டியதில்லை.நமது அரசியலின் இயங்கியல் இரு பகுதிகளாகக் கழிந்தது.

மிதவாத அரசியல் வழிமுறை ஒன்றின் மூலம் தமிழ் மக்களுக்கான அரசியல் அதிகாரத்தை பெற்றுக் கொள்ள முடியுமென்ற நம்பிக்கையின் காலமாக ஒரு பகுதியும், இல்லை, ஆயுத வழிமுறைப் போராட்டத்தால் மட்டுமே நமக்கான அதிகாரத்தை உறுதிப்படுத்த முடியுமென்ற பிறிதொரு நம்பிக்கையின் காலமாக இன்னொரு பகுதியும் கழிந்திருக்கின்றன.

இறுதியில் - இரண்டு நம்பிக்கைகளும் தோல்வியையே பதிவு செய்திருக்கின்றன. மிதவாத அரசியலின் தோல்வியிலிருந்து ஆயுத ரீதியாக உருக் கொண்ட எமது விடுதலைப் போராட்டம்,' அதன் தோல்வியைத் தொடர்ந்து மீண்டும் மிதவாத அரசியலிலேயே சரணடைந்திருக்கிறது.

ஏன் எங்களுக்கு இந்த நிலைமை ஏற்பட்டது...? அதில் செல்வாக்குச் செலுத்திய காரணங்கள் எவை...? இது பற்றியெல்லாம் தமிழ் மக்களுக்கான தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் நீங்கள் நன்கு அறிவீர்கள் என்றே நான் நம்புகிறேன்.

இதனைக் கூட என்னைப் போன்ற சாமானியர்கள் தங்களுக்கு விளக்கிச் சொல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையை ஏற்படுத்த மாட்டீர்களென்றும் நம்புகிறேன். ஒரு தோல்வி அனுபவத்திற்குப் பின்னர் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்க முயல்வோர் -

அந்த தோல்வியின் உட்காரணங்களையும், அந்த தோல்வி நமது அரசியல் அரங்கிற்குப் புதிதாகக் கொண்டு சேர்த்திருக்கும் சவால்களையும், இந்தச் சூழலைத் தங்களது ஆதிக்க நலனிற்கு ஏற்ப கையாள்வதற்கான கொழும்பின் தந்திரோபாய நகர்வுகளையும், விடுதலைப் புலிகளின் அழிவின் பின்புலமாகத் தொழிற்பட்ட பல்வேறு அந்நிய சக்திகளையும், அச்சக்திகள் புலிகளற்ற இலங்கையைத் தமது நலன்களுக்கு ஏற்ப கையாளுவதற்கான சந்தர்ப்பங்களையும், நீங்கள் பரிசீலிக்காமல் இருந்திருக்க மாட்டீர்கள் என்றே நான் நம்புகிறேன்.

ஆனால் - இன்று நீங்கள் நடந்து கொள்ளும் முறையைப் பார்க்குமிடத்து உங்கள் அரசியல் புலமைத்துவம் குறித்து சந்தேகங்களே எழுகின்றன. ஓர் ஆழமான அரசியல் ஆய்வுக் கண்ணோட்டத்துடன் தான் நீங்கள் நடந்து கொள்கிறீர்களா அல்லது உங்களது தனிப்பட்ட காழ்ப்புணர்வுக்கான களமாகத் தமிழர் தேசிய அரசியலை கையாள முனைகின்றீர்களா...?

ஜனநாயகத்தில் பல்வேறு குரல்களுக்கும் பல்வேறு செயற்பாடுகளுக்கும் இடமுண்டு என்பதில் என்னிடம் கருத்து பேதமில்லை. பன்முகத்தன்மைக்கான அங்கீகாரம் என்பது தான் ஜனநாயகத்தின் அடிப்படையாகும். எனவே அந்த வகையில்,தமிழர், தேசிய அரசியலில் பல்வேறு தரப்புக்களும் தமது அபிப்பிராயங்களைச் சொல்வதற்கும் அதற்காகச் செயலாற்றுவதற்குமான தார்மீக உரிமைப்பாடு அவர்களுக்கு உண்டு என்பதிலும் நான் உடன்படுகிறேன்.

ஆனால் அந்த தார்மீக நியாயம் தமிழ் மக்களின் அடிப்படையான அரசியல் நியாயத்தைக் குழி தோண்டிப் புதைப்பதாக இருந்துவிடக் கூடாது. வெறும் சுயநலத்திற்கும் வரட்டு கௌரவத்திற்குமாக - இன்று வீதியருகில் ஆதரவு தேடிக் கிடக்கும் தமிழர் தேசிய அரசியலை மேலும் நடுவீதிக்குக் கொண்டு வந்து அநாதரவாக்கி உருச்சிதைப்பதாக உங்கள் நடவடிக்கைகள் அமையக் கூடாது.

அது, ஒரு தலைமைத்துவம் குறித்துச் சிந்திக்கும் தங்களுக்கு ஏற்புடையதுமல்ல. விடுதலைப் புலிகளின் அழிவுக்குப் பின்னர் நமது அரசியலைத் தக்க வைப்பதற்கான ஒரேயொரு நம்பிக்கையாக இருந்தது தமிழ்த்.தேசிய கூட்டமைப்பே ஆகும்.

இது கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த ஒருவர் அருகே மிதந்து வந்துகொண்டிருந்த மரத்துண்டு ஒன்றைப் பற்றிப் பிடித்தற்கு ஒப்பானது. ஆனால் - அது கூட, அவரது கையை விட்டு அகலுவது போன்ற ஒரு உணர்வுதான் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது நம்பிக்கை கொண்ட மக்களை ஆட்கொண்டிருககிறது.

மக்கள் ஓர் அரசியல் நிலைப்பாட்டை வெறுக்கத் தொடங்கிவிட்டார்கள் எனில் அந்த அரசியலை அழிக்க எதிரிகள் எவரும் வெளியில் இருந்து வரவேண்டியதில்லை. மக்களைச் சார்ந்திருக்காத அரசியல், தனது அழிவிற்கான உட்கூற்றையும் தனக்குள்ளேயே கொண்டிருக்கிறது. இந்தப் படிப்பினை நமது ஆயுதப் போராட்ட அனுபவங்களின் மூலம் எமக்கு கிடைத்த ஒன்று.

மக்களின் விடுதலைக்காக வெளிக் கிளம்பிய விடுதலை இயக்கங்கள் அனைத்தும் இறுதியில் மக்களை மறந்து தமது அதிகாரத்திற்காக இயங்குவதையே பிரதான இலக்காகக் கொண்டன. மக்களுக்கான அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகத் தோற்றமெடுத்த இயக்கங்கள் இறுதியில் தமக்கான அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான இயக்கங்களாக உருமாறின.

ஆரம்பத்தில் ''எங்கட பிள்ளையள்'' என்று அன்னியோன்யமாக வாஞ்சையுடன் பழகிய மக்கள் இறுதியில் அச்சத்துடன் ''அவங்கள் இயக்கம்'' என்றனர்.


கஜேந்திரகுமார்

இந்த வரலாற்று அனுபவத்திலிருந்து எதையாவது நாம் கற்றுக்கொள்ள முயன்றிருக்கின்றோமா என்றால் நிச்சயமாக இல்லை. அதற்கான அசைவுகளைக் கூட நம் மத்தியில் காணவில்லை. எங்களைப் போன்றவர்களின் நிலைமையோ விக்கிரமாதித்தியன் கதையில் வரும் வேதாளம் போன்று இருக்கிறது. மீண்டும் மீண்டும் நாங்களோ உங்களிடம் ஒற்றுமைக்காக யாசகம் செய்து கொண்டிருக்கிறோம்.

இன்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரும் தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணியினரும் மாறி மாறி விமர்சனங்களை அடுக்கி வருகின்றனர். உங்கள் விமர்சனங்களைப் பார்த்தால் - 'இனி நாங்கள் ஒன்றுபடப் போவதில்லை; இப்படியே தான் எதிர் துருவங்களாக இருக்கப் போகின்றோம்' என்று மறைமுகமாகச் சொல்லுவது போன்றே தெரிகிறது.

நமக்கிடையிலான முரண்பாடுகளை அகநிலை முரண்பாடுகளாகக் கருதி நமக்கான அரசியலை ஒரு ஜனநாயக அணுகுமுறையுடன் நகர்த்திச் செல்வதில் தொடர்ந்தும் நாம் தோல்வியடைந்தவாறே இருக்கிறோம்.

ஏன் எங்களால் இதில் வெற்றி பெற முடியவில்லை...?

கடந்த காலத்தில், அகநிலை முரண்பாடுகளை ஓர் எதிர்த் தரப்பு அரசியலைக் கையாளுவது போன்றே விடுதலைப் புலிகள் அணுகினர். இறுதி வரை புலிகளால் மாற்றுக் கருத்துக்களைச் சகிப்புணர்வுடன் அணுக முடிந்திருக்கவில்லை.

பிறிதொரு வகையில் - விடுதலைப் புலிகளின் தலைமை சகிப்புணர்வுக்குப் பழக்கப்பட்ட ஓர் அமைப்பாகவும் இருக்கவில்லை. சகிப்புணர்வற்ற அந்த அரசியல், இறுதியில், நமது தேசிய அரசியலைக் கூறுபடுத்தி அணுகும் எதிரெதிர் அரசியல் குழு வாதங்களைத் தோற்றுவித்தது.

அந்தக் குழு வாதங்களின் குழந்தைகளே இன்றைய கொழும்பின் காய் நகர்த்தல்களுக்கான தத்துப் பிள்ளைகளாக இருக்கின்றனர். இன்று கூட்டமைப்பின் அணுகுமுறையும் மேலும் சில தத்துப்பிள்ளைகளை கொழும்பிற்கு வழங்குவதை நோக்கியே செல்கிறது.

விடுதலைப் புலிகள் பலமாக இருக்கும் வரைக்கும் ஒன்றுபட்டிருந்த கூட்டமைப்பினருக்கு தற்போது என்ன நிகழ்ந்தது...?

இதில் எவர் சரி, எவர் பிழை என அளவிடுவதல்ல எனது நோக்கம்.ஆனால் - கூட்டமைப்பின் இன்றைய உடைவு யாருக்கு ஆதரவாக அமையப் போகிறது...? இதனால் நன்மையடையப் போகிறவர்கள் யார்...? இந்த கோள்விகள் குறித்து நீங்கள் சிந்திக்க முன்வர வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு.

சம்பந்தரின் அணுகுமுறையில் பிரச்சினை இருக்கிறது என்பது உண்மை; ஆனால் ஒரு சம்பந்தரை மட்டுமே கருத்தில் கொண்டா தமிழ்த் தேசிய அரசியலை நகர்த்தப் போகின்றீர்கள்?

தமிழ்த் தேசிய அரசியல் என்பது நம் ஒரு சிலரின் தனிப்பட்ட பிரச்சினையல்ல நண்பர்களே! நாம் ஒன்றுபட்டு நிற்க வேண்டிய சந்தர்ப்பத்தில் பிளவுறுவதால் நாம் மேலும் நமது அரசியல் பலத்தை இழக்கிறோம் என்பதை ஏன் உங்களால் புரிந்து கொள்ளமுடியாமல் இருக்கிறது?

இன்று - த. தே. ம. மு ஆகிய நீங்கள் திருகோணமலையில் போட்டியாளர்களை

*(16 ஆம் பக்கம் பார்க்க)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய செய்திகள், சுவடுகள் இங்கே பதிவுகளாக...




உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

01.08.1989

*புதுடில்லியில் நடைபெறும் இலங்கை - இந்திய பிரதிநிதிகள் குழுக்களுக்கிடையேயான பேச்சுக்களில் முட்டுக்கட்டை நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

*இலங்கை வங்கி தனது ஐம்பது ஆண்டுகள் கால சேவை நிறைவையொட்டி இன்று தனது பொன்விழாவைக் கொண்டாடுகிறது.

*இலங்கையில் ''தமிழ் ஈழம்'' அமைக்கும் பிரேரணையை நிறைவேற்ற தமிழ் நாடு சட்ட சபையைக் கூட்டுமாறு முதலமைச்சர் கருணாநிதியிடம் அ.தி.மு.கட்சி கோரிக்கை.

02.08.1989

*புதுடில்லியில் நடைபெறும் இலங்கை இந்தியப் பிரதிநிதிகள் குழுக்களுக்கு இடையிலான இன்றைய கடைசிப் பேச்சுக்களின் முடிவில் அமைதிப்படை எப்போது இங்கிருந்து முற்றாக வெளியேறும் என அறிவிக்கப்படுமென வெளிவிவகார அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன நம்பிக்கை தெரிவிப்பு.

*இலங்கையில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தற்போது 45 ஆயிரம் இந்திய அமைதிப் படைத் துருப்புக்கள் நிலை கொண்டிருப்பதாக இந்திய பாதுகாப்பு அமைச்சர் நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.

03.08.1989

*வடக்கு-கிழக்கில் உள்ள சகல தமிழ்க் குழுக்களும் அங்கம் வகிக்கும் சமாதானக் குழுவொன்றை அமைக்க இலங்கை இந்திய அரசுகள் இணக்கம் கண்டிருப்பதாக இலங்கை ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிப்பு.

*இலங்கை- இந்திய அரசுகளின் அழைப்பின் பேரில் புதுடில்லிப் பேச்சுக்களில் கலந்துகொள்வதற்காக வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் புதுடில்லிக்கு விரைவு.

04.08.1989

*புதுடில்லியில் இலங்கை இந்திய அரசுப் பிரதிநிதிகள் இடையில் நடைபெற்ற உயர்மட்டப் பேச்சுக்களில் குழப்பநிலை நிலவியதாக அறிவிப்பு.

*கொழும்பு-திம்பிரிஸ்கய்யாவவில்உள்ள பொலிஸ் தலைமைக் காரியாலயம் மீது தாக்குதல் நடத்தி தீவிரவாதிகள் கோஷ்டியொன்று அங்கிருந்து பெருமளவு ஆயுதங்களை அபகரித்துச் சென்றுள்ளதாகத் அறிவிப்பு.

05.08.1989

*தமிழ் மக்களது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுமானால் வாரந்தோறும் 1500 துருப்புக்கள் வீதம் அமைதிப் படையினரை விலக்கிக் கொள்ள இந்தியா தயாராய் உள்ளதாக இந்திய அரசு புதிய யோசனையொன்றைத் தெரிவிப்பு.

*1987 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 07 ஆம் திகதியன்று இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆருக்கும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையே இரகசிய உடன்பாடொன்று மேற்கொள்ளப்பட்டதாக அரசியல் வட்டாரங்களில் பேச்சு அடிபடுகிறது.

06.08.1989

*புதுடில்லியில் கடந்த ஏழு நாள்களாக இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் போது இந்தியத் தரப்பினால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் குறித்து நாளை கூடும் இலங்கை அமைச்சரவை ஆராயும் எனத் தெரிவிப்பு.

*புதுடில்லி பேச்சுக்கள் உரிய பலனளிக்காவிட்டால், மாற்று வழிகளில் ஒன்றாக இந்தியாவுடனான இராஜதந்திர உறவை முறித்துக் கொண்டு ஐ.நா.சபையிடம் முறையிட ஜனாதிபதி பிரேமதாஸ முடிவு செய்யக் கூடுமென்க் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிப்பு.

07.08.1989

*வல்வெட்டித்துறைப் பகுதியில் கடந்த 02 ஆம் திகதி இடம்பெற்ற அசம்பாவிதங்களில் எழுபதுக்கும் அதிகமான பொதுமக்கள் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

*புதுடில்லிப பேச்சுக்களின் பெறுபேறுகள் குறித்து ஜனாதிபதி பிரேமதாஸ ஏனைய அரசியல் கட்சிகளுடனும் ஆலோசனை நடத்தத் தீர்மானம்.

08.08.1989

*இலங்கையின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதுதான் சிறந்த வழி என முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். தெரிவிப்பு.

*இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் சம்பந்தமாக புதுடில்லிப் பேச்சுக்களின் போது இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்ட யோசனைகள் இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

09.08.1989

*இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் தொடர்பாக இந்தியா சமர்ப்பித்த புதிய யோசனைகள் இலங்கையின் நோக்கத்துக்கு இசைவாக இல்லை எனக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் அதிருப்தி தெரிவிப்பு.

*வன்செயல்களை நிறுத்துமாறு சகலருக்கும் வேண்டுகோள் விடுக்கும் வகையிலான பகிரங்க அறிக்கையொன்றைக் கூட்டாக விடுப்பதற்கு முன்வருமாறு அரசு சகல கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்க முடிவு.

10.08.1989

*தென்னிலங்கை வன்செயல்கள் உட்பட நாட்டை எதிர்நோக்கும் பல நெருக்கடிகள் குறித்து ஆராய்ந்து தீர்வுகாணச் சகல கட்சிப் பிரதிநிதிகளையும் கொண்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை நியமிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சிறிமாவோ நாடாளுமன்றத்தில் கோரிக்கை.

*சினிமாஸ் லிமிட்டெட் அதிபரும், கே.ஜீ. இண்டஸ்றீஸ் உரிமையாளருமான பிரபல தொழிலதிபர் கே.ஜீ.குணரட்ணம் கொழும்பில் சுட்டுக்கொலை.

11.08.1989

*அமைதிப்படை விலகல் பிரச்சினைக்குத் தீர்வு கண்ட பின்னர் அனைத்துத் தமிழ்க் குழுக்களையும் உள்ளடக்கிய சமாதானக் கமிட்டியொன்று வடக்கு கிழக்கு மாகாணத்தில் நிறுவப்படுமென வெளிவிவகார அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவிப்பு.

*பிரச்சினைகளை நீங்களே வளர்த்துவிட்டு, இப்போது பரிகாரம் காண்பதற்கு மாத்திரம் எங்களது ஆலோசனைகளைக் கோருகிறீர்களா? என எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.

12.08.1989

*அமைதிப்படை விலகல் விவகாரம் தொடர்பாக இந்தியா தெரிவித்த புதிய யோசனைகள் குறித்து அமைச்சரவையின் கருத்தைக் கேட்டறிந்துகொண்டுள்ள ஜனாதிபதி பிரேமதாஸ இலங்கை அரசின் முடிவை நாளை அறிவிக்கவுள்ளார் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிப்பு.

*இருவாரங்களுக்கு முன்னர் தென்னிலங்கையில் ஊரடங்கையும் மீறி இந்திய எதிர்ப்பு ஊர்வலம் நடத்தியோர் மீது பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 750க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதாக ஜே.வி.பி. குற்றச்சாட்டு.

13.08.1989

*ஐரோப்பிய நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரி தங்கியுள்ள தமிழ் அகதிகளை கட்டம் கட்டமாக இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதென ஐரோப்பிய நாடுகளில் அகதிகள் பராமரிப்பு தொடர்பான கூட்டத்தில் முடிவு.

*அகிம்சை, ஜனநாயகம் என்பவற்றைப் பேணப் பாடுபடுவதாகக் கூறும் சில சக்திகள் மக்களுக்கு எதிராக வன்செயல் புரிபவர்களுக்கு மறைமுக ஆதரவு வழங்குகிறார்கள் என வெளிவிவகார அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.

14.08.1989

*அமைதிப்படை விலகல் விவகாரம் தொடர்பாக இலங்கை இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கிடையில் இணக்கநிலை உருவாகியுள்ளதாகவும் விரைவில் அடுத்த கட்டப் பேச்சுக்கள் இடம்பெறக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளதாகவும் அமைச்சர் தொண்டமான் தெரிவிப்பு.

*இந்தியா தனது துருப்புக்களை வாபஸ் பெற்றுக்கொள்ளும் காலம் வந்துவிட்டது. ஜனாதிபதி பிரேமதாஸ இந்தியத் துருப்புக்கள் வெளியேற வேண்டும் எனக் கூறியிருந்தால் அவை வெளியேறத்தான் வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். தெரிவிப்பு.

15.08.1989

*மாகாணங்களுக்குக் கூடுதல் அதிகாரங்களை வழங்க இணக்கம் தெரிவித்து 1987-11-07 ஆம் திகதியன்று தாம் இந்தியப் பிரதமருடன் செய்து கொண்ட உடன்பாடு இரகசியமானதொன்றல்ல எனவும் அது தொடர்பான ஆவணங்களைத் தாம் ஜனாதிபதி பிரேமதாஸவிடம் ஒப்படைத்து விட்டதாகவும் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். தெரிவிப்பு.

# இலங்கைக்கு 67.4 மில்லியன் டொலர் இலகு கடனாக இந்தியா வழங்கும்

## சனியன்று உடன்படிக்கை கைச்சாத்து

கொழும்பு,மார்ச்15

இலங்கைக்கு இரண்டாவது கட்டமாக 67.4 மில்லியன் டொலர்கள் இலகு கடனை இந்தியா வழங்க இணங்கியுள்ளது. இதற்கான உடன்படிக்கை நேற்று முன்தினம் கைச்சாத்தாகி யுள்ளது.

ஏற்கனவே இந்தியா வழங்கிய 100 மில்லியன் டொலர் இலகு கடனுக்கு மேலதிகமாக இந்த உதவி வழங்கப்படுகிறது.

நிதித் திட்டமிடல் அமைச்சின் செயலாளர் பி.ஸி.ஜெயசுந்தரவும் இந்திய ஏற்று மதி, இறக்குமதி வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பிரபாகர் டாலாலும் உடன்படிக்கையில் கைச்சத்திட்டுள்ளனர்.

இந்தியத் தூதர் அசோக் கே.காந்தின் பிரசன்னத்தில் இந்த உடன்படிக்கை கைச்சாத்தாகியுள்ளது.

மாத்தறைக்கும் கொழும்புக்கும் இடையிலும் களுத்துறைக்கும் மாத்தறைக்கும் இடையிலான ரயில் பாதைகளைப் புனரமைக்க இந்தக் கடனுதவி வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பாதைகளில் 40 கிலோமீற்றர் வேகத்தில் இயங்கும் ரயில்களை 80 கிலோமீற்றர் வேகத்தில் இயக்கக்கூடிய வகையில் இந்தப் பணி முன்னெடுக்கப்படவுள்ளது.

இதேவேளை -

மாத்தளையில் விமான நிலையம் அமைக்க 190 மில்லியன் டொலர்களை வழங்க சீனா முன்வந்துள்ளது. அத்துடன் ரயில்வே சேவையை தரம் உயர்த்த 100 மில்லியன் டொலர்களை வழங்கவும் சீனா இணங்கியுள்ளது. (அ-1)

# மனித மலத்தினால் பசளை தயாரிப்பு; இன்று மிருசுவிலில் ஆரம்ப நிகழ்வு

## ஆளுநர், அரச அதிபர் கலந்துகொள்வர்

சாவகச்சேரி, மார்ச் 15

வடமாகாணத்தில் முதன்முதலாக மனித மலத்தில் இருந்து பசளை தயாரிக்கும் ஆரம்ப நிகழ்வு தென்மராட்சிப் பிரதேசத்தில் சாவகச்சேரி,மிருசுவில் பிரதேச வைத்தியசாலையில் இன்று திங்கட்கிழமை காலை 9.30இற்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி பிரதம விருந்தினராகவும், யாழ்.அரச அதிபர் க.கணேஷ் விசேட விருந்தினராகவும் கலந்துகொள்வர். மற்றும் சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான நிறுவனத்தின் (ஐ.ஆர்.டி.) பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகளும் இந்த ஆரம்ப நிகழ்வில் பங்குபற்றுவர். உரம் தயாரிக்கும் பொறிமுறைத் தொகுதி சாவகச்சேரிப் பிரதேச சபையிடம் கையளிக்கப்படவுள்ளது. உரம் தயாரிக்கும் இந்த நிலையம் ஐ.ஆர்.டி. நிறுவனத்தால் மிருசுவில் வைத்தியசாலை வளாகத்தில் சுமார் 15மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. (ஒ -131)

# உலக புவி தினத்தை முன்னிட்டு நல்லூரில் விழிப்புணர்வுப் போட்டிகள்

நல்லூர், மார்ச் 15

உலக புவி தினத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேசசெயலக காணி பயன்பாட்டுத் திட்டமிடல் பிரிவு விழிப்புணர்வுப் போட்டிகளை நடத்தவுள்ளது.

''கோள் வெப்பமா தலும், காலநிலை மாற் றமும் நீரின் முக்கியத்துவம் சுற்றுச்சூழலைப் பாதுகாப்போம்'' என்ற கருப்பொருளில் போட்டிகள் இடம்பெறும்.

கனிஷ்ட பிரிவுக்கான போட்டிகளில் 15 வயதிற்கு உட்பட்டவர்களும் சிரேஷ்ட பிரிவில் 16வயதுக்கு மேற்பட்டவர்களும் கலந்துகொள்ள முடியும். கையெழுத்துப் பிரதி தயாரித்தல் போட்டிகள் பாடசாலை மட்டத்திலும்,ஓவியப் போட்டிகள் பாடசாலை மற்றும் திறந்த மட்டங்களிலும் நடைபெறும்.

வெற்றி பெற்றவர்களுக்கு முறையே முதலாம் பரிசு ரூபா.1500 உம் 2ஆம் பரிசு ரூபா.1000.00உம் 3ஆம் பரிசு ரூபா 500 உம் வழங்கப்படும். போட்டியில் கலந்து கொள்பவர்கள் தங்களது ஆக்கங்களை அடுத்தமாதம் 10ஆம் திகதிக்குமுன் காணி பயன்பாட்டுப் பிரிவு, பிரதேச செயலகம், நல்லூர் என்ற முகவரிக்கு அனுப் பிவைத்தல் வேண்டும். போட்டி குறித்த விவரங்களை நல்லூர் பிரதேச செயலகத்தில் அறிந்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

(1 -111)

# இராணுவ நீதிமன்ற விசாரணை ஆயத்தில் ஜனாதிபதி மைத்துனரும் கூட ஒருவராம்

## ஜே.வி.பி.நாடாளுமன்ற உறுப்பினர் கண்டனம்

கொழும்பு, மார்ச் 15

ஜெனரல் சரத் பொன்சேகாவை இராணுவ நீதிமன்றில் விசாரணை செய்வதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள இராணுவ அதிகாரிகள் குழுவில் ஜனாதிபதியின் மைத்துனர் ஒருவரும் அடங்குகிறார் என்று ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கூறினார்.

பொன்சேசகாவுக்குப் பெரும் தண்டனையை வழங்குவதற்காகவே இந்த ஏற்பாடு என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பத்ரமுல்லையில் உள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

சரத் பொன்சேகாவை விசாரிப்பதற்காக ஜனாதிபதி இராணுவ நீதிமன்றத்தை நியமித்துள்ளார். விசாரணை செய்வதற்காக இராணுவ அதிகாரிகள் குழுவொன்றையும் அவர் அறிவித்துள்ளார். அந்தக் குழுவில் ஜனாதிபதியின் மைத்துனர் ஒருவர் அடங்குகின்றார். பொன்சேகாவுக்குப் பெரும் தண்டனையைப் பெற்றுக் கொடுப்பதற்காகவே இந்த அதிகாரி அந்தக் குழுவில் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

### அரசு பொய்ப் பிரசாரம்

ஜெனரல் சரத் பொன்சேகாவை இராணுவ நீதிமன்றில் விசாரணை செய்ய முடியாது என்று நாம் மீண்டும் மீண்டும் கூறுகின்றோம். இராணுவச் சட்டத்தின் படியே இதைக் கூறுகின்றோம்.

இராணுவ நீதிமன்றில் பொன்சேகாவுக்குத் தண்டனை கொடுக்கப்பட்டால் அவரால் எம்.பியாக முடியாது என்றொரு பொய்ப் பிரசாரத்தை இலங்கை அரசு ஆரம்பித்துள்ளது. அவ்வாறு எம்.பியாக முடியாது என்று இராணுவச் சட்டத்தில் எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை.

பொன்சேகா விசாரிக்கப்படும் தினத்தன்று எமது சட்டத்தரணிகள் அங்கு ஆஜராகி பொன்சேகாவை இராணுவ நீதி மன்றத்தால் விசாரிக்க முடியாது என்று வாதாடுவர் - என்றார்.

(அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டக்லஸ் அன் சன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தார் ஆகிய நாம்

NGK YUASA

எங்களின் உலகப்பிரசித்தி பெற்ற மோட்டார் சைக்கிள் பற்றறிகள், ஸ்பார்க் பிளக் வகைகள் மற்றும் உதிரிப்பாகங்களை

**2010 ஆண்டு பங்குனி மாதத்திலிருந்து**

யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட விநியோக முகவராக

அமைவிட முகவரியாக

**இலக்கம் 71, பலாலி வீதி, யாழ்ப்பாணம் மற்றும் தொலைபேசி இலக்கங்கள்**

**021 7900800-0776702454**

ஆகியவற்றிற்கு உரித்துடையவருமாகிய

**சுரேஸ் மோட்டோர்ஸ் அன் எஞ்சினியேர்ஸ் ஸ்தாபனத்தாரை நியமிப்பதில் நாம் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.**

dsl

*We lead the way in auto parts*


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





### திருமதி இரத்தினம்மா துரை

(மணியக்கா)

ஆண்டொன்று போனதம்மா!
ஆறவில்லை உம் துயரம்
அவனியில் உன் அரவணைப்பின்றி
அல்லல்படுகின்றோம். அறியாயோ நீ
ஆண்டவன் பாதம் சேர்ந்த - உன்
ஆத்மா சாந்திபெறத் தினம் தினம்
அஞ்சலிக்கின்றோம் அமைதி கொள்ளம்மா!

மஞ்சத்தடி,
இணுவில் கிழக்கு,
இணுவில். (சி/565670)

பாசநினைவுகளுடன்:
பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

## மீளக் குடியமர்ந்தோருக்கு தகரம் விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

தென்மராட்சிப் பிரதேசத்தில் அண்மையில் மீளக்குடியமர்ந்தோரில் வீடுகள் இல்லாத குடும்பங்களுக்கு தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் தகரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றனது. (ஒ-207)

## மத்தியஸ்தர் சபையால் சமரசத் தீர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 15

கொடிகாமம் பொலிசாரினால் அனுப்பப்பட்ட சிறு குற்றப்பிணக்கு தென்மராட்சி மத்தியஸ்தர் சபையினால் சமரசமாகத் தீர்த்து வைக்கப்பட்டது.

சிறு குற்றப் பிணக்குக்கு இரு தரப்பினரின் இணக்கப்பாட்டுடன் 13 ஆயிரம் ரூபா ஒரு தரப்பினரால் மறு தரப்பினருக்கு கொடுக்கவைத்து சமரசமாகத் தீர்த்து வைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-207)

## அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிச்சென்ற ஐவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த ஐந்து வாகனச் சாரதிகளுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் கடந்த வியாழக்கிழமை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த குற்றத்திற்காக ஒருவருக்கு 60 ஆயிரம் ரூபாவும் ஏனைய நான்கு பேருக்கும் தலா 50ஆயிரம் ரூபா வீதமும் அபராதம் விதிக்கப்பட்டது. அபராதத் தொகை செலுத்த தவறின் முறையே ஒரு வருட சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் மணலை பறிமுதல் செய்யுமாறும் பணித்தார். (ஒ-207)

## நான்கு மரக்காலைகளுக்கு நீதிமன்றால் 'சீல்'

யாழ்ப்பாணம், மார்ச் 15

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி நடத்தப்பட்ட மேலும் நான்கு மரக்காலைகள் சாவகச்சேரி நீதிமன்றால் 'சீல்' வைக்கப்பட்டது.

வன இலாகாவினால் சாவகச்சேரி பகுதியில் நடத்திய திடீர் வேட்டையின் போது அகப்பட்ட நான்கு மரக்காலை உரிமையாளர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

வழக்குகளை விசாரணை செய்த நீதிவான் நான்கு மரக்காலைகளின் உரிமையாளர்களை பிணையில் செல்ல அனுமதித்ததுடன் மரக்காலைகளை 'சீல்' வைக்குமாறு உத்தரவிட்டார். (ஒ-207)




டாபிடஸ் ஸ்ரோஸ்
2439422


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## பொதுப்பட்டமளிப்பு வைபவம் 2010 மார்ச் 26,27,28

**யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தின் பொதுப்பட்டமளிப்பு வைபவம் எதிர்வரும் 26,27,28ஆம் திகதிகளில் நடைபெறும்.**

இப்பட்டமளிப்பு வைபவத்தில் நேரடியாகப் பட்டம் பெறுவோர்க்கு கீழ்க்குறிப்பிட்ட திகதிகளில் பட்டமளிப்பு அங்கிகள் வழங்கப்படும் .பட்டமளிப்பு வைபவத்தில் பங்கு பற்றுவதற்காக பணம் செலுத்திய பற்றுச் சீட்டினையும், பல்கலைக்கழக அடையாள அட்டை அல்லது தேசிய அடையாள அட்டையினைக் காண்பித்து கல்விக்கிளையில் பின்வரும் திகதிகளில் அங்கிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

| திகதி | நேரம் | பட்டம் |
|---|---|---|
| 2010.03.16 | காலை 09.30-12.00<br>பிற்பகல் 02.00-04.30 | BA (Completed in the year 2008) |
| 2010.03.17 | காலை 09.30-12.00<br>பிற்பகல் 02.00-04.30 | |
| 2010.03.18 | காலை 09.30-12.00<br>பிற்பகல் 02.00-04.30 | BA(Completed in the year 2007,2008) |
| 2010.03.19 | காலை 09.30-12.00<br>பிற்பகல் 02.00-04.30 | BFA-Music<br>BFA-Dance,Art&Design |
| 2010.03.20 | காலை 09.30-12.00<br>பிற்பகல் 02.00-04.30 | Phd,M phil and Master's Degree |
| 2010.03.21 | காலை 09.30-12.00<br>பிற்பகல் 02.00-04.30 | Vavuniya Campus (Both Faculties) Postgraduate Diplomas |
| 2010.03.22 | காலை 09.30-12.00<br>பிற்பகல் 02.00-04.30 | BBA<br>B.Com,B.Sc. (Agriculture) |
| 2010.03.23 | காலை 09.30-12.00<br>பிற்பகல் 02.00-04.30 | B.Sc. BSMS<br>MBBS |

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
2010.03.12 (சி/565695) பதிவாளர்.

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1173 சிவப்பு

12-03-2010

மீனம் 01 14 16 18

ஜக்பொட் பரிசு ரூபா. 5,870,350/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 212,047 | 20/- | 4,240,940/- |
| 2 இலக்கங்கள் | 19,455 | 40/- | 778,200/- |
| 1 இல. + லக்கினம் | 19,248 | 60/- | 1,154,880/- |
| 2 இல. + லக்கினம் | 1,779 | 200/- | 355,800/- |
| 3 இலக்கங்கள் | 530 | 1000/- | 530,000/- |
| 3 இல. + லக்கினம் | 44 | 10,000/- | 440,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 5,870,350/- | - |
| மொத்தம் | | | 8,099,820/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 253,111 | | 8,599,820/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 6,343,500/-

ஆலிந்தயே வாசனாவ

தங்கக்காசு வெற்றியாளர் : ஏ.எம்.ஏ.நிஷான் வெலிகம

கைத்தொலைபேசி வெற்றியாளர்: சிசில் நந்தன வீரசிங்க மாவனெல்ல


2010 மார்ச் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| மாத்தளை | 501064286-4-11 |
| நுவரெலியா | 501064980-2-09 |
| கண்டி | 501058685-8-19 |
| யாழ்ப்பாணம் | 501058051-7-39 |
| கம்பஹா | 501074525-0-10 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை





வீடியோப் படப்பிடிப்பு

# முத்தொளி

DVCAM

டிஜிட்டல் வீடியோ



2010 இல் அதிநவீன வீடியோ கமரா மூலம் உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சிகளை வீடியோப் படம் பிடித்திட

கிளை:
பலாலிவீதி, கோண்டாவில்.
(டிப்போ அருகில்)
தொ.பே: 0213008492

முத்தொளி டிஜிட்டல் வீடியோ

தில்லையம்பதி, கோண்டாவில். தொ.பே: 0777110116, 2225491


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக அமுலாக்கி அதனைச் செழுமையாக்குவதே இப்போதைக்குச் சிறந்த வழி

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச். 15

பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக அமுலாக்கி அதனைச் செழுமைப்படுத்துவதே சிறந்த வழிமுறையாகும். மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற எமது கொள்கை நிலைப்பாட்டிலிருந்துகொண்டு, முப்பதுக்கும் மேற்பட்ட கட்சிகள் இணைந்திருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுகிறோம்.

இவ்வாறு தெரிவித்தார் சமூகசேவை மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

வடமராட்சிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மக்கள் பாவனைக்கு கையளிக்கும் முகமாகவும், ஏனைய திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதை ஆராய்வதற்காகவும் அப்பகுதிக்குக் கடந்த வியாழக்கிழமை விஜயம் செய்திருந்த அமைச்சர், கற்கோவளம் கிராம அபிவிருத் திச் சங்க மண்டபத்தில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் பொது மக்களையும் சந்தித்து கலந்துரையாடியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியதாவது:-

ஒன்றைவிட்டுக் கொடுப்பது இன்னொன்றைப் பெற்றுக் கொள்வதற்காகவே இந்த நிலையில் நாம் வீணைச் சின்னத்தை விட்டுக் கொடுத்து வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுவது எமது மக்க ளின் வாழ்வாதாரத்துடன் கூடிய அனைத்து அபிலாஷைகளையும் வென் றெடுப்பதற்காகவே.

மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற எமது கொள்கை நிலைப்பாட்டிலிருந்துகொண்டு பழைமை வாய்ந்த இடதுசாரிக் கட்சிகள் உட்பட 30 இற்கும் மேற்பட்ட கட்சிகளுடன் இணைந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மூலம் வெற்றிலைச் சின்னத்தில் இம்முறைப் பொதுத் தேர்தலில் போட்டியிடுகிறோம். இன்றைய எமது மக்களின் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டு தான் நாம் எமது இறுதி இலக்கை நோக்கி நடைமுறைச் சாத்தியமான முறையில் முன்னேற வேண்டும். அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுலாக்கி அதனை செழுமைப்படுத் துவதே சிறந்த வழிமுறையாகும். எமது மக்களின் இன்றைய அன்றாட உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்யாமல் வெறுமனே அழகழகான வார்த்தைகளை மட்டும் உச்சரித்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

யாழ்.குடாநாடு உட்பட வடபகுதி கடற்றொழிலாளர்களுக்கு பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்ற இந்திய இழுவைப் படகுகள் தொடர்பில் தான் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறேன். இவ்விடயம் தொடர்பில் கூடிய விரைவில் நல்லதொரு முடிவு எடுக்கப்பட உள்ளது-என்றார்.

இந்த நிகழ்வில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில் எதிர்வரும் பொதுத் தேர்த லில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிடும் எம்.சீறிபதி, ஸ்ரீரங்கேஸ்வரன் உட்பட கட் சியின் முக்கிய பிரமுகரர்கள் பலரும் கலந்துகொண்டனர். (அ)

# சர்வதேசத்தின் அக்கறையை நிலைப்படுத்த தமிழ்ச் சக்தியின் வெற்றியை உறுதிசெய்க!

## மட்டு. மாவட்ட வேட்பாளர் அரியநேத்திரன் வலியுறுத்தது



மட்டக்களப்பு, மார்ச். 15

இதுவரை காலமும் தமிழ் மக்கள் அனுபவித்து வந்த இழப்புகளுக்கும், சிந்திய இரத்தங்களுக்கும் பலன் கிடைக்க வேண்டிய சூழ்நிலை இன்று உருவாகி வருகின்றது. தமிழர்களது போராட்டத்தின் நியாயம் சர்வதேச அரங்கில் இன்று முக்கியத்துவம் பெற்று உணரப்பட்டு வருகின்றது. இந்தக் கால கட்டத்தில் தமிழ் மக்கள் தமது ஒற்றுமையை வெளிக் காட்டி எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஒன்றிணைந்து தமிழர் சக்திக்கு வலுச் சேர்க்க வேண்டும்.

-இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பா.அரியநேத்திரன்.

கடந்த வியாழக்கிழமை (11ஆம் திகதி) மகிழூர் கிராமத்தில் அக்கிராம மக்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இந்தக் கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் பொன்.செல்வராசாவும் பங்கேற்றிருந்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியவை வருமாறு:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்வதற்காக அரசின் அனுசரணையுடன் ஆனந்தசங்கரி 'சூரியன்' சின்னத்தில் போட்டியிடுகின்றார். இவ்வாறான செயற்பாடுகளால் தமிழ்த்தேசியத்தை சிதைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதை மக்கள் நன்றாகவே புரிந்துகொள்ள வேண்டும். இவ்வாறான ஏமாற்று நடவடிக்கைகளுக்குள் தமிழ் மக்கள் சிக்கிவிடாமல் தமிழ்த் தேசியத்தைக் காப்பாற்ற முன்வர வேண்டும். இதற்கான இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும். கௌரவத்துடன் தீர்வைப் பெற்று நிரந்தரமான அபிவிருத்திகளை மேம்படுத்த 'வீட்டுச் சின்னத்தின்' வெற்றியை உறுதி செய்யவேண்டும் - என்றார். அங்கு உரையாற்றிய மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளர் பொன். செல்வராசா தெரிவித்தவை வருமாறு:-

இன்று அரசின் ஊதுகுழல்களாக எமது மாவட்டத்தில் களமிறக்கப்பட்டுள்ள கொள்கைகள் இல்லாத அரசியல்வாதிகளின் பொய்ப்பிரசாரங்களுக்கும், மக்களின் உணர்வை விலை கொடுத்து வாங்க நினைக்கும் சதி வலைக்குள்ளும் ஒருபோ தும் எமது மக்கள் சிக்கிக்கொள்ள மாட்டார் கள். இதனைக் கடந்த ஜனாதிபதித் தேர்த லில் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் தெளி வுபடுத்தியிருந்ததை இந்தத் தலைவர்கள் மறந்து விட்டார்கள்.

ஆழிப்பேரலையின் போதும், வன்னி மண்ணில் எமது உறவுகள் இரத்தத்தால் நிர்வாணமாக்கப்பட்டு உயிருடன் புதைக்கப்பட்டபோதும் உலகத்தமிழர்கள் அனைவரும் ஓங்கி அழுது, கொடிபிடித்து உரக்கக் குரல் கொடுத்தனர்.

ஆனால், லண்டனிலே குளிரூட்டப்பட்ட வீட்டில் இருந்து தொலைக்காட்சி பார்த்து நகைத்தவர்கள் இன்று எமது மாவட்டத்தில் அபிவிருத்தி செய்யப் போகின்றனர் எனக் கூறிக் கொண்டு வாக்குக்கேட்டு வந்துள்ளனர்.

அரசின் துணையுடன் தமிழ் மக்களின் தன்மானத்தைக் கூறுபோட நினைக்கும் இவர்கள் அனைவருக்கும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் எமது மக்கள் தகுந்த பாடம் புகட்ட வேண்டும் - என்றார். (அ)




# விடுதலைப் புலிகளை ஒடுக்கிய அரசு தமிழ்க் கூட்டமைப்பை ஒழிக்க முயற்சி

## பிரேமச்சந்திரன் கூறுகிறார்



யாழ்ப்பாணம், மார்ச். 15

விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியாக அழித்தொழித்த அரசு இன்று தமிழ் மக்களின் உரிமைக் குரலாகச் செயற்பட்டு வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் அழித்தொழிக்க முயற்சித்து வருகின்றது - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச் சந்திரன் தெரிவித்துள்ளார். வடமராட்சியில் நடைபெற்ற தேர்தல் பிரசார நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடாந்து உரையாற்று கையில் கூறியவை வருமாறு:-

இந்த அரசு வடக்கு, கிழக்கில் மிக அதிகமான சுயேச்சைக் குழுக்களை நிறுத்தி தமிழர் வாக்குகளைப் பிரிப்பதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதற்கு கபடத்தன மாகச் செயற்பட்டு வருகின்றது.

எந்தவித இலக்குமற்று எந்தவித சிந்தனையும் அற்று அரசிடம் கைநீட்டி வாங்கிய பணத்திற்காக கல்விமான்கள் தொடக்கம், சாதாரண தொழிலாளி வரையும் இச் சுயேச்சைக் குழுக்களின் பட்டியல்களில் இடம் பெற்றுள்ளனர்.

இவர்களைத் தவிர வெற்றிலைச் சின்னத்தில் ஆளும் கட்சியும், யானைச் சின்னத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும் போட்டி போடுகின்றன.

இந்த இரண்டு சிங்கள கட்சிகளும் ஆண்டாண்டு காலமாகச் சொல்லிவந்த வடக்கு அபிவிருத்தி பற்றியே இன்றும் பேசுகின்றனர். ஆனால் இடம்பெயர்ந்த மக் களுக்கு சரியான உதவிகளை வழங்காது நடுத்தெருவில் விட்டிருக்கும் இந்த அரசு, தற்போது யாழ்ப்பாணத்தில் அபிவிருத்தி என்று கூறி மக்களை ஏமாற்ற முனைகிறது.

இவ்வளவு நாளும் யாழ்ப்பாணத்திற்கு இந்த அமைச்சர்கள் என்ன அபிவிருத்தியைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அழகான பெயர்களில் 'வடக்கின் வசந்தம்', 'கிழக்கின் உதயம்' எனக் கூறி ஏமாற்று வித்தைகளை அரங்கேற்றுகின்றனர். ஆனால் இளைஞர்களுக்கு வேலையில்லை. எந்த அபிவிருத்தியும் இல்லை. யுத்த அழிவுகளிலிருந்து மக்கள் மீளவும் இல்லை. தொழில்நுட்பக் கல்லூரியை தின்று ஏப்பமிட்டவர்கள் மற்றும் அபிவிருத்திபற்றிப்பேசும் அமைச்சர்கள் என எல்லோரும் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுகின்றனர்.

எப்படியானவர்கள் வெற்றிலைச் சின் னத்தில் போட்டியிடுகின்றார்கள் என்பது மாணவர் சமூகத்திற்குத் தெரியும்.

இவை ஒருபுறம் இருக்க, நாம் உண்மையான தமிழ்த் தேசியவாதிகள் என கூட்டமைப்பை வீட்டு விலகிய ஒரு சிலரும் களத்தில் இறங்கியுள்ளனர். இவர்களுடைய முக்கிய நோக்கம் திருமலையில் சம்பந்த னைத் தோற்கடிப்பதும், யாழ்ப்பாணத்தில் மாவை.சேனாதிராஜாவையும், சுரேஷ் பிரேமச்சந்திரனையும் தோற்கடிப்பதுதான் தமது உடனடிப்பணி எனக் களத்தில் இறங்கியுள்ளனர்.

தேசியம், தாயகம் என்று பேசுபவர்களுக்கு வடக்கு, கிழக்கில் முழுமையாகப் போட்டியிட வேட்பாளர்களும் கிடைக்கவில்லை. திருமலையில் சம்பந்தனைத் தோற்கடிக்க கஜேந்திரகுமார் பொன்னம் பலம் களத்தில் இறக்கிய வேட்பாளர் யாரெனில் சிறீலங்கா சுதந்திரக்கட்சியில் அங்கத்துவம் பெற்று அரசுடன் வேலை செய்தவர் தான் இன்று தமிழ்த் தேசியம், சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொண்ட கஜேந்திரகுமாரின் வேட்பாளர்.

தமிழ் மக்களுக்கு எதிரான அரசின் நிகழ்ச்சி நிரலுக்குள்தான் இவர்கள் எல்லோரும் நிற்கின்றார்கள். யாழ்ப்பாணத்தில் முன்னூறுக்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் களத்தில் உள்ளார்கள். இவர்கள் எல்லோரையும் தெளிவாக இனங்கண்டு கொள்ளுங்கள்.

தமிழ் மக்கள் விடிவுபெற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலப்படுத்தப்பட வேண்டும். இது தமிழ் மக்களின் கடமையாகும் - என்றார். (அ)

# கண்டி மாவட்டத்தில் நாடாளுமன்றத்துக்கான தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை மீட்டெடுக்க வேண்டும்

## மனோகணேசன் அறைகூவல்

கண்டி, மார்ச்.15

கடந்த முறை நாடாளுமன்றத்தில் கண்டி மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒன்பதுபேர் சிங்களவர்கள். மூவர் முஸ்லிம்கள். எமது சகோதர இனத்தவர்கள் தங்கள் பிரதிநிதித்துவங்களைத் தக்கவைத்துக் கொள்வதை யிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். ஆனால் இந்த உரிமை ஏன் எமக்கு இல்லை என்பது தான் எனது கேள்வி. ஏனைய சகோதர இனத்தவர்களுக்கு இருக்கின்ற அதே உரிமையும் வாய்ப்பும் எமக்கு இருக்கவும் கிடைக்கவும் கூடாதா என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் கேள்வியெழுப்பியுள்ளார். கண்டி பன்விலை சோழகந்தை தோட்டத்தில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் அமைப்பாளர்கள் மத்தியில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கொழும்பு, நுவரெலியா, பதுளை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் தமிழ் நாடாளுமன்ற பிரதிநிதித்துவங்கள் உறுதிப்படுத்தப் பட்டுள்ளன.

ஆனால் அரசியல் அறிவும், நாகரிகமும் கொண்ட கண்டித் தமிழ்ச் சமூகத்தினரால் ஏன் தங்களது [illegible] நாடாளுமன்றத்திற்கு அனுப்ப முடியவில்லை என்ற கேள்வி இன்று எமது முயற்சியினால் கண்டி மாவட்டம் முழுக்க எதிரொலிக்கின்றது.

1994 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலேயே தமிழர் ஒருவர் கண்டி மாவட்டத்தில் கடைசியாகத் தெரிவு செய்யப்பட்டார். அதற்குப் பிறகு 2000ஆம்,2001ஆம், 2004 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற மூன்று நாடாளு மன்றத் தேர்தல்களிலும் போட்டியிட்ட அனைத்து தமிழர்களும் தோல்வியடைந்தார்கள். இதற்கான காரணங்கள் எவை என்பதை நாங்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

கடந்த தேர்தல்களை எடுத்துக்கொண்டால் மூன்று பிரதான காரணங்களால் தமிழ் பிரதிநிதித்துவங்கள் கண்டி மாவட்டத்தில் பறிபோயுள்ளன. முதலாவது காரணம், தேர்தல் காலங்களிலே தமிழர்கள் சுதந்திரமாக வாக்களிப்பதும், தமிழ் வேட்பாளர்கள் தமது ஜனநாயக பிரசாரங்களை முன்னெடுப்பதும் கண்டி மாவட்டத்தின் சில பிரதேசங்களிலே தடுக்கப்பட்டுள்ளன. இரண்டாவது காரணம் நடைமுறையில் உள்ள விகிதாசார தேர்தல் முறையின் கீழ் தமிழ் வாக்காளர்கள் தங்களது விருப்பு வாக்குகளை எந்த வேட்பாளருக்கு வழங்குகிறோம் என்பதில் எச்சரிக்கையுடனும், கவனத்துடனும் நடந்து கொள்ளாதது ஆகும். மூன்றாவது காரணம், வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்ட தமிழர்களில் கணிசமானோர் தேர்தல் காலங்களிலே வாக்களிப்பதில் அக்கறை காட்டாதது ஆகும்.

ஆகவே மேற்கண்ட குறைபாடுகளை அகற்றி 1994 ஆம் ஆண்டிற்குப் பிறகு காணாமல் போய்விட்ட கண்டி மாவட்ட தமிழ் நாடாளுமன்ற பிரதி நிதித்துவத்தை மீட் டெடுப்பதுதான் எனது முதன்மைக் குறிக்கோளாகும் என்று தெரிவித்தார். (04)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ABHI Computer

நவீன கணனி உலகின் நம்பகரமான ஸ்தாபனம்

புதிய கணனிகளையும்,சகலவிதமான கணனி
உதிரிப்பாகங்களை பெற்றுக்கொள்ளவும் கணனி தொடர்பான
அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய ஒரே நிறுவனம்

எமது சேவைகள்

Video & Photo Editing, VHS TO CD,DVD, CD DVD Writing,
Printing, Scanning என்பன செய்து கொடுக்கப்படும்.

பிறந்தநாள், திருமணவைபவங்கள், பூப்புனிதநிராட்டு விழா
என்பவற்றுக்கான படப்பிடிப்புக்கள் (Video,Photo)
எற்றுக் கொள்ளப்படும்.

Phone Sales & Repair,
Phone Unlocking & Flashing,
Video, Audio, MP3,Games DVD,CD Seles,
Video Editing Softwares 1வருட உத்தரவாதத்துடன்
கணனியில் பதிவு செய்து கொடுக்கப்படும்.

ABHI Computer
252,254, Navalar Road,Jaffna
T.P:0214900341,H.P :0777271220


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
குண்டுமணி
திரவியநாதன்

தோற்றம்
22★06★1956

மறைவு
27★03★2009

கடந்த (27.03.2009) அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத்தலைவரின் முதலாம் ஆண்டு வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் நாளை (16.03.2010) செவ்வாய்க் கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். வீட்டுக் கிரியைகளிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

நாவலர் சனசமூக நிலையம் அருகில்,
நாவலடி, உடுப்பிட்டி. (95416) குடும்பத்தினர்.

### வீதி சேதம்


உரும்பிராய் கிழக்கு சிவன்வீதி நீண்டகாலமாக திருத்தப்படாமல் குண்டும் குழியுமாக காணப்படுவதால் அவ்வீதியால் பயணம் செய்கின்ற மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்குவதாக விசனம் தெரிவிக்கின்றனர். நீண்டகாலமாக புனரமைப்பு செய்யப்படாததால் அவ் வீதியின் கற்கள் வெளிக்கிளம்பிக் காணப்படுவதுடன் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதாகவும் தெரியவருகின்றது. இது தொடர்பாக இப்பகுதி சன சமூக நிலையங்களால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்யப்பட்டும் இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையென பொதுமக்கள்கவலை தெரிவிக்கின்றனர். (04-ரி-110)

### கைதடியில் கலைவிழா

கைதடி மத்தி குமரநகர் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் கலைவிழா நிகழ்வொன்று எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை இரவு நிலைய முன்றிலில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் குழு நடனம்,வள்ளி திருமணம் இசை நாடகம்,கவிதாலயா இசைக் குழுவின் இசை நிகழ்வு என்பன இடம்பெறவுள்ளன. (04-288)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி (15.03.2010)



அன்னை மடியில் 05 . 10 . 1951

ஆண்டவன் அரவணைப்பில் 13 . 02 . 2010

### திருமதி சிவசோதி புஸ்பலீலா

முதல் முதல் பூத்த மூத்த மகளே
புன்னகையரசி புஸ்பலீலாவே
மெல்லெனச் சிரிக்கும் மெல்லினக் குரல் கொண்டவளே
மென்மனம் கொண்ட சின்னத்தம்பி மகளே
கல்மனம் கொண்ட காலன் அழைத்தானோ
தன்னலமற்ற தாளத்தாயே உன்னை
எம் மனம் உருகுதே எங்கு சென்றாய் தாயே!

நோயுற்ற வேளையது நீ பட்டபாடுகளை
வாய்விட்டு நாம் அழ நீ விட்டதில்லையே
அக்கா என்று சொல்ல யாருண்டு எமக்கு இனி
தம்பி என்று சொல்ல யாருண்டு எமக்கு இனி
தாய் மகளைப் பிரிவதா மகள் தாயைப் பிரிவதா
கணவன் மனைவியைப் பிரிவதா ஏன் இந்த
சோதனை எவர்க்கும் இனி வேண்டாம் வேண்டாம்
அன்பு உடன் பிறப்பே இனி அழநீர் இல்லை
எம் விழிகளில்

(95895)

டென்மார்க்.

தொடர்பு: 004566169881 குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவலையில்..........

மறைவு:
26.03.2009 திதி:- 15.03.2010

ஓராண்டு ஓடினாலும்
நீங்காத நினைவுகளுடன்
எம் நெஞ்சத்தில் வாழும்
எம் சியாமளாவே!
எம் உயிர் கண்மணியே!
சுவர்ணன்,துளசி,புவிதாஜினி என்ற
எம் உயிர் செல்வங்களே!
ஆண்டவனடி சென்று
ஆண்டவனாய் வாழ்பவரே!
எம் நெஞ்சில்......
அணையாத தீபமாய் ஆனவரே!
நீங்கள் அனைவரும்
எம் உள்ளத்து நினைவுகளில் இருந்து
ஒவ்வோர் ஆண்டும்
புதிது புதிதாய்...
பிறந்துகொண்டே இருப்பீர்கள்!

நீங்கள் மண்ணுலகில் மறைந்து
விண்ணுலகம் சென்றாலும்
எம் கண்ணில் நிறைந்து
பெரும் காவியமாய் வாழுகின்றீர்!
ஆண்டொன்று ஆனால் என்ன
ஆண்டு நூறு ஆனால் என்ன
ஆண்டு தோறும்.......
உங்கள் நினைவு தினம் வந்தாலும்
நாம் மாண்டு போகும் வரை
எம் நெஞ்சில் நிறுத்தி
நாளெல்லாம் நினைவோடு சுமக்கின்றோம்
உம்மை நினைந்து துதிக்கின்றோம்
நீங்கள் நடந்த பாதையிலே
அடிச்சுவடு இன்னும் மறையலயே
காலனுக்கு கண் இல்லையா?
பிஞ்சுகள் என்று பாராமல்
எம் நெஞ்சு வெடிக்க தின்றானே!
வஞ்சகம் செய்து
உம்மைக் கொன்று தின்றானே!

நீங்கள் சிந்திவிட்ட சொல்லலைகள்
எம் நெஞ்சை விட்டு நீங்கலயே!
எம் காதுகளில் எதிரொலியாய் கேட்கிறதே!
உங்கள் சிரித்த அழகிய முகங்கள்
எம் கண்களை விட்டு நீங்கலயே!
அழியாத காட்சிகளாக
எம் கண்களில் இன்னும் ஓடுகிறதே!

வாழ்வில் விடிவு தேடித் தேடி
அவதிகள், அவலங்கள் கூடிக்கூடி
பல கனவுகளோடு....
பல கற்பனைகளோடு....
உயிரின் மேல் உள்ள ஆசையோடு
நீங்கள் பதுங்கிய அந்த பதுங்கு குழியே
உங்கள் சவக் குழியானதே!
இறுதியாக முத்தமிட்டு மடிந்த
அந்த மாத்தளன் மண்ணை
எம்மால் தொட்டுக்கூட
பார்க்க முடியவில்லையே!


நீங்காத உங்கள் நினைவுகளை
தாங்காத வலிகளோடு தூங்காத விழிகளோடு
எம் நெஞ்சில் இருத்தி
எம் உணர்வுகளை பெருக்கி
எம் உயிர் உருகிப் பாடுகின்றோம்
எம் உயிர் உருகி வாடுகின்றோம்
எம் உயிர் ஒழுக.....
எம் கண்ணீர் ஒழுக.........
இந்த நீங்காத நினைவு நாளில் ...
கண்ணீரால் காணிக்கை செய்கின்றோம்
எம் கண்ணீரால்....
விண் இடித்து.....பூமாலையாய்....
உங்கள் கல்லறைமீது சொரியட்டும்!
உங்கள் ஆத்மா சாந்தி அடையட்டும்!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி !!

(கடந்த 26.03.2009 அன்று புதுமாத்தளனில் அகால மரணமடைந்த எமது அன்புச் செல்வங்களின் முதலாம் ஆண்டு நினைவு நாள் வீட்டுக் கிருத்திய நிகழ்வு இன்று (15.03.2010) திங்கட்கிழமை மு.ப.11 மணியளவில் மல்லாகத்தில் நடைபெறவுள்ளதால் அந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

கே.கே.எஸ். றோட், மல்லாகம்.

(95752)

குடும்பத்தினர்.



சி.சுவர்ணன்

திருமதி சிவாகரன் சியாமளா

சி.துளசி

சி.புவிதாஜினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கச்சதீவு யாத்திரிகர்களுக்கு வழங்குவதற்காக இந்திய செஞ்சிலுவைச் சங்க ராமேஸ்வரம் கிளை உறுப்பினர் ஜே.அல்போன்ஸ் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் நெடுந்தீவுக் கிளைத் தலைவர் எ.அருந்தவசீலனிடம் குடிதண்ணீர் பைக் கட்டுக்களை வழங்குவதையும்நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் என்.திருலிங்கநாதன் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய உற்சவத்தில் கலந்து கொண்ட ஒருவரிடம் பைக்கட்டினை வழங்குவதையும் காணலாம்.

*(படங்கள்: லக்ஸ்மன்)*

# சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் நலன் கருதி உரிய கட்டட வசதிகளை ஏற்படுத்தித் தாருங்கள்

## -அரச அதிபருக்குக் கடிதம்-

யாழ்ப்பாணம்,மார்ச்15

யாழ். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் கட்டட வளங்களின் பற்றாக்குறை காரணமாக கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாகப் பாடசாலைச் சமூகத்தினர் யாழ். அரச அதிபருக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு-

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள இந்த பாடசாலை 1'சீ'வகையைச் சேர்ந்தது.

இந்தப் பாடசாலையில் சுமார் 1250 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இவர்களில் வன்னியிலிருந்து இடம் பெயர்ந்த 160 மாணவர்களும் உள்ளடங்குவர்.

தற்போது இந்தப் பாடசாலை கல்வி செயற்பாட்டிலும், மாணவர்திறன் சார்ந்த பிற செயற்பாடுகளிலும் வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றது.

கடந்த இருவருடங்களில் 35 மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்கும், கல்வியியற்கல்லூரிக்கும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இதனைவிட 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை, சாதாரணதரப் பரீட்சை போன்றவற்றின் பெறுபேறுகளிலும் இப் பாடசாலை முன்னணி வகித்து வருகின்றது.

அத்துடன் விளையாட்டு மற்றும் ஏனைய வினைத்திறன் செயற்பாடுகளிலும் இப் பாடசாலை மாணவர்கள் தேசிய மட்ட அடைவை எட்டியுள்ளனர்.

இவ்வாறு கல்வித் துறையில் முன்னணி வகிக்கும் இப்பாடசாலைக்கு கட்டட வளங்கள் பற்றாக்குறையாகவே உள்ளது.

தற்போது இப்பாடசாலைக்குக் குறைந்தது 36 வகுப்பறைகள் தேவை. ஆனால் 22 வகுப்பறைகளிலேயே கல்வி செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

பாடசாலைக்கென நிரந்தரமான நூலகம், மனைப்பொருளியல் ஆய்வுகூடம், செயற்பாட்டு அறை என்பனவும் தற்போது இல்லை. கட்டடம் ஒன்றை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு கடந்த நான்கு வருடங்களாகப் பூர்த்தி செய்யப்படாத நிலையில் உள்ளது.

ஆகவே இப்பாடசலையின் எதிர் காலத்தைக் கவனத்தில் எடுத்துக் கட்டட வளத்தை ஏற்படுத்திதர ஆவனசெய்யுங்கள் என அக்கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (04-224)

## புங்குடுதீவில் வாணர் சகோதரர்களுக்கு சிலை அமைக்க வேண்டுமெனக் கோரிக்கை

புங்குடுதீவில் வாணர் சகோதரர்களுக்கு சிலை அமைக்க வேண்டும். மேற்கண்டவாறு பேராசிரியர் கலாநிதி கா.குகபாலன் தெரிவித்தார். புங்குடுதீவு கணேஸ வித்தியாலய நூற்றாண்டு விழாவில் பேசிய பேராசிரியர் கா.குகபாலன் தீவின் கல்வி வளர்ச்சிக்கு முக்கிய காரணியாக விளங்குவது புங்குடுதீவு -வேலணைப்பாலம் இந்தப் பாலத்தை அமைப்பதற்கு முன்னின்று உழைத்தவர்கள் வாணர் சகோதரர்கள். அவர்கள் தான் எமது மாணவர்கள் யாழ்ப்பாணம் சென்று கல்வியைப் பெறுவதற்கு முன்னோடியாக இந்தப் பாலம் அமைய வேண்டும் என விரும்பியவர்கள்.

எமது கிராமத்தின் வளர்ச்சிக்கு அவர்கள் செய்த பங்கு அளப்பரியது. அந்த மக்களைநாம் மறந்துவிட முடியாது. எதிர்காலமும் மறக்கக் கூடாது. எமது இளம்பிள்ளைகள் கிராமத்தின் நலனில் அக்கறையுடன் செயற்பட்ட பெரியார்களை நினைவு கூரக்கூடியதாக அவர்களின் சிலைகள் நிறுவ வேண்டும். மடத்து வெளியில் வாணர் சகோதரர்களின் சிலையை அமைக்க புங்குடுதீவைச் சேர்ந்த ஒவ்வொருவரும் முன்வர வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ரி- 111)

## அதிபர்களுக்கான கூட்டம்

கோப்பாய், மார்ச் 15

கோப்பாய் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் இடம்பெறும் என கோப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி சி.சித்திரவடிவேல் அறிவித்துள்ளார். (ரி-14-72)

# புனித அந்தோனியாரின் திருப்பண்டம் யாழிலிருந்து மன்னாருக்கு நேற்றுச் சென்றது

யாழ்ப்பாணம்,மார்ச்15

புனித அந்தோனியாரின் திருப்பண்டம் நேற்றுக் காலை பாஷையூரில் இருந்து மன்னாருக்குக் கொண்டு செல்லப்பட்டது.

நேற்று முன்தினம் மானிப்பாய் புனித அந்தோனியார் தேவாலயத்திற்குக் கொண்டு வரப்பட்ட புனிதரின் திருப்பண்டம் அங்கே விசேட திருப்பலி பூஜை கள் மற்றும் வழிபாட்டைத் தொடர்ந்து அன்றைய தினம் மாலை 3 மணிக்கு வாகனம் பவனி மூலம் பாஷையூர் புனித அந்தோனியார் தேவாலயத்திற்கு பக்தி பூர்வமாக எடுத்து வரப்பட்டது. அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் புனிதரின் இந்தத் திருப்பண்டம் கண்ணாடிப் பேழையில் வைத்து பவனியாகக் கொண்டு வரப்பட்டது.

வீதி நெடுகிலும் மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று மலர் தூவி புனிதரின் திருப்பண்டத்தை வழிபட்டனர்.

இதனால் இராணுவ, பொலிஸார் பாதுகாப்பும் வீதிகளில் பலப்படுத்தப் பட்டு காணப்பட்டது.

அதேசமயம் பாஷையூர் புனித அந்தோனியார் தேவாலயத்தில் நேற்று முன் தினம் மாலையில் இருந்து நேற்றுக் காலை வரை பல்லாயிரக் கணக்கான மக்கள் புனிதரின் திருப்பண்டத்தைத் தொட்டு வழிப்பட்டு ஆசி பெற்றனர்.

முழுவதும் தங்கத்தினால் மூடப்பட்ட புனிதரின் திருப்பண்டம் நேற்றுக் காலை முழுப்பாதுகாப்புடன் வாகனப் பவனி மூலம் மன்னாருக்குக் கொண்டு செல்லப் பட்டது.

(04-224)




# பழுதடைந்திருந்த "சமுத்திராதேவி" படகு திருத்தப்பட்டு மீண்டும் சேவையில்

யாழ்ப்பாணம், மார்ச் 15

நீண்ட நாள்களாகப் பழுதடைந்திருந்த "சமுத்திராதேவி" படகு திருத்தப்பட்டு மீண்டும் தனது சேவையை ஆரம்பித்துள்ளது.

குறிகாட்டுவான் துறைக்கும் நெடுந்தீவுக்கும் இடையில் பொருள்களை ஏற்றி இறக்கும் பணியில் முன்னர் 'சமுத்திராதேவி' ஈடுபட்டு வந்தது. எனினும் தற்போது 'குமுதினி' படகு பழுதடைந்ததை அடுத்து 'சமுத்திராதேவி' படகு பயணிகளையும் ஏற்றி இறக்கும் சேவையிலும் ஈடுபட்டு வருகின்றது. இதே சமயம் பழுதடைந்த 'குமுதினி' படகையும் உடனடியாகத் திருத்துவதற்கும் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (04-224)

# சிறப்பாக கொண்டாடப்பட்டது சிவராத்திரி பெரும் எண்ணிக்கையானோர் பக்தி பூர்வமாகப் பங்கேற்பு

யாழ்ப்பாணம் ,மார்ச் 15

இந்துக்களின் புனித நாள்களில் ஒன்றான மகா சிவராத்திரி விழா இம்முறை வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கேதீஸ்வரத்தில் மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. நீண்ட காலத்தின் பின்னர் யாழ். குடாநாட்டு மக்கள் தரைப்பாதை ஏ-9 வீதியூடாகத் திருக்கேதீஸ்வரம் சென்று அங்கு சிவராத்திரி நிகழ்வுகளில் பங்குகொண்டனர்.

இங்கிருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் தனியார் மற்றும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்களில் திருக்கேதீஸ்வரம் நோக்கிச் சென்றனர்.

இதே சமயம் கீரிமலை அருள்மிகு ஸ்ரீ நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்திலும் சிவராத்திரி நிகழ்வுகள் மிகவும் சிறப்பான முறையில் அனுஷ்டிக்கப்பட்டன.

அதனை விட குடாநாட்டில் உள்ள பல்வேறு ஆலயங்களிலும் சிவராத்திரி வழமையை விட இம்முறை சிறப்பு நிகழ்வுகளுடன் நடைபெற்றன. (04-224)



இத்தாலியில் பாதுவா நகரில் இருந்து இலங்கைக்கு எடுத்துவரப்பட்ட புனித அந்தோனியாரின் திருப்பண்டம் நேற்று முன்தினம் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

பாஷையூர் புனித அந்தோனியார் மக்களால் வரவேற்று ... ஊர்தியில் பவனியாக எடுத்து வரப்படுவதையும் பவனியில் பொதுமக்கள் கலந்துகொண்டு வணக்கம் செலுத்துவதனையும் பவனியாக எடுத்து வரப்பட்ட திருப்பண்டம் ஆலயத்தின் பீடத்தில் வைக்கப்பட்டிருப்பதையும் அருட்தந்தை ஜெயந்தன் பச்செக் அடிகளார் உரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள் : உமா, தமிழினியன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டுப் பெருமையைப் பாரறிய வைத்திடச் செய்யும் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயப் பங்குனித் திங்கள் பொங்கல்

யாழ்ப்பாண மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற வரலாற்றுச் சிறப்புக் கொண்ட ஆலயங்களுள் மட்டுவில் பன்றித்தலைச்சிக்கண்ணகை அம்பாள் ஆலயமும் ஒன்றாகும். சாவகச்சேரி- புத்தூர் வீதியில் மட்டுவில் கிராமத்தில் வீதியோரமாக மருதமரம், புளியமரம் என்பன நிறைந்த இதமான சோலையின் நடுவே வயலும் வயல் சார்ந்த பகுதியில் அழகுற அமைந்துள்ளது இந்த அம்பாள் ஆலயம்.

1750 ஆம் ஆண்டளவில் இந்த ஆலயத்தில் அம்பாள் மக்களுடன் மக்களாக வாழ்ந்து அருள் ஈந்து அருள் பாலித்ததாக வரலாறு கூறுகின்றது. தற்பொழுது அம்பாள் ஆலயம் அமைந்துள்ள பகுதியில் சிறிய குடில் ஒன்றில் அம்பாள் வீற்றிருந்து மக்களுக்கு அருள்பாலித்த வரலாறு கள் உண்டு. குடிலில் வாழ்ந்த அம்பாளை அந்தப் பகுதி பக்தர்கள் விளக்கேற்றி வழிபாடு செய்து வந்தார்கள். ஆலய சூழல் பெரு நிலப்பரப்பைக் கொண்டது. அருகே பனை மரங்களும், வேப்பமரங்க ளும், மருத மரங்களும், புளியமரங்களும் ஆலயத்திற்கு வனப்பைத் தருகின்றன.

**அருணன் மட்டுவில்**

தனது பக்தனின் வேண்டுதலை ஏற்று மாட்டுத் தலையையுடைய பசுமாட்டினைப் பன்றித் தலையுடைய உருவமாக மாற்றிய தாயின் அற்புதத்தால் பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன் என்ற பெயர்வரக் காரணமானது.

பிற்காலத்தில் குறிப்பாக 1750 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இந்த ஆலயம் மீளப் புனரமைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆலய உட்பிரகாரத்தின் மேற்பகுதியின் பின்புற சுவரில்1750 என கற்களில் செதுக்கிச் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆலயம் தனியான நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகின்றது. ஆலயத்தின் நிர்வாகியான 80 வயதுக்குமேற்பட்ட அருளாளர் சி.சிவகுரு அவர்கள் தமது தள்ளாத வயதிலும் ஆலயத்திற்கு தேவையான பணிகளை நிறைவு செய்து வருகின்றார். மெலிந்த தோற்றமும் நரைவிழுந்த மயிர்களைக் கொண்ட சிறிய குடுமியும் வைத்த வயோதிபரான அவர் அம்பாளுக்கு தனது பணியைச் செய்து வருகிறார். அவருக்கு அவரது மகன் மற்றும் பேரப்பிள்ளைகள் உதவி வருகிறார்கள். ஆலயத்தை வளர்த்து வருகின்றார்கள்.

அம்பாள் ஆலயத்தின் மகா கும்பாபிஷகம் 2000ஆம்ஆண்டு இடப்பெயர்வுகளின் பின்னர் 2007 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 7 ஆம் நாள் நடத்தப்பட்டது.

ஆலயத்தில் ஐந்து காலப்பூசைகளும் கிரமமாக நடைபெறுகின்றன. காலையில் ஆலயமணி அதிகாலை 5.30 மணிக்கு அடித்ததும், காலைப் பூசை 6மணிக்கு ஆரம்பமாகும்.தொடர்ந்து காலை 9 மணிக்கும், நண்பகல் 12 மணிக்கும், பிற்பகல் 3 மணிக்கும், 4 மணிக்கும் 5 மணிக்கும் பூசைகள் நடைபெற்று வருகின்றன.

இந்தப் பூசை வேளைகளில் அம்பாளின் அடியவர்கள் ஆலயத்தில் கூடி வழிபடுவர். கண்ணகை அம்மனது பாடல்களை ஓதுவர். உதாரணமாக,

"மட்டுவிற் பதியுறைத்தாய் கண்ணகை அம்மா
அம்மா கண்ணகை அம்மா
மக்கள் துயர் தீர்த்தருள்வாய் கண்ணகை அம்மா
அம்மா கண்ணகை அம்மா"

என்பன போன்ற பாடல்களை ஓதி அம்பாளை வழிபடுவர்.

**பங்குனி உற்சவம்**

வருடாந்தம் பங்குனி உற்சவம் வரும் நாள்களில் மட்டுவில் பகுதி விழாக் கோலம் பூண்டு அழகுறக் காட்சியளிக்கும்.

**நேர்த்திக்கடன்**

ஆலயத்திற்கு நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் அடியார்கள் இவ்வருடம் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆலயத்தில் கூடும் பக்தர்கள் பலர் பல விதமான நேர்த்திக்கடன்களை நிறைவு செய்வர். பால்பொங்கல் பொங்கியும் அன்னதானம் செய்தும் நீர்க்கஞ்சி வார்த்தும், தண்ணீர் பந்தல்கள் அமைத்தும் நேர்த்திக்கடன்கள் ஒருபுறம்.

**ஆலயத்தில் திருப்பணிகள்**

அம்பாள் ஆலயத்தில் திருப்பணிகள் பல நடைபெற்று வருகின்றன. ஆலய உட்புற மண்டபங்கள் அமைக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் அம்பாள் ஆலயத்திற்கான - கோபுரம் அமைக்கும் பணிகள் நடைட்பெற்று வருகின்றதும் குறிப்பிடத்தக்கது. இதற்கு வேண்டிய நிதியை மக்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

**ஆலயப் பொங்கலும், மட்டுவில் கத்தரிக்காயும்**

ஆலயத்திற்கு வரும் அடியவர்கள் பொங்கல் பொங்கி மட்டுவில் கத்தரிக்காய் கறி சமைத்து அம்பாளுக்கு நிவேதித்து உண்பர்.

**ஆலயக் கேணி**

ஆலயக்கேணியானது சுமார் 100 அடிக்கு மேல் நீள அகலம் கொண்டது. உற்சவ தினங்களில் இந்த புனித தீர்த்தத்தில்நீராடி தமதுபாவங்களைக் களைவர்.

**ஆலய மஹோற்சவம்**

அம்மனின் மஹோற்சவம் மார்கழி மாதத்தில் திருவெம்பாவை நாள்களில் வருவதும், திருவெம்பாவையின் இறுதி நாள்களான திருவாதிரை நாள்களில் தேர், தீர்த்தம் நடைபெறுவதும் வரலாற்றுச் சிறப்புப்பெற்றது.

ஆனாலும் பங்குனித் திங்கள் உற்சவம் சிறப்பானதாகும். அந்த நாள்களில் கூடும் பக்தர்கள் பெரும் எண்ணிக்கையில் கூடுவதும் தனிச் சிறப்புக் கொண்டது. எனவே இந் நாள்களில் அம்பாளைத் தரிசித்து அவள் பாதங்களைப் பணிவோமாக.

அரும்பு முறற்கடிமலர்ப் பூங்கழல் போற்றி
உத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்பு ருவச்சிலை போற்றி
கவுணியர்க்குப் பால் சுரந்த கலசம் போற்றி
இரும்பு மனங்குழைத்தென்னை யெடுத்தாண்ட அங்கயற்
கருணம் பிராட்டி
அரும்பு மின நகை போற்றி பலராணஷி ....
புரஞ்சிலம்பு மடிகள் போற்றி ★ ★ ★


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 12.02.1939
மறைவு: 13.02.2010

**அமரர் அப்புக்குட்டி கிருஸ்ணசாமி (A.K)**

மெழுகைப்போல் தினம்
எமக்காகி - நின்ற
எம் குலதெய்வமே!
பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
தேடிக்காணா
கை கூப்பும் தெய்வமே- இன்று
நாம் உங்களை இழந்து -
வேதனைகள் சுமந்தபடி
பாதை அறியா கால்களாய்...
என்றும் நெஞ்சினிலே
நினைவுகள் சுமந்தபடி
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

எமது தெய்வத்தின் மரணச்செய்தி கேட்டு ஓடோடிவந்து உதவிகள் பல புரிந்த உற்றார், உறவினர், நண்பர் கள் மற்றும் தொலைபேசியூடாக அனுதாபங்கள் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலியூடாக தம் கவலைகள் பகிர்ந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று (15.03.10) திங்கட்கிழமை மு.ப.11 மணியளவில் வீட்டுக்கிருத்தியக் கிரியையும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் எமது இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் நடைபெறும். இந்நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு அன்பு டன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

உங்கள் பிரிவோடு: மனைவி-சரஸ்வதி
(கமலதாரணி, கேதீஸ்வரன், கிருஸ்ணானந்தி, நிஷாந்தினி, மிதுலன்)

மந்துவில் வடக்கு, கொடிகாமம்.
0779189464 (95763)





ශ්‍රී ලංකා නිදහස් පක්ෂය
ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி
Sri Lanka Freedom Party
නිල් බලඇණිය
நீலப் படையணி
பாராளுமன்றத் தேர்தல் - 2010



5 **வளமான வாழ்வு** 5

**பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிடும் என்னால் முன்வைக்கப்படும் 6 செயல்திட்டங்களை தமிழ் மக்கள் பயன்பெறும் வகையில் முன்னெடுப்பதற்கு**

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு அங்கவீனமானவர்கள், மற்றும் இடம்பெயர்ந்த மக்கள் ஆகியோரின் புது வாழ்வு செயல்திட்டங்களை முன்னெடுப்பதற்கு அன்புள்ளம் கொண்ட சமூக நலன்களில் அக்கறையுடைய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த / முன்னாள் உறுப்பினர்கள், ஆர்வலர்கள்

வடக்கின் வசந்தம் விசேட தொழில்பயிற்சி பயின்ற மாணவர்களில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அங்கத்துவம் பெற்ற மாணவர்கள் ஆகியோர்.

மலர் வாசா, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் (யாழ் தொழில்நுட்பக் கல்லூரிக்கு அண்மையில்) திறக்கப்பட்டுள்ள எனது காரியாலயத்தில் புதன் கிழமை - 17-03-2010 முதல் தொடர்பு கொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறேன்.

1. மஹிந்த சிந்தனையின் நற்பலன்களை அனைத்து தமிழ் மக்களுக்கும் கிடைக்கச் செய்வதுடன் சிதைந்த நம் பிரதேசத்தை மீளக்கட்டியெழுப்புதல்.
2. தமிழ் இளைஞர், யுவதிகள் அனைவருக்கும் தொழில்நுட்ப கல்வியும், உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பும், உயர்கல்வி வாய்ப்பும் ஏற்படுத்தல். மேலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் தொழில்நுட்பக் கல்லூரிகளையும் மீன்பிடி பயிற்சிக் கல்லூரிகளையும் மற்றும் சிறிய மீன்பிடிப் படகுகளை அமைக்கும் நிறுவனங்களையும் நிறுவுதல்.
3. அங்கவீனமான இளைஞர், யுவதிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இருப்பிடத்துடன் கூடிய விசேட தொழில்நுட்ப கல்லூரியை நிறுவி தொழில்நுட்ப பயிற்சியும் சுயதொழில் வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்தல்.
4. யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களுக்கு வீடமைப்பு, வேலைவாய்ப்பு என்பவற்றுடன் கூடிய புதிய வாழ்வை ஏற்படுத்துதல்.
5. சகல மத வழிபாட்டுத்தலங்களும், தமிழ் மக்களின் கலாச்சாரத்திற்கு ஏற்ப சமுதாய மேம்பாட்டுத் திட்டங்களை முன்னெடுக்கச்செய்தல்.
6. மீன்பிடி, விவசாயம், கைத்தொழில் துறைகளை அபிவிருத்தி செய்து பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தி நாட்டின் அபிவிருத்தியை ஏற்படுத்தல்

இவற்றினை வெற்றிகரமாக செய்து முடிப்பதற்கு தாங்கள் வெற்றிலைச் சின்னம் இலக்கம் 5 ற்கு வாக்களித்து பேராதரவு தருவீர்களாக.

உங்களின் பேராதரவு தமிழ் மக்களின் சுபீட்சம் மிக்க வாழ்வாகும்.

என்றும் தங்களின் அர்ப்பணிப்பான சேவையாளன்
**கலாநிதி.ந.யோகராஜன்**
முன்னாள் அதிபர்/பணிப்பாளர்
தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்

அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் நியமிக்கப்பட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட வேட்பாளரும், நீலப்படையணியின் யாழ் மாவட்ட பிரதம அமைப்பாளரும்



## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்



தோற்றம்
03.09.1944

(95906)



மறைவு
14.02.2010

செல்வி
# வினாசித்தம்பி சாவித்திரிதேவி
(ஓய்வுநிலை - ஆங்கில ஆசிரியர்)

கொழும்பில் நடைபெற்ற அன்னாரின் மரணச் சடங்கில் நேரடியாகக் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியோருக்கும் மலர் வளையங்களை வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் இருந்து தொலைபேசி மூலம் கொழும்புத் தற்காலிக இருப்பிடத்திற்கும் அன்னாரின் தமையன் வினாசித்தம்பி செல்வரட்ணம் அவர்களின் 58, பிறவுண் றோட், யாழ்ப்பாண இல்லத்திற்கும் வருகை தந்து துன்ப நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் எல்லோருக்கும் மகிழ்வான நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளும் எமது இல்லத்தில் நாளை (16.03.2010) செவ்வாய்க்கிழமை நடை பெறவுள்ளன.

அத்தருணம் நடைபெறும் சகல நிகழ்வுகளிலும் மற்றும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

58, பிறவுண் றோட், நீராவியடி, யாழ்ப்பாணம்.

வினாசித்தம்பி செல்வரட்ணம் (அண்ணன்),
அமரர் கந்தையா வினாசித்தம்பி
(வாரிவளவு, காரைநகர்) குடும்பத்தினர் சார்பில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜாவாக் கடலில் தவிக்கும் ஈழ அகதிகளை மீட்குமாறு ஆஸி. அரசை வலியுறுத்துக!

## மத்திய அரசிடம் நெடுமாறன் கோரிக்கை



திருச்சி, மார்ச் 15

ஜாவா கடலில் கப்பலில் சிக்கித் தவிக்கும் 257 இலங்கைத் தமிழ் அகதிகளை மீட்க ஆஸ்திரேலிய அரசை இந்திய அரசு வற்புறுத்த வேண்டும் - என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் வலியுறுத்தியுள்ளார்.

திருச்சியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அளித்த பேட்டியின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கை இராணுவத்துக்கு அஞ்சி உயிர் பிழைக்க பழுதடைந்த கப்பல் ஒன்றின் மூலம் 257 தமிழர்கள் ஆஸ்திரேலியா நோக்கிப் பயணம் செய்தனர். நடுவழியில் ஜாவா கடல் அருகே இந்தோனேஷிய கடற்படை அவர்களைத் தடுத்து நிறுத்தியது.

கடந்த 150 நாள்களுக்கும் மேலாக அந்தக் கப்பலில் உள்ள ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரும் உணவோ, மருந்தோ போதுமான அளவு இல்லாமல் தவித்து வருகின்றனர். கப்பலை விட்டு இறங்கினால், இந்தோனேஷிய அரசு தங்களை இலங்கைக்குத் திரும்ப அனுப்பிவிடுமோ என்ற அச்சத்தில் கப்பலிலேயே இருந்து கொண்டு உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

ஆஸ்திரேலிய பிரதமர் கெவின் ரூத், இந்தோனேஷியக் குடியரசுத் தலைவர் சுசிலோ பாங் பேங்க் யுதோனோ ஆகிய இருவரும் கடந்த 10 ஆம் திகதி ஆஸ்திரேலியாவில் கான்பெரா நகரில் சந்தித்துப் பேசினர். ஆனாலும், தமிழ் அகதிகளுக்கு ஆஸ்திரேலியாவில் இடம்கொடுத்து ஆதரிப்பது குறித்து எந்த முடிவும் எடுக்கவில்லை.

எனவே, இந்த அகதிகளுக்கு அடைக்கலம் கொடுக்கும்படி ஆஸ்திரேலிய அரசை வலியுறுத்த வேண்டிய கடமை இந்திய அரசுக்கும், உலக நாடுகளுக்கும் உண்டு.

இந்தக் கோரிக்கையை மனிதாபிமானத்துடன் அணுகி, தமிழ் அகதிகளின் உயிர்களை இந்திய அரசு காக்க வேண்டும். ஆஸ்திரேலியாவுக்கு அனுப்ப முடியாவிட்டால் தமிழ்நாட்டு அகதிகள் முகாமிலாவது அவர்களைத் தங்க வைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

கர்நாடகத்தில் 45 லட்சம் தமிழர்கள் பரம்பரை பரம்பரையாக வசித்து வருகின்றனர். ஆனால், தமிழர்களையும் விடக் குறைவாக இருக்கும் மராத்தி, தெலுங்கு பேசுவோருக்கெல்லாம் மொழிச் சிறுபான்மையினர்

அந்தஸ்தை வழங்கி சலுகைகளை அந்த அரசு அளித்து வருகிறது. தமிழர்களுக்கு மொழிச் சிறுபான்மையினர் அந்தஸ்து இல்லை.

இதனால், கடந்த ஓராண்டில் ஏறத்தாழ 160 தமிழ்ப் பாடசாலைகள் கர்நாடகத்தில் மூடப்பட்டுள்ளன. எனவே, கர்நாடகத்தில் தமிழர்களையும் மொழிச் சிறுபான்மையினராக அறிவிக்க தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் - என்றார்.

## கொச்சியைத் தாக்க பயங்கரவாதிகள் சதி உளவுத்துறை தகவல்; பாதுகாப்பு தீவிரம்

கேரள மாநிலம் கொச்சியில், லஷ்கர் -இ- தொய்பா பயங்கரவாத இயக்கத்தினர் தாக்குதல் நடத்தலாம் என மத்திய புலனாய்வுத் துறையினர் எச்சரிக்கை விடுத்ததையடுத்து அந்நகரில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

கேரளாவில் அமைந்துள்ள கொச்சி நகரின் பொலிஸ் கமிஷனர் மனோஜ் ஆபிரகாமிடம் நேற்றுமுன்தினம் பேசிய மத்திய உள்துறைச் செயலர் ஜி.கே.பிள்ளை, பயங்கரவாத அச்சுறுத்தல் குறித்த தகவலை தெரிவித்தார்.

இதுகுறித்து மத்திய உள்துறைச் செயலர் ஜி.கே.பிள்ளை கூறுகையில் -

மத்திய புலனாய்வுத் துறையினர் தெரிவித்த தகவலின் அடிப்படையில், கொச்சி நகரின் பாதுகாப்பு குறித்து எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது - என்றார்.

கேரளாவில் குறிப்பிட்ட எந்த இடத்திற்கும் பயங்கரவாத அச்சுறுத்தல் இல்லையென உள்ளூர் பொலிஸார் தெரிவித்தபோதும் அம்மாநிலத்தின் கடற்கரைப் பகுதிகளில் கண்காணிப்பு அதிகரிக்கப் பட்டுள்ளது.

## இந்தியச் செய்திகள்

# புதிய இந்தியாவை வழிநடத்துவதற்கு தமிழர் முன்னுதாரணமாகத் திகழ்வர்!

## பிரதமர் மன்மோகன் சிங் நம்பிக்கை

சென்னை, மார்ச் 15

முதல்வர் கருணாநிதி தலைமையின் கீழ் இந்தியாவிலேயே தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. புதிய இந்தியாவை வழிநடத்துவதற்கு தமிழர்கள் முன் உதாரணமாக திகழ்வார்கள் என்பது உறுதி - என்று பிரதமர் மன்மோகன்சிங் பாராட்டினார்.

சென்னையில் புதிய சட்டசபை மற்றும் தலைமைச் செயலகக் கட்டடத்தைத் திறந்து வைத்துப் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

இவ்வளவு பிரமாண்டமான கட்டடத்தைக் கட்டி எழுப்பியிருக்கும் முதல்வர் கருணாநிதிக்கு முதலில் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நூற்றாண்டு கால பாரம்பரியம் மிகுந்ததாக உள்ள முந்தைய தமிழக சட்டசபை, இந்தியாவுக்குப் பெருமை சேர்த்த குடிமகன்கள், குடிமகள்களை கண்டுள்ளது. குறிப்பாக ராஜாஜி, காமராஜர், அண்ணா ஆகியோர் சுதந்திர இந்தியாவின் இயக்கங்களுக்கும், தமிழக மக்களுக்கும் பெருந்தலைவர்களாகத் திகழ்ந்தனர்.

அவர்களைப்போல் சி.சுப்பிரமணியம், ஆர்.வெங்கட்ராமன், எம்.ஜி.ஆர். போன்ற தலைவர்களும் தேசத்துக்காக மிகப்பெரிய அளவில் சேவையாற்றியுள்ளனர். தமிழக முன்னேற்றத்துக்கும், இந்தியாவின் மேம்பாட்டுக்கும் இவர்கள் ஒவ்வொருவரும் அரும்பாடுபட்டனர். பசுமைப்புரட்சிக்கு சி.சுப்பிரமணியம், தமிழகத்தில் தொழில் மேம்பாட்டுக்கு ஆர்.வெங்கட்ராமன் ஆகியோர் பங்களித்தனர். மதிய உணவு திட்டத்தை கொண்டு வந்ததன் மூலம் நம் எல்லோருக்கும் எம்.ஜி.ஆர். நல்ல உதாரணமாக திகழ்ந்தார்.

தற்போது முதல்வர் கருணாநிதி முன்னிலையில் நான் நின்று கொண்டிருப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. இதுபோன்ற கட்டடத்தை கட்டுவதற்கான முடிவை தமிழக அரசியலில் மாபெரும் மனிதராக விளங்கும் இவரால்தான் எடுக்க முடியும்.

முதல்வர் கருணாநிதியின் தலைமையில், இந்தியாவிலேயே தமிழகம் ஒரு முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வெற்றிநடை போட்டுக்கொண்டிருக்கிறது - என்றார்.

# ஆப்கானில் தொடர் குண்டுவெடிப்பு 31 பேர் உயிரிழப்பு; 53 பேர் காயம்!

கந்தகார், மார்ச் 15

தென் ஆப்கான் நகரான கந்தகாரில், சனிக்கிழமை இரவு இடம்பெற்ற ஏழு தொடர் குண்டுத் தாக்குதல் சம்பவங்களில் 31 பேர் கொல்லப்பட்டனர். 53 பேர் காயமடைந்தனர் என கந்தகார் மாகாண ஆளுநர் டுரியலாய் வீசா நேற்று ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

சனிக்கிழமை இரவு அடுத்தடுத்து ஏழு குண்டுத் தாக்குதல் சம்பவங்கள் இடம் பெற்றன. இக்குண்டு வெடிப்புகளால் கட்டடங்கள் இடிந்து விழுந்துள்ளன. கட்டட இடிபாடுகளுக்குள் இன்னும் பலர் சிக்குண்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது என்றும் அவர் ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

ஏழு தாக்குதல்களில் நான்கு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களாகும். இவற்றில் இரண்டு, கார்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒரு கார்க்குண்டுத் தாக்குதல் சிறைச்சாலைக்கு வெளியேயும், பிறிதொரு கார்க்குண்டுத் தாக்குதல் மாகாண பொலிஸ் தலைமையகத்துக்கு அருகிலும் நடத்தப்பட்டுள்ளன என்றும் ஆளுநர் டுரியலாய் வீசா விவரித்தார்.

சிறைச்சாலைக்கு அருகில் 25 கடைகளும், ஏழு வீடுகளும் இக்கார்க் குண் டுத் தாக்குதல்களில் நிர்மூலமாக்கப்பட்டுவிட்டன. கட்டட இடிபாடுகளிலிருந்து சடலங்கள் மீட்கப்பட்டன. மீட்புப் பணிகள் நீடிக்கின்றன என்றும், ஆளுநர் மேலும் இச் செய்தி நிறுவனத்துக்கு விளக்கினார்.

குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட இடத்துக்கருகிலுள்ள மண்டபமொன்றில் நிகழ்ந்துகொண்டிருந்த திருமண வைபவத்தில் கலந்துகொண்டோரில் 10 பேரும் இதற்குப் பலியாகியுள்ளனர். இவர்களில் பெண்களும், பிள்ளைகளும் அடங்குவர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மற்றுமொரு குண்டுத்தாக்குதல் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை, கந்தகார் நகரிலுள்ள ஜப்பானிய கட்டுமான நிறுவன அலுவலகத்துக்கருகில் இடம்பெற்றது. இதில் ஐவர் படுகாயமடைந்தனர். இவர்களில் நான்கு பாகிஸ்தானியரும், ஓர் ஆப்கானிஸ்தானியரும் அடங்குவர். இதர விவரங்கள் உடனடியாக வெளியாகவில்லை என்றும் அவர் கூறினார்.

அதேவேளை, இத்தாக்குதல்களுக்கு தலிபான் தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. தலிபான் பேச்சாளர் யூசுப் அஹ்மதி இதுகுறித்து ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவிக்கையில், ''கந்தகார் பிரதான சிறைச்சாலையையும், நகரிலுள்ளஇதர அரச கட்டடங்களையும் இலக்கு வைத்து சனிக்கிழமை இரவு 8 மணியளவில் தலிபான் தீவிரவாதிகளே தாக்குதல்களை மேற்கொண்டார்கள்'' என்றார்.

''தலிபான்களை பூண்டோடு அழிக்க கந்தகாரிலேயே முழுவீச்சில் இராணுவ அதிரடி நடவடிக்கை ஆரம்பமாகும் என இந்த தளபதி அறிவித்தல் விடுத்திருந்தார். அதற்குப் பதிலடி நடவடிக்கையாகவே இத்தொடர் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன'' என்றும் அவர் தெரிவித்துக்கொண்டார்.

## உலக அரங்கில்

# 18 வயதுக்குட்பட்டவர்களுக்கு 'சிம் கார்ட்' விற்பதற்குத் தடை!

## பங்களாதேஷில் புதிய சட்டம்

டாக்கா, மார்ச் 15

பங்களாதேஷில் 18 வயதுக்குட்பட்டவர்களுக்கு கையடக்கத் தொலைபேசி அட்டைகள் விற்பனை செய்வதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. அரசு இதற்கான புதிய சட்டமொன்றைக் கொண்டு வந்துள்ளது.

பங்களாதேஷில் 5 கோடியே 60 இலட்சம் பேர் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்துகிறார்கள். இவர்களில் பல ஆயிரம் பேர் இவற்றின் மூலம் மிரட்டல் விடுத்துள்ளனர் என்றும், பணம் கேட்டு மிரட்டியுள்ளனர் என்றும முறைப்பாடுகள் வந்தன.

இதைத் தொடர்ந்து இப்படி மிரட்டல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்ட 2 இலட்சம் பேரின் கையடக்கத் தொலைபேசி இணைப்புகள் இரத்துச் செய்யப்பட்டன. மேலும் 12 இலட்சம் பதிவு பெறாத 'சிம் கார்டு'கள் முடக்கி வைக்கப்பட்டுள்ளன.

பிரதமர் ஷேக் ஹசீனா, அவரது உறவினரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பஸ்லே நூர் தபோஷ் ஆகியோருக்கும்கூட கையடக்கத் தொலைபேசிகளில் மிரட்டல் எஸ்.எம்.எஸ்கள் வந்துள்ளன.

இதைத் தொடர்ந்து அரசு புதிய சட்டம் கொண்டுவந்துள்ளது. அதன்படி 18 வயதுக்கு உட்பட்டவர்கள் கையடக்கத் தொலைபேசி அட்டை வாங்க முடியாது. மேலும் இந்த அட்டைகள் விற்பவர்கள் பள்ளிக்கூட படிப்பை படித்தவர்களாக இருக்க வேண்டும். பொலிஸாரின் சோதனைக்கும் உட்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

# பாகிஸ்தானில் மீண்டும் தாக்குதல் 13 பேர் மரணம்; 52 பேர் காயம்!

## ரிக்‌ஷோவில் வந்தவர் நீதிமன்ற வளாகத்தில் கைவரிசை

பெஷாவர், மார்ச் 15

பாகிஸ்தானின் வடமேற்கிலுள்ள ஸ்வாட் பள்ளத்தாக்கில் உள்ள பாதுகாப்பு நிறைந்த நீதிமன்ற வளாகத்தில் சனிக்கிழமை குண்டு வெடித்தது.

தற்கொலைப் படையைச் சேர்ந்த தீவிரவாதி நடத்திய இந்தத் தாக்குதலில் 4 பொலிஸார் உட்பட 13 பேர் உயிரிழந்தனர். 52 பேர் படுகாயமடைந்தனர்.

லாகூரில் வெள்ளிக்கிழமை நடந்த குண்டு வெடிப்பில் 45 பேர் கொல்லப்பட்டுள்ள நிலையில், ஸ்வாட் பள்ளத்தாக்கிலுள்ள நீதிமன்ற வளாகத்தில் சனிக்கிழமை நிகழ்ந்த குண்டுவெடிப்பு நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

''தற்கொலைப் படை தீவிரவாதி ஸ்வாட் பள்ளத்தாக்கிலிருந்து ரிக்‌ஷோ மூலமாக மிங்கோரா பகுதிக்கு வந்துள்ளார். அங்கிருந்து நீதிமன்ற வளாகத்திற்கு நுழைய முயன்றபோது சோதனைச்சாவடியில் இருந்த பாதுகாப்புப் படைச்சிப்பாய்கள் அவரைத் துப்பாக்கியால் சுட்டுள்ளனர். அப்போது தீவிரவாதி தனது உடலில் கட்டியிருந்த குண்டை வெடிக்கச் செய்துள்ளார்'' என பொலிஸ் உயர் அதிகாரி காஸி குலாம் ஃபாரூக் தெரிவித்தார்.

பாதுகாப்புப் படைச்சிப்பாய்களும், பொலிஸாரும் இணைந்தே இந்த சோதனைச்சாவடியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இங்கு நடந்த குண்டுவெடிப்பில் 4 பொலிஸார் உட்பட 13 பேர் உயிரிழந்தனர்.

படுகாயமடைந்த 52 பேர் அருகிலுள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தப் பயங்கர குண்டுவெடிப்பில் 5 கார்கள் எரிந்து நாசமாயின. 15 கிலோ எடையுள்ள வெடிபொருள்களைப் பயன்படுத்தி இந்தக் குண்டுவெடிப்பு நிகழ்த்தப்பட்டுள்ளது.

குண்டுவெடிப்பு நடந்த மிங்கோரா பகுதியிலுள்ள ஹோட்டல்களும், கடைகளும் மூடப்பட்டன. குண்டுவெடிப்பு நடந்த இடத்திற்கு அருகிலுள்ள மாவட்ட நீதிமன்றங்களையும், அரசு விருந்தினர் மாளிகையையும் சுற்றி இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது. ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை செல்வி
சே.சிவாஜினி அவர்களின் அன்புப் பேரனார்

**அமரர் சின்னப்பு சின்னத்தம்பி**

அவாகளின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்ப தோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(95903)

யா/குடமியன் அ.த.க.பாடசாலை,
வரணி.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





| வயிரமுத்து திருவெங்கடாசலம் | | திருவெங்கடாசலம் சிவபாக்கியம் | |
|---|---|---|---|
| தோற்றம் | மறைவு | தோற்றம் | மறைவு |
| 28.05.1934 | 26.03.2009 | 18.03.1933 | 03.02.2009 |

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்டவர்கள் அமரர் வயிரமுத்து திருவெங்கடாசலம், அமரர் திருவெங்கடாசலம் சிவபாக்கியம்

எங்கள் குடும்ப குல விளக்கே அன்பின் இருப்பிடமே!
அறிவின் பொக்கிசமே பார்போற்றும் நல்ல உத்தமரே!
எம்மையெல்லாம் கண்ணை இமை காப்பதுபோலக் காத்தவரே
உங்களைக்கொடிய நோய்காவு கொண்டதுவோ
எங்களை ஆதரிப்பதற்கு ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
உங்கள் அன்பிற்கும் அரவணைப்பிற்கும் ஈடாகுமா?
ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறாது உங்கள் நினைவு
உங்கள் ஆத்மா சாந்திபெற வேண்டி நிற்கிறோம்
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி!

*இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்*

*நிரந்தர முகவரி*
கேணிப்புரம்
6ஆம் வட்டாரம், மயிலிட்டி.

பிள்ளைகள், மருமகன்மார், மருமகள்,பேரப்பிள்ளைகள், P.சிவகடாட்சம்
"முத்துலட்சுமி" வாசா மருதங்குள வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

(95572)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

**கந்தவனம் சரஸ்வதி**

*திதி- அமாவாசை (15.03.2010)*

மலர்வு
03★05★1939

உதிர்வு
27★03★2009

ஆற்றொண்ணாத் துயருடன் ஆண்டொன்று
ஓடி மறைந்த போதும் இதயத்தில் எப்போதும்
உங்கள் நினைவுகளே எம்மை ஆளுகின்றன.
எம் உயிர் உள்ளவரை உங்களை மறவோம் அம்மா!

6/2,புராடி முன் ஒழுங்கை,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

*உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்.*
*குடும்பத்தினர்.*

(95901)

## மரண அறிவித்தல்

### *சவரிமுத்து சின்னத்துரை தேவசகாயம்*



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் நக்கா லேன் யாழ்ப்பாணத்தை வசிப்பிட மாகவும் கொண்ட சவரிமுத்து சின்னத் துரை தேவசகாயம் நேற்று (14.03.2010) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற் றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல. 28, நக்கா லேன்,*
*சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.*
*தொ.பே.எண்: 021 222 3405*

(95913)

தகவல்:
குடும்பத்தினர்.

## ஈழத்துச் சிதம்பரம் மகோற்சவம்

காரைநகர், மார்ச் 15

வரலாற்றுச் சிறப்புமிக்க காரைநகர் ஈழத்துச்சிதம்பர வருடாந்தப் பெருந்திரு விழா எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமா கித் தொடர்ந்து 11 தினங்கள் சிறப்பாக நடைபெற உள்ளது.

எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் திரு விழா ஆரம்பமாகும்.

28 ஆம் திகதி காலை 9 மணிக்கு பஞ்சரத பவனியும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணிக்கு நடேசர் உற்சவமும் நண்பகல் 12 மணிக்கு உருத் திர தீர்த்தமும் இரவு 7 மணிக்கு கொடி இறக்க உற்ச வமும் 30 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மாலை 5 மணிக்கு திருக் கல்யாண உற்சவ மும் இடம் பெறும். (ஒ-250)

### ஓய்வூதியர் நம்பிக்கை நிதியக்கூட்டம்

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக் கை நிதிய யாழ்.பிர தேச சங்கத்தின் வரு டாந்த பொதுக் கூட் டம் எதிர்வரும் சனிக் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்.புனித சாள்ஸ் மகா வித்தியாலயத் தில் நடைபெறவுள் ளது.

வி.ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம், சிறப்பு விருந்தினராக யாழ்.பிரதேச செயல கக்கணக்காளர் வே.வேல்நிதி ஆகி யோர் கலந்து கொள் வர். (ஒ-10)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சரஸ்வதி மார்க்கண்டு



வண்ணார்பண்ணையைப் பிறப்பிட மாகவும், டச்சு வீதி, சங்கத்தானை, சாவகச் சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மார்க்கண்டு சரஸ்வதி நேற்று (14.03.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.50மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரெத்தினம்- காசியம்மா தம்ப தியரின் மகளும், ந.விஜயரட்ணத்தின் (ஏறாவூர்) சகோதரி யும், அமரர்களான பொன்னையா-முத்துப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், கூட்டுறவு இலாகா ஓய்வூதியரும் சங்கத் தானையை சேர்ந்த பிரபல சோதிடருமான மார்க்கண்டுவின் அன்பு மனைவியும், கருணாதேவி, நிர்மலாதேவி, வசந்தா தேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், வரதராசா (ஓய்வு பெற்ற மின் அத்தியட்சகர்), கிருஷ்ணகுமார் (Ceylon Ocean - Lines), ஜெயராஜசிங்கம் (முன்னாள் CREMIC CORPORATION) ஆகியோரின் மாமியாரும், ரகுராம்-நந்தினி, பிரபுராம்- மஞ்சுளா, ராஜாராம்-லதா, சத்தியபாமா-ஸ்ரீரஞ்சன், கார்த்திகன் -கலைவாணி, யோகிதா- இந்திரஜித், அனுஷா- சண்முகவசந்தன், பிருந்தா-கஜதீபன், ஜெயந்தா ஆகியோரின் அருமை பேர்த்தியாரும், விபூசிதன், பிரணவன், சங்கவி, மிதுரா, அஸ்வின், சாய்வின், ஸ்ரீகிருசோத்தமன், விசாலி, கணாதீபன், கஜதீபன், கனகதாரா, அஞ்சு, அஜித்த, கபிலா, கானப்பிரியா, ஜஸ்மிதா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2010) திங்கட்கிழமை முற்பகல் 11மணியளவில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி, கன்னாடிப்பிட்டி மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச் வீதி,
சாவகச்சேரி.

(சி/565718)

தகவல்:
குடும்பத்தினர்.

### *வேலுப்பிள்ளை கந்தசாமி (சின்னையா)*

(ஓய்வு பெற்ற இ.போ.ச.ஊழியர்)



கச்சாய் வடக்கு, கொடிகாமத்தைப் பிறப் பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட் வேலுப்பிள்ளை கந்தசாமி (சின்னையா) - (ஓய்வு பெற்ற இ.போ.ச. ஊழியர்) கடந்த 12.03.2010 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- அமுதாத்தை தம்பதியினரின் அன்பு மகனும், மல்லிகாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்லையா மற்றும் செல்லமுத்து தம்பதியி னரின் அன்பு மருமகனும், அமரர்களான சின்னத்தம்பி, வினாசித் தம்பி மற்றும் அன்னலட்சுமி, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்திரசேகரம், மகேந்திரம் ஆகியோரின் மைத்து னரும், அகிலன் (ஆசிரியர், மன்னார்), புஸ்பராணி (கனடா), புஸ்பகுமார், புஸ்பகௌரி, புஸ்பநேசன், புஸ்பமாலா, கஜந்தன் (இத்தாலி), வரதாசினி ஆகியோரின் அன்புத் தந்தையும், அற்புத ஜெயம், பகவதி, சந்திரமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், சாந்தஜெயம் (கனடா), பவிக்கா (கனடா), உதயகுமார் (பிரான்ஸ்), சுதேசினி (கல்வியியற்கல்லூரி, மட்டக் களப்பு), பிரியங்கன், குபேதினி, யாதுரன், கிரிஷிகா, ஜீவிதா, பவிதன், அருணன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2010) திங்கட் கிழமை பிற்பகல் 3மணியளவில் அவரது இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வெள்ளாம் போக்கட்டி, கொற்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிஷித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் வடக்கு,
கொடிகாமம்.
0716787903.

(C/565719)

தகவல்:
மனைவி, மக்கள்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 14.02.2010 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவர்

**அமரர் செல்வத்துரை செல்வேந்திரன் (அன்ரப்பா)**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (16.03.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும், மதிய போசனத் திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அரசடி ... வீதி, இணுவில்.

(95915)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்ப பொருள்களை வாங்கியமை தொடர்பிலேயே ஆயுதக் கொள்வனவு மோசடிக் குற்றச்சாட்டாம்

## பொன்சேகா மீதான நடவடிக்கை குறித்து அவரது தரப்பில் தகவல்

கொழும்பு, மார்ச் 15

ஜெனரல் சரத் பொன்சேகா சேவையில் இருந்தபோது மின்பிறப்பாக்கிகள், பற்றரிகள், தொலைநோக்கிகள், பாதுகாப்புக்காகப் பயன்படுத்தப்படும் தொலைக்காட்சிகள் மற்றும் திசைகாட்டிகள் போன்றவற்றைக் கொள்வனவு செய்தார் என்பதே அவர் மீது சுமத்தப்பட்டிருக்கும் ஆயுதக் கொள்வனவு மோசடிக் குற்றச்சாட்டாகும் என்று ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நேற்றுக் கூறினார்.

இந்தக் குற்றச்சாட்டை எந்தவொரு நீதிமன்றத்திலும் விசாரிக்க முடியாது என்றும், நாளை இடம்பெறப்போகும் இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராகுவது தொடர்பில் தமது சட்டத்தரணிகளின் யோசனைப்படி பொன்சேகா முடிவெடுப்பார் என்றும் அநுரகுமார திஸாநாயக்க கூறினார்.

பொன்சேகாவின் கொழும்பு அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அநுரகுமார திஸாநாயக்க இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

பொன்சேகாவைக் கைதுசெய்து ஒரு மாதமாக அடைத்துவைத்து அவர் மீது அரசு சிறுபிள்ளைத்தனமாக இரண்டு குற்றப்பத்திரங்களைச் சுமத்தியுள்ளது.

சேவையில் இருந்தபோது பொன்சேகா பெரும் ஆயுதக் கொள்வனவு மோசடியில் ஈடுபட்டிருந்தார் என்பது அவர் மீது சுமத்தப்பட்ட முதல் குற்றப்பத்திரமாகும்.

5 கிலோவாட் மின்பிறப்பாக்கிகள் - ஐம்பது, பாதுகாப்புத் தொலைக்காட்சிகள் - இரண்டு, தொலை நோக்கிக் கருவிகள் - இருநூற்றியைம்பது, 12 வோட் பற்றரிகள் - ஐம்பது மற்றும் திசைகாட்டிக் கருவிகள் போன்றவற்றைக் கொள்வனவு செய்தார் என்பதே அவர் மீதான குற்றச்சாட்டாகும்.

கோடிக்கணக்கான ரூபா பெறுமதி வாய்ந்த ஆயுதங்களைக் கொள்வனவு செய்து அரசு பெரும் மோசடியில் ஈடுபட்டு விட்டு, சிறிய எண்ணிக்கையிலான பொருள் கொள்வனவு தொடர்பில் பெரும் ஆயுதக் கொள்வனவுக் குற்றச்சாட்டை பொன்சேகா மீது அரசு சுமத்தியுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டு இராணுவ நீதிமன்றத்தில் மாத்திரமல்ல, சிவில் நீதிமன்றத்தில் கூட விசாரிக்கப்பட முடியாதது.

இது, பொன்சேகா மீதான படு மோசமான அரசியல் பழிவாங்கலாகும்.

கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரைக் கொலை செய்வதற்காக பொன்சேகா சதித்திட்டம் தீட்டி ஹோட்டலில் தங்கியிருந்தார் என்று அரசு தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டிக்கொண்டிருந்தது. பொன்சேகாவுக்கு எதிராகத் தற்போது தயாரிக்கப்பட்டிருக்கும் குற்றப் பத்திரிகையில் இந்தக் குற்றச்சாட்டும் இல்லை. அப்படியென்றால் அரசு பொய் கூறி இந்த நாட்டு மக்களை ஏமாற்றியிருக்கின்றது.

சேவையில் இருந்தபோது எதிர்க்கட்சி எம்.பிக்களுடன் பொன்சேகா தொடர்பு வைத்திருந்தார் என்பது அவர் மீதான இரண்டாவது குற்றச்சாட்டாகும்.

அவர் சேவையில் இருந்தபோது முதன்முதலாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, அமைச்சர் சம்பிக்க ரணவக்க மற்றும் ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் வண. எல்லாவல மேதானந்த தேரர் ஆகியோர் பொன்சேகாவின் வீட்டுக்குச் சென்று அரசுடன் சேர்ந்து அரசியலில் ஈடுபடுமாறு அவரிடம் கோரிக்கை விடுத்தனர்.

அம்பலாங்கொடயில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அமைப்பாளராகி, அமைச்சுப் பதவியையும் பெற்றுக் கொள்ளுமாறு அவர்கள் பொன்சேகாவிடம் கேட்டனர். ஆனால், பொன்சேகா எதிர்க் கட்சி எம்.பிக்களுடன் பேசினார் என்பதை அரசு குற்றச்சாட்டாகச் சுமத்துகின்றது.

இவை அனைத்தும் அரசின் திட்டமிட்ட பழிவாங்கல்களாகும் - என்றார். (ஒ-சி)



சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளையில் மத்திய மயப்படுத்தப்பட்ட தரமுயர்த்திய கணனி சேவைத் தொடக்க விழா அண்மையில் நடைபெற்றது. இதில் மக்கள் வங்கியின் உதவிப்பொது முகாமையார் த.சு. ஆனந்தராசா மங்கல விளக்கை ஏற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதையும் அருகில் செயற்பாட்டு முகாமையாளர் சு.இராசமனோகரன், உதவி முகாமையாளர் அ.தேவகுமாரன், வங்கி உத்தியோத்தர் பொ. தேவநேசன் ஆகியோர் நிற்பதனையும் படத்தில் காணலாம்.

## பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், மார்ச் 15

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையும் யாழ். மாவட்டக் கைத்தொழில் அபிவிருத்தி சபையும் இணைந்து 'உடன் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட விவசாயப் பொருள்களின் ஏற்றுமதிக்கான பயிற்சிப் பட்டறை' ஒன்றை நடத்தவுள்ளன.

எதிர்வரும் 25 ஆம் திகதிகாலை 9 மணிக்கு யாழ். செயலக பொது மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் 'கைத்தொழில் அபிவிருத்திச்சபை, தேசிய வீடமைப்பு அதிகார சபைக் கட்டடம், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்' எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-6)

# காணாமற்போன எமது உறவுகளை மீட்டுத்தர இம்முறையாவது வேட்பாளர்கள் முயற்சிப்பார்களா?

## பெற்றோர்கள், உறவினர்கள் கண்ணீர் மல்கக் கேட்கின்றனர்

யாழ்ப்பாணம், மார்ச்15

1996 ஆம் ஆண்டு முதல் காணாமற் போன தமது உறவுகளைக் கண்டு பிடித்து தருவதற்குத் தற்போது நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

- இவ்வாறு காணாமற் போனவர்களின் பெற்றோர், உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்துக்கும் ஏனைய அரச படைத்தரப்பு அலுவலகங்களுக்கும் தினமும் ஆயிரக் கணக்கானோர் காணாமற் போனோரைத் தேடி அலைந்து திரிகின்றனர். இந்த உறவுகள் வருடங்கள் பல கடந்த பின்னும் தம் கண்ணீருக்கு இன் னும் முடிவில்லாததால் தற்போது நடாளு மன்றத் தேர்தலில் போட்டியிடும் தமிழ் வேட் பாளர்கள், தமது வேதனைகளை உணர்ந்து செயற்படுவார்களா என்று அவர்கள்தமது ஆதங்கத்தை வெளியிட்டுள்ளனர்.தேர்தல் காலத்தில் பல்வேறு வாக்குறுதிகளை வாரி வழங்கும் வேட்பாளர்கள் தேர்தலில் வெற்றிபெற்றதும் எமது உறவுகளைத் கண்டுபிடித்துத் தருவதற்கு ஆக்கபூர்மான நடவடிக்கை ஏதும் எடுப்பதாகத் தெரிய வில்லை.

எனவே குடாநாட்டில் போட்டியிடும் தமிழ் வேட்பாளர்கள் வெற்றிபெற்றதும் கைது செய்யப்பட்டு காணாமற்போன உறவுகளை மீட்டுத் தருவதற்கு இம்முறையாவது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

-இவ்வாறு காணாமற்போனோரின் உறவினர்கள் கண்ணீர் மல்க வேண்டுகோள் விடுக்கின்றனர். (ஒ- 4- 224)

### அண்மைக்காலத்தில் மீளக்குடியமர்ந்த

# பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு மக்களுக்கு ரூ.25ஆயிரம் கொடுப்பனவு

குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு 'நிக்கொட்' நிறுவனத்தினரால் வழங்கப்பட்டு வரும் 25ஆயிரம் ரூபா வாழ்வாதாரக் கொடுப்பனவுக்கான அனுமதிக் கடிதங்கள் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் குடியேறிய குடும்பங்களுக்கு நாளை வழங்கப்படவுள்ளதாக அரச அதி பர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 1295 குடும்பங்களுக்கு காலை 9 மணிக்கு வல்வெட்டித்துறை ஆதிகோயில் பல நோக்கு மண்டபத்திலும் பி.ப. ஒரு மணிக்கு பிரதேச செயலர் பணிமனையிலும் கொடுப்பனவுக்கான கடிதங்கள் வழங்கப்படவுள்ளன.

எனவே உரியவர்கள் தேசிய அடையாள அட்டை அல்லது பிறப்புச் சான்றிதழ், குடும்ப அட்டை, வங்கி வைப்பு புத் தகம் என்பனவற்றுடன் சென்று அனுமதிக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஒ-10)

# பாடசாலை அதிபர்களிடம் இன்று மடிக் கணனி கையளிக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட, வகை II, வகை III பாடசாலைகளுக்கு மடிக் கணனி கையளிக்கும் நிகழ்வு இன்று முற்பகல் 11.30 மணிக்கு வண்ணை வைத்திலிங்கம் வித்தியாலத்தில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களை இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஒ)

# தெல்லிப்பழை வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு இந்தவாரம் முதல் செயற்பட ஆரம்பிக்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 15

தெல்லிப்பழை அரசினர் பொதுவைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு இந்த வாரத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

வைத்தியசாலைக் கட்டடம் அண்மையில் படையினரால் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து அக் கட்டடத்தில் தற்போது திருத்தப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

இப் பணிகள் முடிவுற்றதும் முதற்கட்டமாக வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு மக்கள் பாவனைக்கென திறந்து வைக்கப்படவுள்ளது. (04-224)

# வேட்பாளர்கள், ஆதரவாளர்களை 'அச்சுறுத்தும்' மயிர்க்கொட்டிகள்!

## காரைநகரில் என்றுமில்லாதவாறு பல்கிப் பெருக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

காரைநகர் பிரதேசத்தில் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டுவரும் வேட்பாளர்களும், ஆதரவாளர்களும் மயிர்கொட்டிகளின் "அச்சுறுத்தல்"களை எதிர்நோக்கி வருகின்றனர்.

காரைநகரில் அரசியல் கட்சிகளும் மற்றும் சுயேச்சைக்குழுக்களின் பிரசாரங்கள் சூடுபிடிக்க தொடங்கியுள்ளன. மதில்கள், சுவர்களை வண்ண வண்ணச் சுவரொட்டிகள் அலங்கரிக்கின்றன.

கருத்தரங்குகள், பொதுக்கூட்டங்களை நடத்திவரும் வேட்பாளர்கள் வீடு வீடாகச் சென்றும் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு பிரசாரங்களில் ஈடுபட்டு வரும் வேட்பாளர்களையும், ஆதரவாளர்களையும் காரைநகரில் பல்கிப் பெருகிப் போயுள்ள மயிர்க்கொட்டிகள் விடுவதாக இல்லை!

காரைநகர் பிரதேசத்தில் என்றுமில்லாதவாறு வகை தொகையின்றி பெருகிக் காணப்படும் மயிர்க்கொட்டிகளினால் காரைநகர் மக்களின் இயல்பு வாழ்க்கை கூட பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றது.

வீடுகள், வீதிகள், அலுவலகங்கள், பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் என எங்கும் நிறைந்து காணப்படும் மயிர் கொட்டிகளினால் அன்றாடப்பணிகள் பாதிக்கப்படுகின்றன.

குழந்தைகள், மாணவர்கள் உட்பட 50இற்கும் மேற்பட்டவர்களின் கண்களை இதுவரை மயிர்க்கொட்டிகள் தாக்கியுள்ளதால் அவர்கள் [illegible] னர் என்றும் தெரியவருகின்றது. (ஒ-250)

# வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் கொள்கைப் பிரகடனம் வெளியிடப்படும்

## நேற்றைய கலந்துரையாடலில் முடிவு

யாழ்ப்பாணம், மார்ச்15

வேலையற்ற பட்டதாரிகள் சங்க நிர்வாகத்தனர் இடையே பொது இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் நோக்கில் கொள்கைப் பிரகடனம் ஒன்று விரைவில் வெளியிடப்படவுள்ளது.

இவ்வாறு நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுடனான கலந்துரையாடலின்போது முடிவு எடுக்கப்பட்டது.

அந்தக் கலந்துரையாடலின் போது மேற்கொள்ளப்பட்ட ஏனைய முடிவுகள் வருமாறு:-

பட்டதாரிகள் சங்க நிர்வாகத்திலுள்ள சில உறுப்பினர்களின் அதிருப்தியான நடவடிக்கைகள் காரணமாக அவர்களை நிர்வாகப் பதவிகளில் இருந்து விலக்க வேண்டியிருந்தது. அதுமட்டுமன்றி அவர்களின் இடத்துக்கு புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் மக்கள் சபைச் செயலாளர், நுண்கலைப்பட்டதாரி ஆசிரியர் ஆகிய நியமனங்கள் வழங்கப்படும் போதும் வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் சிபார்சு மூலமே அவை வழங்கப்பட வேண்டும்.

அற்கான நியமனங்கள் வழ்ங்கப்படும் போது மூப்பின் அடிப்படையில் பட்டம் பெற்று வெளியேறிய ஆண்டு அடிப்படையில்அவை வழங்குவதற்கான பட்டியல் விரைவில் தயார் செய்யப்படவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் 500 இற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தாவும் உரையாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - TNA
இலங்கைத் தமிழரசுக் கட்சி
X 6
25 வருடப் பிணைப்பு
எம் மக்களுடன்...
அந்த வரலாறு
இனியும்
தளராது...!



உதயன்
நிர்வாக இயக்குநர்
தொழிலதிபர்
ஈ.சரவணபவன்

## நிபுணர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ-மூன், மீள்பரிசீலனை செய்யலாம் அல்லது அதனைத் தாமதப்படுத்தலாம் என்று தகவல்கள் வெளிவந்துள்ளன.

ஐ.நா. செயலாளர் நாயகம் விசேட நிபுணர்கள் குழுவை நியமிப்பது தொடர்பாக அணிசேரா நாடுகளின் அமைப்பு கடும் ஆட்சேபம் தெரிவித்ததாலேயே அவர் தமது முடிவை மீள்பரிசீலனை செய்ய முனைந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

நியூயோர்க்கில் உள்ள அணி சேரா நாடுகளின் இயக்கம், பான் கீன் - மூனுக்கு எழுதிய ஆட்சேபனைக் கடிதத்தில் -

இலங்கையின் உள்நாட்டு நிலைமையைக் கருத்தில் கொள்ளாமலும் இலங்கை அரசுடன் உரிய முறையில் ஆலோசனை நடத்தாமலும் -

நிபுணர் குழுவை நியமிக்கும் முடிவை எடுத்திருப்பதாகவும் கண்டனம் தெரிவித்துள்ளது. (அ)

Eisc
EXPRESS INTERNATIONAL STUDIES & CONSULTANTS
VACANCY NOTICE
OFFICE BOY
(அலுவலக உதவியாளர்)
காலம் :- 17-03-2010. (புதன்கிழமை)
நேரம் :- மு.ப. 10.00மணியிலிருந்து..
# 15, SIRAMBIYADI LANE, OFF STANLEY ROAD, JAFFNA.
HOTLINE : - 021 - 2224550 E-MAIL : -
(COSY HOTELக்கு மேல் 2ம் மாடியில்)

## ஐ.நா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் ஊடகச் சுதந்திரம், ஊடகவியலாளர் எதிர்நோக்கும் கஷ்டங்கள் போன்றவையும் அறிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

இவ்வறிக்கை ஐ.நாவின் முக்கிய புள்ளிகள், அரச பிரதிநிதிகள், இராஜதந்திரிகள், சர்வதேச அமைப்பின் பிரதிநிதிகள், கூட்டத் தொடரில் பங்குகொள்ளுவோர் என்று பல தரப்பினருக்கும் விநியோகிக்கப்படுகிறது.

## கூட்டமைப்பின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் அரசாங்க கூட்டமைப்பின் அங்கத்தவரும், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ஸ.

கொழும்பில் நேற்றுத் தாம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

எமது படையினர் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்தமையைத் தொடர்ந்து தமிழீழக் கோட்பாடும் தோற்கடிக்கப்பட்டு விட்டது. ஆனால், சிலர் அந்தக் கொள்கைக்கு மீண்டும் புத்துயிர் கொடுக்க முயற்சிக்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டிருக்கும் தேர்தல் விஞ்ஞாபனம் தமிழீழக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்பட்டுள்ளது. பிரபாகரனின் சிந்தனையை அரங்கேற்றுவதாக இந்த விஞ்ஞாபனம் அமைந்துள்ளது.

இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தனிப் பொலிஸ் அதிகாரம் மற்றும் சுயாட்சி போன்றவை உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த விஞ்ஞாபனம் மீண்டும் பிரிவினைவாதத்தைக் கட்டியெழுப்புவதாக அமைந்துள்ளது.

எம்மால் முற்றாக அழித்தொழிக்கப்பட்ட தமிழீழக் கோட்பாட்டுக்கு மீண்டும் உயிர் கொடுக்க நாம் ஒருபோதும் இடங்கொடுக்க மாட்டோம். நாட்டைத் துண்டாடும் இந்தக் கோட்பாடு மீண்டும் தலைதூக்காதவாறு இந்நாட்டு மக்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தமிழீழக் கொள்கைக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கும் அனைவரையும்கட்டுப்படுத்தும் வகையில் நாடாளுமன்றில் சட்டம் ஒன்று உருவாக்கப்படவேண்டும். அதற்காக எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்நாட்டு மக்கள் அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை வழங்கவேண்டும் - என்றார்.

## 50 வெளிநாட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் இலங்கைக்கு வந்து சேருவர் என்று 'பவ்ரல்' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டி ஆராய்ச்சி தெரிவித்தார்.

ஒரே கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கு இடையில் இடம்பெறும் மோதல்கள் அதிகரித்துள்ளன என்றும் 'பவ்ரல்' அமைப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை, தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக மொத்தம் 66முறைப்பாடுகள் இதுவரை கிடைத்துள்ளன எனத் தெரிவித்த தேர்தல்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண,அவற்றுள் 35 வீதமானவை ஒரே கட்சிக்குள் இடம்பெற்ற மோதல் சம்பவங்களே என்றும் சொன்னார்.

## வடக்கு, கிழக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுதொடர்பாக கடந்த முதலாம் திகதி ஒரு 16,434 இலக்கமிடப்பட்ட என்ற விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. பாதுகாப்புப் படைத் தலைமையகம், படைப்பிரிவு, படையணி, ரெஜிமென்ட், உதவிப் படைப் பிரிவு உள்ளிட்ட இராணுவப் பிரிவுகள் நிரந்தரமான இராணுவப் பிரிவுகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், யுத்த காலத்தில் தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்ட இலங்கை இராணுவத்தின் தொண்டர் படையணியும், இராணுவத்தின் நிரந்தரப் பிரிவாக ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு, கிளிநொச்சி, முல்லைத்தீவு என்பன பாதுகாப்புப் படைத் தலைமையகங்களாகவும், வெலிஓயா, ஹம்பாந்தோட்டை, யால ஆகிய போன்றவை பிரதேச தலைமையகங்களாகவும், அறிவிக்கப்பட்டுள்ளதுடன் கிளிநொச்சி, முல்லைத்தீவு, ஏனைய செயற்பாட்டுப் பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இதனைத் தவிர யுத்தத்தின்போது ஆரம்பிக்கப்பட்ட ஐந்து படைப் பிரிவுகள், 28 படையணிகள், ரெஜிமென்ட் மற்றும் 49 படையணிகள், 12 உதவிப் படைப் பிரிவுகள் என்பன நிரந்தரமான இராணுவப் பிரிவுகளாக மாற்றப்படும் என குறித்த வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

## பொன்சேகாவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

பொன்சேகா மீது பொய்க் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி அவர் மீது நாளையும் மறுதினமும் இராணுவ நீதிமன்றில் விசாரணை நடத்த அரசு ஏற்பாடு செய்துள்ளது.

நாட்டைப் பயங்கரவாதத்தின் பிடியில் இருந்து மீட்பதற்காகப் போராடிய பொன்சேகா இன்று சிறைப்படுத்தப்பட்டுள்ளார். ஆனால், அவரால் நாட்டு மக்கள் சுதந்திரமாக நடமாடுகின்றனர். அவரை நாம் மீட்பதற்காகப் போராடவேண்டும்.

பொன்சேகா தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படும் நாளையும், மறுதினமும் அவரின் விடுதலையை வலியுறுத்தி இந்நாட்டு மக்கள் நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களிலும் சமய வழிபாடுகளிலும் ஈடுபட வேண்டும் - என்றார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய பொன்சேகாவின் துணைவியார் அனோமா பொன்சேகா அங்கு கூறியவை வருமாறு:-

அரசு சுமத்தியிருக்கும் குற்றச்சாட்டுகள் எவையும் எனது கணவருக்குப் பொருந்தா. அவர் எந்தக் குற்றமும் செய்யவில்லை. பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து நாட்டை மீட்டெடுத்தாரே தவிர அவர் படையினரைக் காட்டிக்கொடுக்கவில்லை.

அரசு எனது கணவரைத் திட்டமிட்டுப் பழிவாங்குகிறது. அவரைக் காப்பாற்ற இந்நாட்டு மக்கள் அனைவரும் எம்முடன் இணைந்து போராட முன்வரவேண்டும். - என்றார்.

## சுயநிர்ணய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூதூர் கிழக்குப் பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடியதான நியாயமானதும் - நிரந்தரமானதும் - நடைமுறைப்படுத்தக்கூடியதுமான அரசியல் தீர்வு ஒன்றை, யுத்தமற்ற தற்போதைய சூழலில் பெறுவதற்கான வாய்ப்பை இலங்கை அரசு தவறவிடக்கூடாது என்று சர்வதேச சமூகம் இறுக்கமாகக் கூறி வருகின்றது. அவ்வாறான அர்த்த புஷ்டியான, ஆக்கபூர்வமான அரசியல் தீர்வை வழங்குவதற்கான பேச்சுகளை நடத்துவதற்கு அரசு முன்வருமானால் அதற்கு நாம் தயங்க மாட்டோம்.

எமது தாயகத்தில் சட்டம், ஒழுக்கம், பாதுகாப்பு, கல்வி, காணி, தொழில்துறை இன்னும் சகல துறைகளிலும் அர்த்த புஷ்டியான அதிகாரங்களுடன் ஒவ்வொரு இனமும் வாழவேண்டும். தங்களைத் தாங்களே நிர்வகிக்கக் கூடிய உரிமைகளைக் கொண்டதான அரசியல் தீர்வு இலங்கைத் தமிழர் பிரச்சினையில் காணப்பட வேண்டும் என்று சர்வதேச சமூகம் பகிரங்கமாக வலியுறுத்த ஆரம்பித்துள்ளது.

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. நியாயமான அரசியல் தீர்வை ஒன்றைக் காண்பதற்குப் பயன்படுத்த வேண்டும் என்று சர்வதேச சமூகம் இலங்கை அரசுக்குக் கூறிவருகின்ற நிலையில், எதிர்வரும் பொதுத் தேர்தலில் வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குத் தெளிவான, பலமான ஆணையை வழங்க வேண்டும்.

தேர்தலில் தமிழ் மக்கள் வழங்கும் தீர்ப்புக்கு மதிப்பளித்து அரசு பேச்சுக்கு அழைத்தால், அதில் பங்குபற்ற நாம் தயங்கமாட்டோம். ஆனால், பேச்சுகள் ஆக்கபூர்வமானதாக, அர்த்த புஷ்டியான, நடைமுறைச் சாத்தியமானதாகத் தமிழ் மக்கள் தங்கள் பிரதேசங்களைத் தாங்களே ஆளக்கூடியதான தீர்வைக் காணக்கூடியனவாகவும் அமைய வேண்டும்.

தமிழ் மக்கள் வழங்கும் ஜனநாயகத் தீர்ப்பு மதிக்கப்பட வேண்டும். அவ்வாறான தீர்ப்பை அரசு ஏற்க மறுத்தால் நாம் சர்வதேச சமூகத்தின் துணையை நாடுவோம். நாம் இது தொடர்பாக சர்வதேச சமூகம் மற்றும் இந்தியாவுடன் தொடர்பு கொண்டுள்ளோம் - என்றும் இரா.சம்பந்தன் கூறினார். (அ)

LAVA HOSPITAL
75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333
ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.
Basic Body Checkup
'அடிப்படை உடற் பரிசோதனைகள்'
★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான
Obesity package - 1200/=
www.lavahospitals.com/blog
(சி/562626)




என் இனிய மாணவர்களே!
பொருளியற் கல்லூரி (யாழ், இணுவில்) BARATHY - சித்தங்கேணி
ஐடியல் அக்கடமி (யாழ்,சண்டிலிப் பாய்) DCM - யாழ்நகர்
பட்டதாரிப் பிரிவு - யாழ்ப்பாணம்
ஆகிய நிறுவனங்களில் என்னிடம் கற்ற மாணவர்களை தமிழ் காங்கிரஸ் கட்சி சார்பில் முதன்மை வேட்பாளராக போட்டியிடும் என் குருநாதர் திரு.S.வரதராஜன் அவர்களின் வெற்றிக்காக அணிதிரளுமாறு அன்போடு வேண்டுகின்றேன்.
X 10
K.சுகாஸ்
(அரசியல் ஆசிரியர்)

ஸ்ரீலங்கா புத்தகசாலை,
இல. 234, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
வெளியாகி விற்பனையாகின்றன.
G.C.E (O/L) New Syllabus
PROSE & DRAMA
A/L New Syllabus :- Poetry
G.C.E (O/L) New Syllabus A Study Guide
(Great Expections)
G.C.E (O/L) Anita Desais The Village by the Sea
English Literature
G.C.E (O/L) Examination Past Paper
(C/565657)

## மரண அறிவித்தல்

### சின்னப்பு சின்னத்தம்பி



(ஓய்வூதியர், தொலைத்தொடர்பு திணைக்களம்)

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு சின்னத்தம்பி 12.03.2010 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும், சேனாதிராசா (ஓய்வூதியர், தொலைத் தொடர்பு திணைக்களம்), சத்தியசீலன் (விந்தன்-கொலன்ட்) ஆகி யோரின் அன்புத் தந்தையும், மங்களேஸ்வரி, பத்மாவதி (கொலன்ட்) ஆகியோரின் மாமனாரும், சிவாஜினி (ஆசிரியை, குட்டியன் G.T.M.S), பிரகாஷ், சிவலோஜினி (கால்நடை அலுவலகம், சாவகச்சேரி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2010) திங்கட்கிழமை முற்பகல் 11.30மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த ஆகியோரின் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சின்னக்குளம்,*
*கந்தரோடை,*
*சுன்னாகம்.*

தகவல்:
சி.சேனாதிராசா,
சி.சத்தியசீலன் (விந்தன்).
(சி/565717)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.03.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.